# செம்மணி

நிலம் 1 துகள் 14 வள்ளுவர் ஆண்டு 2051 17 - 23 ஐப்பசி 2020 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# உளுந்திற்கு விழுந்தது இடியேயல்ல!











இனிச் சீனாவுக்குத்தான்...







கொவிட்-19 தொற்றின் முதலாவது அலையடிப்பு காரணமாக ஏற்பட்ட பொருளாதாரச் சரிவிலிருந்து கரைசேர முன்னரேயே, அதனுடைய மூன்றாவது அலையென சந்தேகப் படக்கூடிய நடைமுறை நிலைவரம் மோசமானதாக மாறி வருகிறது. பிராண்டிக்ஸ் ஆடைத்தொழிற் சாலை பணியாளர்கள் வழியாக வெளித்தெரிய வந்த தொற்று நிலவரம், நாளாந்தம் ஏறுமுகத்தை காட்டிவரும் நிலையில், அது தொடர்பில் அரசு அடக்கி வாசிப்ப தாகவே தெரிகிறது.

கடந்த ஆவணி (ஓகஸ்டில்) நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறு வதற்கு முன்பாக, கொவிட்-19 ஐ கட்டுக்குள் கொண்டுவருவது தொடர்பிலும் அதனுடைய பரம்பல் தொடர்பிலும் கிரிக்கெட் நேர்முக வர்ணனை போன்ற அறிவிப்பை செய்து வந்திருந்தது அரசு. தற்போதோ, நாளாந்தம் மூன்று இலக்க எண்ணிக்கையில் தொற்றுக்குள்ளா னவர்கள் எண்ணிக்கை வெளியிடப்பட்டு வரு கையில், அரச தகவல்களோ, ரிஷாட் பதியு தீனை மையப்படுத்திய தாகவும் ரின்மீனுக்கு வரி விலக்கு செய்யப்பட்டதை அறிவிப்பதாக வுமே தோற்றமளிக்கின்றன. இந்தப் பின்னணியில், கொவிட்-19 முதலாவது அலையினால் ஏற்பட்ட வெள்ளம் வந்தபின்(?) அணைகட்டும் முயற்சியின் படிகளில் ஒன்றான இறக்குமதி தடை மற்றும் வரி அதிகரிப்பு என்பன உளுந்து உள்ளிட்ட பருப்பு வகை யறாக்கள் சிலவற்றிலும் கை வைத்திருக்கிறது.

(02ஆம் பக்கம் பார்க்க)

# செம்மண்

வாரப் பத்திரிகை


551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781


உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**




## உணவே அத்தியாவசியம்

கடந்துபோன வெள்ளிக்கிழமை உலக உணவு நாள். மனிதர்கள் உள்ளிட்ட விலங்குகள், பறவைகள் அனைத்துக்குமே உணவின்றி அமையாது உலகு. அடிப்படைத் தேவைகளிலேயே அத்தியாவசியத் தேவை உணவு. ஆனால், உலக மக்கள் தொகையில் பெரும்பாலானவர்கள் உணவு உற்பத்தி மீதும் விவசாயிகள் மீதும் அக்கறை செலுத்துகின்றோமா என்றால் இல்லை என்பதே சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட பதில்.

உயிர் வாழ்வதற்கான அத்தியாவசியப் பொருள் உணவு என்றாலும் அதனையும் ஏனைய வர்த்தகப் பொருள்களில் ஒன்றாகவே கணிக்கவும் கொள்முதல் செய்யவும் வீணடிக்கவும் பழகியிருக்கின்றோம் நாமெல்லோரும். அதன் விளைவாக விவசாயம் கொஞ்சம் கொஞ்சமாக அருகி, பெரும்பாலான உணவுப் பொருள்களுக்கும் இறக்குமதிகளையே நம்பியிருக்கும் நிலைக்கு நாடு வந்துள்ளது.

ஒவ்வொரு முறையும் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆட்சியாளர்கள், நாட்டின் உணவு உற்பத்தியைத் தன்னிறைவு நோக்கி நகர்த்துவோம் என்றுதான் கூறுகின்றார்கள். ஆனால், நடப்பதென்னவோ அதற்கு நேர்மாறானதாக உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்ல இறக்குமதிகள் கடந்த பல வருடங்களாகவே அதிகரித்துச் செல்கின்றது.

கொவிட்-19 தீநுண்மி (வைரஸ்) பெருந்தொற்றுக் காரணமாக முழு முடக்கத்தை உலகம் எதிர்கொண்டபோது மட்டுமே மனித குலத்தின் அத்தியாவசியத் தேவை குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது. கொரோனாவின் விளைவாக பல நாடுகளும் பட்டினியை, உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும் என்பது ஏற்கனவே உலக சுகாதார அமைப்பு மற்றும் உலக உணவு நிறுவனம் என்பவற்றால் எச்சரிக்கப் பட்டிருக்கின்றது.

இந்த விளைவுகளை இலங்கையில் ஏற்கனவே உணர முடிந்திருக்கிறது. பொருள்களின் விலைகள் சத்தம் சந்தடியற்று எகிறிப் பாய்ந்திருக்கின்றன. ஒருபுறம் வருமான வீழ்ச்சி மறுபுறம் விலைகளின் எழுச்சி என்கிற இந்த எதிரெதிர் போக்கு பட்டினியை மேலும் அதிகப்படுத்தும். ஒவ்வொருவருக்கும் போதியளவு உணவு கிடைப்பதை உறுதிப்படுத்தப்படவேண்டியது ஆட்சியாளர்களின் கடமை. ஆனால், அதைச் செய்யவேண்டியவர்களே பல சமயங்களில் பற்றாக்குறைகளின் தோற்றுவாய்களாக மாறுவதைத்தான் அனுபவத்தில் காண்கிறோம்.

அளவுக்கு மீறிய பூச்சிக் கொல்லிகளின் பயன்பாடு, அதிகரித்த உரப் பயன்பாடு என்பவற்றின் காரணமாக தானியங்களும் காய்கறிகளும் பழங்களும் நஞ்சாகிக் கிடக்கின்றன என்கிற குற்றச்சாட்டும் ஒருபுறத்தில் மேற்கிளம்ப, மறுபுறத்தில் இயற்கை விவசாயம் என்கிற நாமம் வர்த்தக மயப்படும் பரிதாபமும் அரங்கேறுகின்றது. வர்த்தக நோக்கத்தோடு உற்பத்தியாகும் ஒரு பொருள் உண்மையில் இயற்கையானதாக எப்படியிருக்க முடியும் என்பது நியாயமான கேள்வியே!

இந்த வருட உலக உணவு நாள் கோரிக்கையாக, அனைத்து மக்களும் உணவுத் தேவைக்காக எதிர்கொள்ளும் பிரச்சினையிலிருந்து அனைத்து மக்களும் மீண்டுவருவதற்கு ஒற்றுமையோடு உதவவேண்டும் என்பதுடன் எல்லோருக்கும் ஆரோக்கியமான உணவு கிடைப்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்குப் பகுதிகள் உட்பட நாடு முழுவதும் செய்கை பண்ணப்படாதுள்ள நிலங்களில் விவசாயத்தை ஊக்குவிக்கும்படி அதிபர் கோட்டாபய ராஜபக்ச விடுத்த அறிவுரையை அடுத்து இந்தத் தடவை பல இடங்களிலும் மானாவாரி நெற்செய்கைப் பரப்பு அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கொவிட்-19 பாதிப்புக்கு நடுவே மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தி இது. எனினும் இந்த ஊக்கத்தைக் கைவிட்டுவிடாது, தொடர்ந்தும் விவசாயத்தையும் உணவு உற்பத்தியையும் பேணிப் பாதுகாத்து தன்னிறைவை அடைவதற்கான வழியை நோக்கி நாம் அனைவரும் பயணிக்கவேண்டும். ஆட்சியாளர்களையும் அதற்காக உந்தித்தள்ள வேண்டும். தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம் என்று சினந்த கவிஞனின் பரம்பரையில் வந்தவர்களான நாம் இது விடயத்தில் இன்னும் அக்கறை செலுத்துவது அவசியமானது.

## உளுந்துக்கு விழுந்தது....


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


**ஏற்படத் தொடங்கியுள்ள 'மாற்றங்கள்'**

ஆமாம், இறக்குமதியை கட்டுப்படுத்தும் நோக்கில் உளுந்து, கௌபீ மற்றும் குரக்கன் போன்றவற்றுக்கு அதிகரிக்கப் பட்டுள்ள சிறப்பு வர்த்தக வரி, உணவுப் பொருட்களின் விலை யில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கௌபீ மற்றும் குரக்கன் மீதான பிடி, அவ்வளவு பெரிய தாக்கத்தினை செலுத்தாத போதிலும், உளுந்திற்கு விழுந்திருக்கும் அடி, இலங்கையின் உணவுச் சந்தையில் கணிசமான தாக்கத்தினை செலுத்தியிருக்கிறது.

உளுந்திற்கான உள்நாட்டு உற்பத்தி தன்னிறைவைத் தராத நிலையில், கடல் கடந்து வரும் வெளிநாட்டு உற்பத்தி கணிசமான அளவில் இலங்கை உளுந்து வாடிக்கையாளர் சந்தைத் தேவையினை நிறைவு செய்து வருகின்றது. எனினும், சடுதியாக நடைமுறைக்கு வந்த கட்டுப்பாடு, இறக்குமதியை கட்டுப்படுத்தியுள்ள நிலையில், உள்நாட்டில் விளையும் உளுந்தோ உடனடியாக ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக இல்லை.

இதன் விளைவாக, மேலே சொன்னது போன்று, (உளுந்தை உள்ளடக்கும்) உணவுப்பொருள்களில் 'மாற்றங்கள்' ஏற்படத் தொடங்கியிருக்கின்றன. மாற்றம் என்னும் வசனத்தினை நான் ஏன் இங்கு கவனமாகப் பயன்படுத்துகிறேன் என்றால், உணவுப்பொருள்களில் ஏற்படத் தொடங்கியுள்ள மாற்றம் வெறும் விலையேற்றத்துடன் மட்டுப் படுத்தப்படாமல், தோசையின் பரப்பளவைக் குறைத்துள்ளதுடன் வடையின் கனவளவிலும் கை வைக்கச் செய்திருக்கிறது. இதனால், தோசைக் குடும்பத்தைச் சேர்ந்த சாதாரண தோசையிலிருந்து மசாலாத் தோசை, நெய்த் தோசை, வெங்காயத்தோசை வரையான வகையறாக்கள் வடிவ உருவ மாற்றங்களுக்கு உள்ளாவதுடன் உளுந்தை பிரதான சேர்மானமாக கொண்டு செய்யப்படும் வடை வகைகளின் துளை அளவையும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

> உணவுப்பொருள்களில் 'மாற்றங்கள்' ஏற்படத் தொடங்கியிருக்கின்றன. மாற்றம் என்னும் வசனத்தினை நான் ஏன் இங்கு கவனமாக பயன்படுத்துகிறேன் என்றால், உணவுப்பொருள்களில் ஏற்படத் தொடங்கியுள்ள மாற்றம் வெறும் விலையேற்றத்துடன் மட்டுப் படுத்தப்படாமல், தோசையின் பரப்பளவைக் குறைத்துள்ளதுடன் வடையின் கனவளவிலும் கை வைக்கச் செய்திருக்கிறது.

இத்தகைய மாற்றங்கள் நிகழ்வதை, வாடிக்கையாளர்கள் பூதக்கண்ணாடி இல்லாமலேயே கண்டுணர்வதை கண்ட தேநீர்ச்சாலை உரிமையாளர்கள் எச்சரிக்கையடைந்து, உணவுப்பொருளின் உருவத்தில் கை வைக்காமல், உளுந்தின் உள்ளடக்கத்தினை குறைத்து வேறு மாவு வகைகளினால் பிரதியீடு செய்யவும் முயல்கிறார்கள். இதனால் உளுந்தினால் உணவிற்கு கொடுக்கக் கூடிய விசேட தன்மை குறைவடைவது உணவை சமைப் பவர்களினாலும் உணவை சுவைப் பவர்களினாலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

**பப்படமும் இல்லை!**

'உளுந்தின் விலையேற்றம், தோசை, இட்லி போன்ற காலை மற்றும் இரவு உணவு வகைகளையும் வடை போன்ற இடைநேர உணவு வகைகளையும் மட்டும் தானே பாதிக்கிறது, இது மதிய உணவில் செல்வாக்கு செலுத்தாது' என எண்ணி மதிய உணவிற்காக பந்தியமர்ந்தால், அங் கும் வழமையாக காணப்படும் பப்படம் காணாமல் போயிருப்பது அவதானிக்கப் பட்டிருக்கிறது.

ஆக மொத்தத்தில் இறக்குமதி கட்டுப்பாடும் அதனைத் தொடர்ந்த விலையேற்றமும் உளுந்தைக் கண்டால் அல்லது உளுந்தை உள்ளடக்கமாகக் கொண்ட உணவுப்பொருள்களை கண்டால் விழுந்தடித்துக்கொண்டு ஓடச் செய்திருக்கிறது. அல்லது அத்தகைய உணவுப்பொருள்களை காணாமல் போகச் செய்திருக்கிறது.

**உளுந்து தொடர்பில் எழுத்து மூல கோரிக்கை!**

உளுந்திற்கு நேர்ந்துள்ள கதியினால் தமிழர்கள் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டு யாழ்ப்பாண வணிகர் சங்கம், தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எழுத்து மூல கோரிக்கை ஒன்றை முன்வைத்ததாக அறியக்கிடைக்கின்றது. குறித்த கோரிக்கை தொடர்பில் பதிலளித்திருந்த மகிந்தர், அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவரின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

**புரதச் சுரங்கம்**

ஆங்கிலத்தில் பிளக் கிராம் (Black gram) என்று அறியப்படும் அவரைக் குடும்ப தாவர வகையைச் சேர்ந்த Vigna Mungo என்னும் தாவரவியல் பெயருடைய தாவரத்தின் விதை களே உளுந்து. அதிகளவு புரதச்சத்தினை கொண்டுள்ள (25g/100g) உளுந்து, காபோ வைதரேற்று, பொட்டாசியம் மற்றும் பொஸ்பரஸ் போன்றவற்றையும் கொண்டிருக்கிறது. உளுந்தானது இலங்கையில், கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், புத்தளம், குருநாகல், வவுனியா, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் செய்கை பண்ணப்பட்டாலும், பயிர்ச் செய்கை செய்யப்படும் அளவும் விளைச்சலும் வருடாந்தம் குறைவடைந்து வருவதாக விவசாயத் திணைக்களம் குறிப்பிடுகிறது.

1990களின் தொடக்கப் பகுதியில் இலங்கையில் அபரிமிதமான உளுந்து விளைச்சல் இருந்ததாகவும், இதனால் பல்வேறு நாடுகளுக்கும் இலங்கையிலிருந்து உளுந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் விவசாயத் திணைக்களத்தின் பொருளியல் பிரிவு தெரிவிக்கிறது.

தற்போதைய நிலையில், அதற்கு மாறான நிலை காணப்படுவதுடன், இறக்குமதி செய்யப்படும் உளுந்து, 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விசேட வரிக்கும் உள்ளாகிறது. கடந்த செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதியிலிருந்து அடுத்து வரும் 6 மாதங்களுக்கு செல்லு படியாகும் வகையில் நீட்டிக்கப்பட்டிருக்கும் அந்த வரி, ஒரு கிலோ கிராம் உளுந்திற்கு 300 ரூபாய்களாகும்.

தமிழர்களின் உணவுகளில் ஆதிக்கம் செலுத்தும் உளுந்திற்கு கொவிட்-19 ஐ தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் நிலை, இடியே அல்ல. உளுந்து உற்பத்தியில் தன்னிறைவு நோக்கி நாட்டை உந்தி நகர்த்தும் பொருட்டு உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு உற்சாகமளிப்பதற்கான முதல் படியே அது!

- ஸுடோ ஸ்வாமி

# ஏன் எதற்கு எப்படி இனிமேல்...?

கடந்த காலங்களிலும் பல்கலைக் கழகம் இந்த மாதிரி இறுக்கமான நடைமுறைகளை எடுத்திருந்தால், குறிப்பாகத் தண்டனை வழங்கப்பட்டவர்களுக்குப் பின் வந்த காலங்களில் பாவம் பார்க்காமல் இருந்திருந்தால் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழாமல் பெருமளவில் குறைத்திருக்கலாம்.



● அன்னலிங்கம் ஆதிரையன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள், புதிதாகப் பதவியேற்றிருக்கும் துணைவேந்தருக்குச் சவாலான விடயங்களாகி இருக்கின்றன. புதிய துணைவேந்தர் பதவியேற்ற கையோடு பல்கலைக்கழகத்தினுள் பெரும் வெளிப்படையான மாற்றங்கள் பல ஏற்றபட்டுள்ளன.

இதுவரை காலமும் பல்கலைக் கழகத்தினுள் இடம்பெறுகின்ற பகிடிவதையாகட்டும், பாலியல் குற்றச்சாட்டுகள் ஆகட்டும் அவை குறித்து வெளிப்படையாகப் பேசுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தயங்கி வந்தமை வெளிப்படை. உதாரணமாக கிளிநொச்சி தொழில் நுட்பபீடத்தில் கடந்த வருடம் இடம்பெற்றதாகக் கூறப்படும் தொலைபேசி வழியான இம்சை வதை குறித்த செய்திகள் ஊடகங்களுக்கூடாக வெளிவந்தபோது அதைப் பற்றிய உத்தியோகபூர்வ தகவல்கள் பல்கலைக் கழகத்தால் வெளிப்படுத்தப்படவில்லை.

### வெளிப்படைத் தன்மை

அந்த முறைப்பாடுகள் குறித்த வெளிப்படைத் தன்மைக்கு அப்பால் அதன் விசாரணைகள், நடவடிக்கைகள் குறித்துப் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அதை மீறி ஊடகங்கள் உண்மையை வெளியே கொண்டு வந்தபோது, அதன் உண்மைத் தன்மை குறித்து சமூகத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டியதற்குப் பதிலாக - ஊடகங்களுக்கு எப்படி வந்தது, யார் அந்தத் தகவல்களைக் கொடுத்தார்கள் என்று மூலத்தைத் தேடுவதிலும், சந்தேகப் பார்வைக்குள் அகப்பட்டுக் கொண்டவர்கள் இலக்கு வைக்கப்படும் சூழலும் காணப்பட்டிருக்கின்றன.

புதிய துணைவேந்தர் பதவிக்கு வந்த உடனேயே, பகிடி வதையில் ஈடுபடும் மாணவர்கள் மீதான நடவடிக்கைகள் - பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பொறிமுறைகள் பற்றி பகிரங்கமாக வெளிப்படுத்தியதோடு, தங்களது அறிவித்தலுக்கு அமைய அதிரடியாக நடவடிக்கைகளில் இறங்கியிருந்தார். சமூகத்தின் பார்வையில் பல்கலைக் கழகம் மீதிருந்த ஒரு தவறான கண்ணோட்டம் போக்கும் முனைப்பு அதில் பட்டவர்த்தமாகத் தெரிந்தது. பல்கலைக்கழகத்துக்குப் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோருக்குப் பல்கலைக்கழகம் மீது ஒரு வித நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

### மாணவர் மோதல்

கடந்த 08ஆம் திகதி, வியாழக் கிழமை இரவு பல்கலைக்கழத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து, பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்த அதிரடியான தீர்மானங்களும், கடந்த மாதம் 03ஆம் திகதி, பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பில், அறிவிக்கப்பட்ட பொறிமுறைகளைப் பின்பற்றி விசாரணைகளை நடத்தி, குற்றத்தின் தன்மை அடிப்படையில் தண்டனைகள் அறிவிக்கப்பட்டிருப்பதும், பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பூர்வாங்க விசாரணைகள், குற்றப்பத்திரிகையின் அடிப்படையிலான முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் யாழ். பல்கலைக்கழகத்தின் பெயரைக் காப்பாற்றும் முயற்சிகள்தாம்.

கடந்த காலங்களிலும் பல்கலைக் கழகம் இந்த மாதிரி இறுக்கமான நடைமுறைகளை எடுத்திருந்தால், குறிப்பாகத் தண்டனை வழங்கப்பட்டவர்களுக்குப் பின் வந்த காலங்களில் பாவம் பார்க்காமல் இருந்திருந்தால் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழாமல் பெருமளவில் குறைத்திருக்கலாம். ஏனெனில் இப்போது இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் என்னவோ மாணவர்கள்தாம். அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருக்கின்றது.

### சிதையும் கனவு

ஒவ்வொரு மாணவனும் தன் வாழ்வில் மிகப்பெரிய தடை தாண்டலாக, உயர்தரப் பரீட்சையில் வெற்றியடைந்து கனவுகளுடனேயே பல்கலைக்கழகத்துக்கு வருகிறான். அத்தகைய கனவுகளுடன் வருகின்றவர்கள், மற்றவர்களின் வாழ்க்கையுடன் விளையாடுவது மட்டுமல்லாமல், தங்களுடைய வாழ்க்கையையும் தொலைத்து நிற்பதை எந்தவொரு பெற்றோரும் சகித்துக்கொள்ளமாட்டார்கள்.

தண்டனை பெற்றிருக்கும் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைய முடியாமல் அதன் வெளியே நடைபாதைகளிலும் வாயில் பகுதியிலும் காத்துக்கிடக்கின்றார்கள். ஒரு உணர்ச்சி வேகத்தில் அவர்கள் செய்த செயல்கள் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கி நடு வீதியில் அவர்களை நிறுத்தியிருக்கின்றதைப் பார்க்க பரிதாபமாக இருக்கின்றது.

புத்திசாலித்தனத்தை (ஐகியூ) கற்றுக்கொடுக்கும் பல்கலைக்கழகங்கள் உணர்வு மேலாண்மையை (ஈகியூ) ஏன் கற்றுக்கொடுக்கத் தவறுகின்றன என்கிற கேள்வியையும் இது எழுப்புகின்றது. எதிர்வரும் காலத்தில் முதல் வருடத்திலேயே, பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்ததுமே அனைத்து மாணவர்களுக்கும் உணர்வு மேலாண்மை எனப்படும் எமோஷனல் குவாலிட்டியைக் கட்டாய பாடமாக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

தண்டனை பெற்றிருக்கும் மாணவர்கள் சிலரின் தற்போதைய பரிதாப நிலைக்கு அவர்களின் உணர்வு மேலாண்மைத் தவறு தவிர, உள் அரசியலும்கூடக் காரணம் என்றும் சொல்லப்படுகின்றமை மீதும் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

### அரசியலும் விளையாடுகிறது

உண்மையில், 2ஆம், 3ஆம் வருட மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறை - பல்கலைக்கழகத்தினுள் காணப்படும் அதிகார அரசியலுக்காக ஒரு தரப்பார் பயன்படுத்திக் கொண்டதுதான், இன்று மாணவர்கள் பலர் வீட்டுக்கும் போக முடியாமல், வளாகத்தினுள் வரவும் முடியாமல் வீதிகளில் தூங்கக் காரணமாகியிருக்கிறது என்கின்றன தமது பெயர் விவரங்களை வெளியிடக் கூடாது என்கிற நிபந்தனையுடன் எமக்குத் தகவல் தந்த தரப்புக்கள் சில.

அன்றைய சம்பவங்களின் பின்னணியிலும், சம்பவத்தின் பின்னான நடவடிக்கைகளின் போதும் பல்கலைக்கழகத்தின் சீரான - உறுதியான இயக்கத்தை விரும்பாத சில சக்திகள் செயற்பட்டமையை மாணவர்கள் பிந்தியே உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று அந்தத் தரப்புக்கள் கூறுகின்றன.

அன்றைய சம்பவத்தின்போது, தங்களால் - மாணவர்களால் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் உண்மையில்லை என்பதையும், உணர்ச்சி மேலீட்டினாலும், ஒரு சில தூண்டுதல்களினாலுமே தாங்கள் அவ்வாறு செயற்பட்டனர் என்றும் மாணவர்களில் சிலர் ‘சரணாகதி’ அடைந்திருக்கிறார்கள். ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக, மற்றவர்களின் தூண்டுதலின் பேரில் முன்வைக்கப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டையும் வாபஸ் பெற்றிருக்கிறார்கள்.

ஆனாலும் அது காலம் பிந்திய ஞானம். விசாரணைகள் முடியும் வரை அவர்களால் எதுவுமே செய்ய முடியாத நிலை தோன்றியிருக்கிறது. வீதியே எங்கள் விதி என்ற நிலைக்கு வந்திருக்கும் 21 மாணவர்களின் கதை மற்ற மாணவர்களுக்கு மிகச் சிறந்தொரு பாடமாக இனிமேலாவது இருக்கவேண்டும்.

### எதற்காகச் செய்கிறார்கள்?

ஏற்கனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உறுதியற்ற நிலைமை இருப்பதனால், அதனை கட்டுறுதியாக்கும் வகையில் நியமிக்கப்பட்ட ‘தகுதி வாய்ந்த அதிகாரி’ காலத்தில்கூட அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது பல்கலைக்கழகச் சமூகத்தின் பெருங் குறையாக உள்ளது. துணைவேந்தர் போன்றல்லாது தகுதி வாய்ந்த அதிகாரி என்படுபவர் பெருமளவு அதிகாரங்களையும் சுயாதீனச் செயற்பாடுக்கான வாய்ப்பையும் கொண்டிருந்தார். ஆனாலும் அத்தகைய அதிகாரத்தின் பயனை பல்கலைக்கழகம் அனுபவிக்க முடியாமலேயே போய்விட்டது என்பது அந்தக் கவலை.

இந்த நிலையில், பல்கலைக்கழகத்திற்குள் உறுதியற்ற நிலைலைய உருவாக்க முயற்சிப்பதன் மூலம் ஒரு தரப்பு என்ன இலாபத்தைக் கண்டுவிடப்போகின்றது என்கிற கேள்வியை முன்வைக்கின்றன சில தரப்புக்கள்.

எது எப்படியிருந்தாலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது தமிழர்களின் அடையாளம். தனிப்பெரும் புலமைச் சொத்து. அதன் மாட்சிமை குன்றாமல் காத்திடுவது அனைவரதும் தலையாய கடன்.



# புற்றுநோய் எதிர் பெருந்தொற்று

கொரோனாப் பெருந்தொற்றால் பாதிப்புகள் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கையில், அந்தத் தொற்றிலிருந்து மீண்டாலும்கூட அவ்வாறானவர்களைப் பல்வேறு நோய்ப் பாதிப்புகள் சூழ்ந்து கொள்வது தெரியவந்த வண்ணமுள்ளது. பெருந்தொற்றின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டபின் பலரது உடல்நிலைகளும் நோய்வாய்ப்பட்டு - நோய் எதிர்ப்பு ஆற்றலை இழந்துள்ளன என்று ஆய்வுகள் பல முன்மொழிகின்றன. இந்த நிலையில்தான் மருத்துவ வட்டாரங்களில் அதிகம் சிலாகிக்கப்படுகின்ற ஒரு விடயமாக இது இருக்கிறது. அதாவது புற்றுநோய்க்குள்ளானவர்களைக் கொரோனாத் தொற்றுப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது என்பது கண்டறியப்பட்டுள்ளது. புற்றுநோயாளர்களை உள்ளடக்கிய அமெரிக்க ஆய்வொன்றின் தகவல்களைக் கட்டுரையாக்கியுள்ளது பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ்.

**ஆய்வுக்குட்பட்ட புற்றுநோயாளர்கள்**

புற்றுநோயாளர்கள் பலர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருப்பதும், அவர்கள் கடுமையான நோய் நிலமையை எட்டியிருப்பதும் ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. எனவே புற்றுநோய்களுக்கான சிகிச்சைகளைத் தாமதப்படுத்தப்படக் கூடாது என்று அமெரிக்கத் தேசிய புற்றுநோய் நிறுவனத்தின் ஜர்னலில் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் குறித்த ஆராய்ச்சியை முன்னெடுத்த குழு அறிவுறுத்தலை வழங்கியுள்ளது. இந்த ஆய்வில் அமெரிக்காவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 23ஆயிரம் நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டனர். ஏறக்குறைய ஆயிரத்து 800பேர் (7.8சதவிகிதம்) நேர்மறையான முடிவுகளுக்குரியவர்களாக இருந்தனர். இவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படுவதற்கான பாதிப்பு எதுவும் இல்லை. குருதிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் (11சதவிகிதம் பேர்) கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகமாக இருந்தது. கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட - எதிர்மறையான முடிவுகளைத் தந்த நோயாளிகளுக்கு அதி தீவிர சிகிச்சை தேவையாக இருப்பதும், அவர்களின் சுவாசத்திற்கு அதிக உதவி தேவைப்படுவதும்கூட இந்த ஆய்வு முடிவுகளில் இருந்து வெளிப்பட்டது.

**நோய்களுக்கு ஏற்ப பாதிப்பு**


ஆபிரிக்க - அமெரிக்க, ஹிஸ்பானிக் புற்றுநோயாளர்களுக்கு வெள்ளை புற்றுநோய் (தோற்புற்று நோய்) நோயாளிகளை விடக் கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகமாக உள்ளது. இவர்களே மருத்துவமனையில் அதிகளவில் சிகிச்சைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் புற்றுநோயாளர்கள் பலர் கொரோனா வைரஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை ஆதலால், புற்றுநோய் நோயாளர்களிடையே முன்னெடுக்கப்பட்ட இந்த ஆய்வில் அவர்களிடையே உள்ள கொரோனா வைரஸின் தாக்கத்தைக் கண்டறிந்த ஆய்வு முடிவு நிச்சயமற்றதாக உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**பொதுவான குளிர் ஆன்டிபாடிகள் பாதுகாக்காது**

மனிதர்களின் நோயெதிர்ப்பு மண்டலத்தால் பொதுவான சளிக்குக் காரணமான கொரோனா வைரஸ்களை அடையாளம் கண்டு போராடும் ஆன்டிபாடிகளை உருவாக்க முடியும். ஆனால் அந்த ஆன்டிபாடிகள் கொவிட்-19 ஐ ஏற்படுத்தும் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாக்க வாய்ப்பில்லை என்பதைப் புதிய ஆராய்ச்சி காட்டுகிறது. நியூயோர்க் நகரில் உள்ள ராக்பெல்லர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கடந்த சில மாதங்களாகப் பொதுவான சளி நோயால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தொற்றுநோய்க்கு முன்னர் சேகரிக்கப்பட்ட மற்றும் சேமிக்கப்பட்ட குருதி மாதிரிகளை வைத்து ஆய்வு செய்தனர். அவற்றில் ஒவ்வொரு மாதிரியிலும் குறைந்தபட்சம் ஒரு பொதுவான குளிர் கொரோனா வைரஸையாவது அடையாளம் காணவும் நடுநிலையாக்கவும் அல்லது முடக்கவும் கூடிய ஆன்டிபாடிகள் இருப்பதைக் கண்டறிந்தனர். மேலும் பெரும்பாலான இது போன்ற வைரஸ்களை அடையாளம் காண முடியும். ஆனால் எந்த மாதிரியிலும் ஆன்டிபாடிகள் இல்லை, அவை புதிய கொரோனா வைரஸைப் போல மாற்றியமைக்கப்பட்ட ஒரு வைரஸை அடையாளம் கண்டு முடக்கக்கூடும். இது ஆரோக்கியமான செல்களைப் பாதிக்க உதவும் ஸ்பைக் புரதத்தைச் சுமந்து செல்கிறது. கொரோனா வைரஸைக் குறிவைக்கக்கூடிய பொதுவான குளிர் ஆன்டிபாடிகள் கொண்ட அரிய நபர்கள் இருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

**நரம்பியல் விளைவுகள் எதிர்ப்பைப் பிரதிபலிப்பவை**

தொற்றாளர்களிடையே பரவலாக நரம்பியல் பிரச்சினைகள் இருந்தபோதிலும் புதிய கொரோனா வைரஸ் மூளையில் பெரிய நேரடி விளைவுகளை ஏற்படுத்தாது. கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவுகள், மருத்துவ இல்லங்கள், வழக்கமான மருத்துவமனைகள், வீட்டில் இறந்த 43 வரையான நோயாளிகளின் மூளையை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர். அவர்களின் மூளைத் தண்டுகளில் கொரோனா வைரஸ் புரதங்களைக் கண்டறிந்தனர். ஆஸ்ட்ரோசைட்டுகள் எனப்படும் மூளைச் செல்கள் அதிகரித்திருப்பதையும் அவர்கள் கண்டனர், இது அருகிலுள்ள பிற உயிரணுக்களின் அழிவைக் குறிக்கிறது. சிக்கலான நோயே இந்த கண்டுபிடிப்பிற்கு பங்களிக்கக்கூடும் என்பதால், கொவிட் 19 தான் இதற்குக் நேரடிக் காரணம் என்பது தெளிவாக இல்லை. வைரஸின் இருப்பு மூளைத் திசு மாற்றங்களின் தீவிரத்தோடு தொடர்புபடுத்தப்படவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இது மூளை அனைத்தும் 'நியூரோ இம்யூன் ஆக்டிவேஷன்' அறிகுறிகளைக் காட்டின, அதாவது மூளையில் தொற்றுநோய்க்கு பதிலளிக்க நோயெதிர்ப்பு அமைப்பு செயல்டுத்தப்பட்டது. நோயாளிகளின் நரம்பியல் அறிகுறிகள் வைரஸிலிருந்து மத்திய நரம்பு மண்டல சேதத்தை நேரடியாகக் காட்டிலும், நோய் எதிர்ப்பு சக்தியின் காரணமாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



**2ஆவது முறையாகவும் தொற்று!**

அமெரிக்காவில் 25 வயது இளைஞர் ஒருவருக்கு இரண்டாவது முறையாக கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நெவாடா மாகாணத்தைச் சேர்ந்த அந்த இளைஞருக்குக் கொரோனாவால் எளிதில் பாதிக்கப்படக் கூடிய வகையிலான எவ்வித உடல்நலப் பிரச்சினைகளோ அல்லது நோய் எதிர்ப்பாற்றல் குறைபாடோ இல்லை. இரண்டாவது முறையாக ஏற்பட்ட அந்தத் தொற்று முதல் முறை ஏற்பட்ட தொற்றை விட அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். முதலாவது தொற்றிலும் பார்க்க, நுரையீரலால் உடலுக்குப் போதுமான ஒட்சிசனைச் செலுத்த முடியாது அந்த நபரின் உடல் சிரமப்பட்டது. அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒரு முறை கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மீண்டும் அந்தத் தொற்று ஏற்படுவது என்பது அரிதானதாகவே இருந்து வருகிறது. எனினும், இந்த இளைஞர் இரண்டாவது முறையும் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டு விட்டார். இந்த நிலையில், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவருக்கு எந்தளவுக்கு நோயெதிர்ப்பு ஆற்றல் உருவாகலாம் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.



# மட்டக்களப்பில் தமிழர் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும்

■ சந்திப்பு அகில்

கிழக்கைப் பொறுத்தவரை தமிழர்களின் இன்றைய தேவை தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படுவேண்டும் என்பதுதான். மட்டக்களப்பில் தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாப்படவேண்டும். அதற்காகவே எமது கட்சி வடக்கில் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியில் இணைந்து செயற்பட்டாலும் கிழக்கில் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுகின்றோம் என்கிறார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈபிஆர்எல்எவ்) பத்மநாபா மன்ற மூத்த உறுப்பினரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரெத்தினம்.

வரவிருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவும் தமிழர் ஒருவரை முதலமைச்சராகக் கொண்டு வரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவும் தயாராகவே உள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் செம்மணி பத்திரிகைக்காக அவரைச் சந்தித்தேன்.

**கே:** மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் கள நிலைமைகள் என்ன?

**ப:** மக்களிடம் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கும் அபிவிருத்திக்கும் வித்திடப்பட்டுள்ளது. வாக்களிப்பு வீதம் அதிகரித்திருக்கிறது. அதன் மூலம் 4 தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் மக்கள் தேர்தல்களை வெறுத்தார்கள். இப்போது அந்த நிலை மாறியிருக்கிறது.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் அபிவிருத்தியில் நாட்டம் கொள்ளமுடியாத சூழல் இருந்தது. ஆனால், தற்போது தமிழர்கள் தமது தேவைகளை, அலுவல்களை, உரிமைகளைத் கேட்டுப் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

மக்களின் இந்த விருப்பத்தைப் புரிந்துகொண்டு அதனை நிறைவேற்றக்கூடிய வகையில் தமிழ்த் தலைமைகள் குறிப்பாக தேசியம் பேசும் தலைமைகள் தமது செயற்பாடுகளைக் கொள்கைகளை எதிர்காலத்தில் மாற்றிக்கொள்ளவேண்டும். தமிழ்த் தலைமைகள் இந்த விடயத்தில் சுயவிமர்சனம் செய்துகொண்டு அதிகார அரசியலை நடைமுறைப்படுத்தவும் உரிமைகளைப் பெறவும் எமது வழி வகை செய்யவேண்டும்.

**கே:** இன்றைய கோட்டாபய அரசு தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் வேணவாக்களைப் பாதுகாக்கும் என்று நினைக்கிறீர்களா?

**ப:** இந்த ஆட்சியாளர்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறோம் என்றுகூறி தேர்தலில் போட்டியிடவில்லை. மாறாக இந்த மக்களுக்கு எதிராக இனவாதம் பேசியே மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கில் இந்த அரசு சார்பில் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் இந்த விடயம் நன்கு தெரியும். தமிழ், முஸ்லிம்களுக்கு எதிரான ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க மக்களிடமிருந்து இந்தப் பிரதிநிதிகள் தூக்கி எறியப்படுவார்கள்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான பல செயற்பாடுகளை இந்த ஆட்சி ஏற்கனவே முன்னெடுத்துள்ளது. 20ஆவது திருத்தம், கிழக்கில் தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்கான அதிபர் செயலணி போன்றன சில உதாரணங்கள். இதனால் அரச மீது மக்களுக்கு வெறுப்பு அதிகரித்துவரும் நிலையில் அரசு சார்பான பிரதிநிதிகள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதே இப்போதுள்ள கேள்வி?

**கே:** மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில்?

**ப:** கடந்த நல்லாட்சி அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தி முடித்திருந்தால் இன்று மாகாண சபை முறைக்கு ஏற்பட்ட நிலை வந்திருக்காது. ஆனால் இந்த ஆட்சியாளர்களும் இன்னும் தாமதிக்காமல் 9 மாகாணங்களுக்கும் தேர்தலை நடத்த வேண்டும்.

**கே:** கிழக்கு மாகாணத்தில் மூன்று தடவைகள் மாகாண சபைக்குத் தெரிவான நீங்கள் இம்முறையும் போட்டியிடுவீர்களா?

**ப:** நிச்சயமாகப் போட்டியிடுவேன். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவே.

**கே:** 20ஆவது திருத்தம் தொடர்பில்?

**ப:** மக்களாட்சியின் தன்மையை இல்லாமல் செய்யும் சில சரத்துக்களை கொண்டுள்ள இந்தத் திருத்தம். குடும்ப ஆட்சிக்கும் ஊழலுக்குமே வழிவகுக்கும். அதிபருக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுவது சர்வாதிகாரத்திற்கே வழிவகுக்கும்.

19ஆவது திருத்தம் இருந்தபோதே தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்ந்தன. படைமயமாக்கல் நடந்தது. அப்படியிருக்கும்போது 20ஆவது திருத்தம் வந்தால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அது இன்னும் பாதிப்பையே ஏற்படுத்தும். எனவே வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் இதற்கு எதிராகவே வாக்களிக்க வேண்டும்.

**கே:** வடக்கில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்னாள் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனுடன் இணைந்து செயற்படும்போது இங்கு நீங்கள் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுகிறீர்களே?

**ப:** உண்மைதான் வடக்கில் அரசியல் நிலமைவேறு, கிழக்கில் நிலமை வேறு. தலைமைப்பீடத்திற்கு நிலமையைத் தெளிவுபடுத்தியுள்ளேன். கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே மிக முக்கியம். இதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுகின்றோம்.

எதிர்காலத்திலும் குறிப்பாக வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலிலும் தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவும் கிழக்கில் தமிழர் ஒருவரை முதலமைச்சராகக் கொண்டுவரவும் கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்பட நான் தயாராகவே உள்ளேன்.

**கே:** மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் பற்றி?

**ப:** கெவுளியாமடு, புனாணை, மாதவனைமயிலத்தமடு பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பகுதிகளை வேறு சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கவும் கடந்த 15 வருடங்களாகவே முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனை அனுமதிக்க முடியாது. இதற்கெதிராகத் தொடர்ந்து குரல்கொடுத்துவரும் நாம் இந்தப் பிரச்சினையை நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளோம் - என்றார்.

1981ஆம் ஆண்டு ஈழ மாணவர் பொது மன்றத்தில் இணைந்துகொண்ட இரா. துரைரெத்தினம், 1989இல் இணைந்த வடகிழக்கு மாகாண சபைக்கு தமிழ் மக்களின் பேராதரவுடன் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதுடன் அடுத்து வந்த 2008, 2012 இரு மாகாண சபைத் தேர்தல்களிலும் கூடிய விருப்பு வாக்குகளுடன் உறுப்பினராகத் தெரிவாகி மூன்று தடவைகள் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்து மக்கள் சேவையாற்றி வந்துள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் விடயங்களிலும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அக்கறைகொண்டு அவ்வப்போது குரல்கொடுத்து வரும் இவர், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களின் பேரன்பையும் ஆதரவையும் பெற்றவர்.

ரெத்தினம் என்றும் துரை என்றும் செல்லமாக அழைக்கப்பட்டுவரும் அவரது அரசியல் பயணம் சுயநலம் சார்ந்ததாக துளியும் அமையாது. மக்கள் நலன் சார்ந்ததாகவே அமைவது தனிச்சிறப்பிற்குரியது. ■

# டிரங்குப் பெட்டி!



"வீடுகளுக்கு அலுமாரி வராத காலத்தில் கோலோச்சிய இந்த டிரங்குப் பெட்டி இன்று வீடுகளிருந்து வெளியேறிவிட்டது. எல்லாம் கால மாற்றம் தான்."

● மணி ஸ்ரீகாந்தன்

டிரங்குப் பெட்டி! இந்தப் பெயரை இன்று எத்தனை பேர் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை.

அந்தக் காலத்தில் நம்வர்களின் பீரோ, அலுமாரி எல்லாம் இந்த டிரங்குப் பெட்டிதான். எல்லோர் வீடுகளிலும் பரண் மேல் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்த டிரங்குப் பெட்டி விட்டுச்சென்ற நினைவுகள் பசுமையாக இன்று எம் அனைவர் மனதிலும் கறுப்பு, வெள்ளைப் படமாக இருக்கும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

குறிப்பாக இந்தப் பெட்டியைத் திறந்தால், ஆடைகள், நைந்து போன கடிதங்கள், டயறி, மற்றும் ஆவணங்கள். பொட்டலமாகத் துணியில் கட்டப்பட்டிருக்கும் தங்க ஆபரணங்கள் என்று பல விதமான பொருட்களின் காப்பகப் பெட்கமாக இருந்தது இந்த டிரங்குப் பெட்டிதான்.

வீடுகளுக்கு அலுமாரி வராத காலத்தில் கோலோச்சிய இந்த டிரங்குப் பெட்டி இன்று வீடுகளிருந்து வெளியேறிவிட்டது.

எல்லாம் கால மாற்றம் தான்.

அந்த நாள்களில் வீடுகளின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப டிரங்குப் பெட்டிகள் கலர் கலராக வண்ணம் பூசப்பட்டு அடுக்கப்பட்டிருக்கும்.

பெட்டியின் உரிமையாளர் அதற்கு ஒரு பூட்டைப் போட்டு தமது உடமைகளை அதில் வைத்திருப்பார். வண்ணங்களின் அடிப்படையில் அவைகள் அடையாளம் காணப்படும்.

சாதாரண ஏழைகளின் வீடுகளில் ஒரு டிரங்குப் பெட்டிதான் இருக்கும். அந்தக் குடும்ப உறுப்பினர்களின் உடமைகள் அனைத்தையும் உள்வாங்க முடியாமல் விழிபிதுங்கியபடி டிரங்குப் பெட்டிகள் காட்சியளிக்கும்.

அந்தக் காலத்தில் எமது பயணத்தின் தோழனாக நம்மோடு பயணிப்பது இந்த டிரங்குப் பெட்டிகள்தான். இந்திய வம்சாவளித் தமிழர்கள் புலம் பெயர்ந்து இலங்கைக்கு வரும் போதும் இந்த டிரங்குப் பெட்டிகளோடுதான் வந்திருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் இலங்கையில் எல்லா நகரங்களிலும் உள்ள கடைகளில் இந்த டிரங்குப் பெட்டிகள் விற்பனைக்கு இருந்திருக்கின்றன. இதேவேளை தலைநகர் கொழும்புவில் உள்ள சென்றல் வீதி மட்டுமே டிரங்குப் பெட்டிகள் மொத்த சில்லரை வியாபாரம் நடைபெறும் இடமாக இருந்திருக்கிறது.

அந்த வீதியில் நெடுகிலும் டிரங்குப் பெட்டிகள் விதவிதமான அளவுகளில் வண்ணமயமாக அடுக்கப்பட்டிருக்கும். ஆனால் இன்று அந்த வீதிகளில் டிரங்குப் பெட்டிகளைப் பார்க்க முடியவில்லை. டிரங்குப் பெட்டிகளுக்கு என்ன நடந்தது என்று அந்த தெருவில் வசிக்கும் கோவை கணேஷிடம் கேட்டோம்,

"நம்மவர்கள் எல்லோரும் இன்று பீரோ, அலுமாரிக்கு மாறிவிட்டதால் டிரங்குப் பெட்டிகள் மறைந்துவிட்டன.

பயணங்களுக்குக் கொண்டு செல்லவும் துணிகளிலான மொடர்ன் பைகள் வந்துவிட்டதால் டிரங்குப் பெட்டிகளை மக்கள் புறக்கணித்துவிட்டார்கள். நான் அறிந்து இந்தத் தெருவில் ஓரிரண்டு கடைகளில் மட்டும் சிறிய அளவிலான டிரங்குப் பெட்டிகள் விற்பனைக்கு இருந்தன. ஆனால் அவையும் உறுதியான தகரத் தில் செய்யப்பட்டவையல்ல. மிகவும் மெலிதான தகரத்தில் தயாரிக்கப்பட்டவை.

இராணுவத்தில் பணியாற்றுபவர்கள் ஒரு சிலர் மட்டுமே அந்தப் பெட்டிகளை வாங்கிச் செல்வதாகக் கடைக்காரர்கள் கூறுகிறார்கள்.

வீடுகளுக்கு யாரும் டிரங்குப் பெட்டிகளை வாங்கிச் செல்வதில்லை.

அந்தக் காலத்தில் நாங்கள் குடும்பத்துடன் உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லும் போது இந்த டிரங்குப் பெட்டிகளில்தான் இனிப்பு உள்ளிட்ட எல்லாப் பொருட்களையும் வைத்து எடுத்துச் செல்வோம்."

என்று சொல்லும் கோவை கணேஷ் இன்னொரு விடயத்தையும் ஞாபகப்படுத்தினார்.

"அந்தக் காலத்தில் நான் ராமானுஜம் கப்பலில் வியாபார நோக்கில் தமிழகத்துக்குச் செல்வேன் அப்போது அந்தக் கப்பலில் தமிழகத்துக்கு தாயகம் திரும்பும் நம் உறவுகள் எல்லோரும் ஆளுக்கொரு டிரங்குப் பெட்டி வைத்திருப்பார்கள்.

அந்தப் பெட்டியில் அவர்களின் பெயர் வெள்ளை நிற பெயிண்டால் எழுதப்பட்டிருக்கும். உதாரணத்துக்கு ராசையா ஆதிமூலம், மண்டபம் முகாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

தமிழர்களின் வாழ்வியலோடு நீண்ட காலம் பயணம் செய்தது இந்த டிரங்குப் பெட்டிகளாகத்தான் இருக்கும். எங்கள் வீட்டிலும் ஒரு பழங்கால டிரங்குப் பெட்டி இருக்கிறது. அந்தப் பெட்டியை ராமநாதபுரம், சாயல்குடியைச் சேர்ந்த என் அப்பா முத்துக்கருப்பன் பயன்படுத்தினார். அவரின் மறைவுக்குப் பிறகு என் அம்மா அந்தப் பெட் டியை பாதுகாத்து வந்தாரு. இப்போ நான் அதனை வைத்திருக்கிறேன்.



சில வீடுகளில் இன்று கேட்பாரில்லாமல் குப்பைகளில் வீசப்பட்டு கிடக்கும் ஒவ்வொரு டிரங்குப் பெட்டிகளும் எத்தனையோ பசுமையான நினைவுகளை சுமந்துக் கொண்டு மௌனமாக கிடக்கின்றன என்பதுதான் உண்மை!" என்று டிரங்குப் பெட்டிகளின் நினைவுகளில் மூழ்கிப் போனார் கோவை கணேஷ்.

டிரங்குப் பெட்டிகளை பெரும்பாலும் வளையல், சீப்பு, சோப்பு விற்பனை செய்வோர் சுமந்து வருவார்கள். அந்த டிரங்குப் பெட்டிகள் பார்க்க ரொம்ப அழகாக வண்ணம் தீட்டப்பட்டு இருக்கும். பெரும்பாலான பெட்டிகளில் ஒட்டப்பட்டி ருக்கும் படங்களில் எம்.ஜி.ஆர் சிரித்துக்கொண்டிருப்பார்.

நம் மக்களிடையே டிரங்குப் பெட்டிகளின் பாவனை அமோகமாக இருந்தக் காலத்தில் அதனை சார்ந்து பல தொழில்களும் இயங்கி வந்துள்ளன. அதில் ஒன்றுதான் டிரங்குப் பெட்டிகளுக்கு வர்ணம் தீட்டும் தொழில். மலையக தோட்டப் பகுதிகளுக்கு அந்தக் காலத்தில் இந்த டிரங்குப் பெட்டி பெயிண்டர்கள் பவனி வருவார்களாம். அந்த அனுபவம் பற்றி ஹொரணையைச் சேர்ந்த சதாசிவம் என்பவர் எம்மிடம் ரொம்பவும் மகிழ்ச்சியுடன் அந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

"அந்தக் காலத்துல வருடத்துக்கு ஒரு முறை தீபாவளி, பொங்கல் போன்ற சிறப்பு நாள்களில் இந்த டிரங்குப் பெட்டிப் பெயிண்டர்கள் ஊருக்குள் வருவார்கள். வெற்றிலை கறை படிந்த பற்கள், கட்டம் போட்ட சாரம், முண்டா பனியனோடு ஒரு சிறிய சாக்குப் பையில் பெயிண்ட்டப்பாக்கள், பிரஷ், மண்ணெண்ணை உள்ளிட்ட பொருள்களையெல்லாம் போட்டு எடுத்து வருவார்கள். பம்பை தலையோடு, அவங்களை பார்க்கிற போது, நடிகர் யோகி பாபு மாதிரி இருப்பார்கள்.

அவங்க வந்ததும் அவங்கள சுற்றி சின்னப் பசங்க நாங்கள் எல்லோரும் ரவுண்டு கட்டிடுவோம். அவங்களும் உட்கார்ந்திடுவாங்க பிறகு வீடுகளிலிருந்து டிரங்குப் பெட்டிகளைக் கொண்டுவந்து பெயிண்ட் அடிக்க கொடுப்பார்கள். அவள் பெயிண்ட் அடிக்கும் அழகை வச்சக் கண்ணு வாங்காம பார்த்திட்டு இருப்போம். அவ்வளவு அழகாக இருக்கும். வளைவு கோடுகள், பூக்கள் போன்ற டிசைன் போடுறதுக்கு சில அச்சுகளை செய்து வைத்திருப்பார்கள் அதில் டிசைன் போடுவார்கள். சில பெட்டிகளுக்கு பெயிண்ட் பூசி விட்டு அது காயவில்லை என்றால் அடுத்த நாள் வந்து அதற்கு டிசைன் போட்டு அதனை முடித்து கொடுப்பார்கள்.

நாடோடிகள் மாதிரி வரும் அவர்கள் அந்தந்த ஊரில் உள்ள கோயில்களில் தங்கியிருந்து இந்த வேலையை முடித்து விட்டு தொழிளாலர்களுக்கு சம்பளம் கொடுக்கும் நாளில் அவர்களுக்குரிய கூலியை வீடுகளுக்கு வந்து பெற்றுக்கொள்வார்கள். ஒரு ரூபா, அல்லது இரண்டு ரூபான்னு பெட்டிகளின் அளவைப் பொறுத்த கூலி விலையை நிர்ணயம் செய்திருப்பார்கள்.

எல்லோர் வீடுகளிலும் டிரங்குப் பெட்டி இருந்ததால் அவர்களும் கை நிறைய நல்லா காசும் சம்பாதிப்பார்கள். அவர்கள் பெயிண்ட் அடிக்கும் பெட்டிகளில் பெரும்பாலும் பச்சை நிறமும், வெள்ளை நிறத்தில் கோலம் போட்டது போல டிசைன்னும் இருக்கும்" என்று சொல்லும் சதாசிவம் பழைய நினைவுகளில் பூரித்துப் போகிறார்.

நம்மவர்களின் வாழ்வியலில் பிரிக்க முடியாததாக இருந்த டிரங்குப் பெட்டிகள். இன்றோ அவை அருங்காட்சியகக் காட்சி பொருள்கள்போல ஆகிவிட்டன. நம்மூரில் தான் டிரங்குப் பெட்டிகளுக்கு இந்த நிலைமை. ஆனால், வெளிநாடுகளில் டிரங்குப் பெட்டிகளுக்கு

(22ஆம் பக்கம் பார்க்க)

# பெண்களால் பின்னடிக்கப்படும் பெண்ணியம்!

● நவீனா

பெண்ணிய ஆர்வலரும், சமூக அறிவியல் ஆய்வாளருமான கமலா பாஸின் சொல்கிறார்: ''ஆணாதிக்கத்தை ஆதரிக்கும் நிறையப் பெண்களை அறிந்திருக்கிறேன். தன் வாழ்நாள் முழுவதும் பெண்களின் உரிமைக்காக உழைத்த ஆண்களையும் அறிந்திருக்கிறேன். பெண்ணியம் என்பது உண்மையில் உயிரியல் சார்ந்த



செயற்பாடல்ல, அது ஒரு கருத்தியல் ரீதியான கோட்பாடு'' என்று. பெண்ணியச் சிந்தனைகளில் பதினெட்டாம் நூற்றாண்டு முதல் ஆண்களையும், ஆண்மையச் சமூகச் செயற்பாடுகளையும் சுட்டிக்காட்டி, அதன் குறைகளைக் களைவதையே அடிப்படைப் பணியாக வரையறுத்துக்கொள்ளப்பட்டது.

அது ஆண்களை முற்றிலுமாகச் சென்றடைந்துவிடவில்லை. இன்னொருபுறம் ஆணாதிக்கச் சமூகம் மிகவும் சாதுரியமானது. அது பெண்களுக்கு இழைக்கும் அநீதிகள் எதையும் நேரடியாகச் செய்வது கிடையாது. பெரும்பாலும் பெண்களை வைத்துத்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்களை அது நிகழ்த்துகிறது. ஆணாதிக்கக் கோட்பாடுகளின் அடியொற்றி நடக்க அது பெண்களுக்குப் பழக்கிக்கொடுத்திருக்கிறது. பெண்களே பாதிக்கப்படுபவர்களாகவும் பாதிப்பை ஏற்படுத்துபவர்களாகவும் இருப்பதால், பெண்ணியம் இருமுனை கொண்ட கத்தியைப் போல இந்தப் பிரச்சினைகளைக் கையாள வேண்டியுள்ளது.

## வகுப்பறை - நடைமுறைப் பெண்ணியச் சிந்தனைகள்

வகுப்பறைப் பெண்ணியத்தின் சாராம்சங்கள் சிலவற்றைத் தெரிந்து வைத்துக்கொண்டு, அதுவே நடைமுறைப் பெண்ணியம் என்று நம்பிக்கொண்டிருந்த தோழி ஒருவர், தான் உரையாடும் அனைவரிடமும், ''பிற்காலத்தில் நான் ஒரு முழு நேரப் பெண்ணியவாதியாக இருப்பேன். பெண்களின் உரிமைக்காக ஆண்களை எதிர்த்துப் போராடுவேன்'' என்று உணர்ச்சி ததும்பப் பேசிக்கொண்டிருப்பார். ஒருமுறை அவரிடம், ''குறிப்பாக ஆண்களை மட்டும் ஏன் குறை சொல்கிறீர்கள், அதற்கு ஏதாவது தனிப்பட்ட காரணம் இருக்கிறதா?'' என்று கேட்டேன். அதற்கு மறுமொழியாக, ''ஆண்கள் பெண்களின் திறமைகளை மதிப்பதில்லை. அவர்களுக்குப் பெண்கள் மீது நம்பிக்கை இல்லாத காரணத்தினாலேயே பெண்களால் அநேக காரியங்களில் ஈடுபட முடிவதில்லை'' என்றவர், ஒரு ஆய்வுக்காகக் களப் பணி செய்யும் வாய்ப்பைப் பெண் என்பதால் தனக்குத் தராமல், மற்றொரு மாணவனுக்கு அளித்த சம்பவத்தை மேற்கோள் காட்டினார்.

அவர் பக்க நியாயங்கள் முற்றிலும் உண்மை என்றாலும், பெண்களால் பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களைக் கண்டுகொள்ளாமல் விடுவதால் ஆணாதிக்கச் சமூகம் இன்னும் வலுப்பெற்றுக் கொண்டு தான் இருக்கும்.

## அவநம்பிக்கையைப் பெண்கள் கடக்க வேண்டும்

குடும்பம் முதல் பணிபுரியும் இடம் வரை தங்கள் திறமைகள் மீதான அவநம்பிக்கையைப் பெண்கள் தன் பாலினத்திடமிருந்து தான் முதலில் கடந்துவர வேண்டிய சூழலை ஆணாதிக்கச் சமூகம் உருவாக்கியிருக்கிறது. பெண்கள் மீது பல விதமான எதிர்மறை எண்ணங்களைத்தான் அதன் கோட்பாடுகள் பெண்களுக்குள் விதைத்துவிட்டிருக்கின்றன. அந்தப் பெண்ணியவாதியோடு தொடர்ந்த உரையாடலின் முடிவில், ''நீங்கள் ஒரு பெண், உங்கள் வீட்டில் நிகழவிருக்கும் ஒரு திருமணத்துக்காக ஐயாயிரம் பேருக்குச் சமைக்க வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். அந்தச் சமையல் வேலையைச் செய்து தருவதாக ஆண், பெண் என இரு சமையல்காரர்கள் உங்களை அணுகுகிறார்கள். அந்த முற்பதிவை இருவரில் நீங்கள் யாருக்கு வழங்குவீர்கள்?'' எனக் கேட்டேன். ஆண் சமையல்காரரிடம் ஒப்படைப்பதாக அவர் சொன்னார். ஆணாதிக்கச் சமூகத்தின் வெற்றிக்கு இப்படித்தான் பெண்கள் தங்களுக்கே தெரியாமல் பங்களித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சமையல் செய்யும் திறமை என்னவோ பெண்களுக்கு மரபணுவில் இருப்பதுபோல வீட்டில் காலங்காலமாகப் பெண்கள் சமைத்தாலும், அதைத் தொழிலாகச் செய்ய நேரும்போது பெண்களைவிட ஆண்களைத்தான் பெண்களே தெரிவு செய்யப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்.

''அஞ்சு பத்துப் பேருக்கென்றால் பரவாயில்லை, ஐயாயிரம் பேருக்குச் சோறாக்கும்போது, பொம்பளைங்க சாப்பாட்டைக் குழைய விட மாட்டாங்களா?'' என்ற அந்தப் பெண்ணின் அவநம்பிக்கையை இன்னும் எத்தனை தலைமுறைப் பெண்கள் கடந்துவர வேண்டும் என்று பிரமித்தபோது, பெண்ணியம் ஏழு கடல் தூரம் தாண்டிப் பயணித்துக்கொண்டிருந்தது.

நன்றி - தி ஹிந்து

# களிம்புகள்

புதிதான அறிமுகங்கள்
சம்பிரதாய இடைவெளி
சபை நாகரிகக் கை குலுக்கல்
கௌரவ சம்பாசனைகள்
உதடுகள் வலிக்காத புன்னகை
மரியாதை உபசரிப்பு
சீனி தவறிய தேநீர்
கொறித்துக் கொள்ளப் பொரி
- கடலை
இவைகளுடன் மௌனம்
இதுவரைக்கும் கட்டுப்பட்டிருந்த
- உணர்வுகள்
பழைய உன் நிழற்படங்களில் முகத்தைக்
- காயப்படுத்தி
வைத்திருக்கும் என்உருவம் கண்டவுடன்
கட்டறுக்கிறதே கண்மணி
உனதும் எனதும் குழந்தைகளின்
- நட்புகளால்
புதிய அறிமுகங்களோடே விடை
- பெறுகிறது
உணர்வுகள் அவர்களின் ஆரம்பங்களோடு
- தொடர்வதாய்....

- சி.ப.வேந்தன்




| Sizes (in Inches) | M | L | XL |
|---|---|---|---|
| Chest | 20 | 21 | 22 |
| Height | 27 | 28 | 29 |

Scan Here

https://www.facebook.com/UniqueteesSriLanka

Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)


விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)

# அப்பிள் நிறுவனத்தின்
# அசரவைக்கும் புதிய வெளியீடுகள்!!

● குமரன்




பல வகையான திறன் பேசிகள் (ஸ்மார்ட் போன்கள்) இன்று எம் மத்தியில் உலாவந்து கொண்டிருந்தாலும் அவற்றுக்குள் எப்போதும் தனது தனித்துவத்தைக் காட்டி நிற்பது அப்பிள் தயாரிப்புக்கள்தான். அதற்காகவே அவற்றுக்குத் தனி மதிப்புண்டு. 1976 ஆம் ஆண்டுகளில் கலிபோர்னியாவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அப்பிள் நிறுவனம், மென்பொருள்கள் தொடங்கி கணினி, ஐ-பாட் மற்றும் ஐ-போன்களை உருவாக்கி வெளியிட்டு வருகின்றது.

இந்த நிறுவனத்தினால் வெளியிடப்படும் ஐ-போன்கள் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெறும். வருடாவருடம் புதிய புதிய வகை ஐ-போன்கள் வருகைக்காகப் பிரியர்கள் காத்திருக்கிறார்கள். வெளியீட்டு விலைகள் அதிகமாக இருப்பினும் அந்த விலைகளுக்கேற்ற பெறுமதியினை அவை கொண்டிருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

புதிய வெளியீடுகள் வெளிவந்துவிட்டன என அறிவிக்கப்பட்ட சில மணிநேரங்களிலேயே அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான முன்பதிவுகள் அனல்பறக்கும். அந்தளவிற்கு ஐ-போன்கள் மீது பலருக்கும் மோகம் அதிகம்.

புதிய வெளியீடு

அப்பிள் நிறுவனம் தமது மற்றுமோர் புதிய வெளியீடாக ஐ-போன் 12 சார்ந்த உற்பத்திகளைக் கடந்த புதன்கிழமை வெளியிட்டது. செப்டெம்பர் மாதமளவில் வெளியீட்டுக்காக காத்திருந்த இந்தப் புதிய வெளியீடுகள், உலகளவில் பெரும் பாதிப்பினை உண்டாக்கியுள்ள கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ஒரு மாத இடைவெளியின் பின்னர் வெளியிடப்பட்டன. புதிய வெளியீடுகளாக ஐபோன் -12, ஐபோன் - 12 - மினி , ஐபோன்-12 ப்ரோ, ஐபோன்-12 ப்ரோ மெக்ஸ் மற்றும் ஸ்மார்ட் ஹோம் பொட் போன்றன உருவாக்கப்பட்டுள்ளன.



**என்ன வித்தியாசம்?**

இதுவரை காலமும் 4ஜீ தொழிநுட்பத்தில் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டு வந்த ஐபோன்கள் வரலாற்றில் தொழிநுட்பத்துக்கு ஏற்ப மாற்றலாகி ஐபோன்-12 ஆனது 5ஜீ தொழில்நுட்பத்தோடு வெளியாகியுள்ளது. அதனுடன் இந்த ஐபோன்12 ஆனது அப்பிள் நிறுவனத்தினால் மெருகூட்டப்பட்ட ஏ14 பயோனிக் புரசெசர் (A14 Bionic processor)ஐ கொண்டுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

முகத்தினை தொலைபேசிக்கு காண்பித்து (பேஸ் லொக்) அன்லொக் செய்யக்கூடிய வசதியையும் 5ஜீ தொழிநுட்பத்துக்கு ஏற்ப இதில் தரப்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஐபோன்களைக் கொள்வனவு செய்யும் போது இணைப்புகளாக வழங்கப்படும் ஹெட் செட் மற்றும் சார்ஜர் போன்றன, இந்த ஐபோன்-12 சார் உற்பத்திகளுடன் வழங்கப்படமாட்டாது மாறாக, வேகமாக wifi மூலம் சார்ஜ் செய்யக்கூடிய **USB-C to Lightning cable** எனப்படுகின்ற சார்ஜர் இணைப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஐபோனின் பின்பக்கத்தில் காந்தசக்தி உருவாக்கப்பட்டு புதிய மெகாசேஃவ் பொறிமுறை **(New MagSafe System)** என்கின்ற செயலி மூலம் வயர் இல்லாத சார்ஜர் மூலமான மின் சேமிப்பு நிகழ்த்தப்படும்.

**இவைதான் புதியன**

**1) ஐபோன் - 12**

இந்த ஐபோன் - 12 ஆனது ஐபோன் 11க்கு பதிலாகவே வெளியிடப்பட்டுள்ளது. இது புதியவடிவில் வடிவமைக்கப்பட்ட 6.1 இஞ்சி தடிப்புடைய தொடுதிரையைக் கொண்டமைந்துள்ளது . அத்துடன் 12 மெஹாபிக்சல் கொண்ட இரண்டு கமராக்களைக் கொண்டது. இரவு நேரங்களில் தெளிவாகப் ஒளிப்படங்களை எடுக்கக்கூடிய அப்பிள் நைட் மூட் எனும் செயலியையும் உள்ளடக்கியுள்ளது ஐபோன் 11ஐ விட மெல்லியதாக இருந்தாலும், கீழே விழுந்தாலும் இலகுவில் உடையாமல் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய செரமிக் ஸ்டீல் **(Ceramic Shield Screen Glass)** திரைவடிவத்தை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஐ-போன் ஒன்றின் விலையானது அமெரிக்க பெறுமதியில் 799 டொலர்கள் என்று கூறப்படுகின்றது.

**2) ஐபோன்-12மினி**

அப்பிள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள திறன் போன்களில் அளவில் மிகச் சிறியது இதுவாகும். 5.4 இஞ்சி அளவுள்ள தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், திரையின் முழுவதும் தெரியகூடிய **(full screen mode)** வடிவமைப்பை கொண்டுள்ளது. ஐபோன்-12 இனை ஒத்த வடிவமைப்பைக் கொண்டமைந்துள்ளதுடன், அதே போன்ற இரண்டு கமராக்களையும் கொண்டுள்ளது. இதன் விலை அமெரிக்கபெறுமதியில் 699 டொலர்கள் என்று கூறப்படுகின்றது.

**3) ஐபோன்-12 ப்ரோ மற்றும் ஐபோன்-12 ப்ரோ மெக்ஸ்**

ஐபோன் 12 ப்ரோ ஐபோன் 12போலவே 6.1 இஞ்சி அளவுடைய தொடுதிரையை கொண்டுள்ளது. மேலும் ஐபோன் 11ப்ரோவை போல மூன்று கமராக்களைக் கொண்டமைந்துள்ளது. எனினும் இது ஐ போன் 11 ப்ரோவை விட அளவில் பெரியதாகும். இதனிலும் சிறியளவு வேறுபாட்டுடன் ஐபோன்12 ப்ரோ மெக்ஸ் ஆனது 6.7 இஞ்சி அளவுள்ள தொடுதிரையை கொண்டமைந்துள்ளது. அப்பிள் நிறுவனத்தினால் இதுவரை வெளியிடப்பட்ட திறன் தொலைபேசிகளில் அளவில் பெரியது இதுவாகும்.

இந்த இரண்டு தொலைபேசிகளுமே முற்றிலும் திருத்தியமைக்கப்பட்ட மூன்று கமராக்களை கொண்ட தொழிநுட்பத்தை கொண்டுள்ளதுடன் ஐந்து மீற்றர்கள் தூரத்தில் இருக்கும் பொருட்களையும் தானாகவே கவனப்படுத்தி (போக்கஸ்) ஒளிப்படம் எடுக்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

மிகமுக்கியமாக இந்த இரண்டு தொலைபேசிகளினதும் உடலமைப்பு தண்ணீரினுள் விழுந்தாலும் துருப்பிடிக்காத தன்மைகொண்ட இரும்பினாலும் (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்) முன்புறம் செரமிக் ஷீல்ட் **(Ceramic Shield Screen Glass)** திரையினைக் கொண்டும் உரு வாக்கப்பட்டுள்ளது. அமெரிக்க மதிப்பில் ஐபோன் - 12 ப்ரோ ஒன்றின் பெறுமதி 999 டொலர்கள் என்றும் ஐபோன் - 12 ப்ரோ மெக்ஸ் இன் பெறுமதி 1099 டொலர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு புதிய திறன் பேசிகளும் முற்றிலும் மாறுபட்ட தொழிநுட்பங்கள் மற்றும் விசேட வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. எனினும் பயனாளர்கள் கைகளுக்கு நவம்பர் மாதமளவிலேயே கிடைக்கப்பெறும். எவ்வாறாயினும் இந்த வெளியீடுகள் நிச்சயம் ஸ்மார்ட் போன் பிரியர்களிடம் முக்கியமாக ஐபோன் பாவனையாளர்களிடம் அமோக வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை..!!

# இனிச் சீனாவுக்குத்தான் ஏற்றுமதி!



"சீனாவைப் போன்ற துரித வளர்ச்சியையே இலங்கையிலும் ஏற்படுத்த விரும்புகிறேன். இலங்கையின் உற்பத்திப் பொருள்களை சீனா கொள்வனவு செய்வதை எதிர்பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார் கோட்டாபய ராஜபக்ச. இது ஒரு புதிய விடயமாகும்.

● வி.அருணாசலம்

ஏறத்தாழ 450 ஆண்டுகளாகப் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் காலணித்துவத்தின் கீழ் இலங்கை ஆளப்பட்டது. இதில் ஒல்லாந்தரின் காலம் (கி.பி1658 - 1796) மிகவும் முக்கியமானது.

இவர்கள் இலங்கைத் தீவில் எத்தகைய விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதைப் புவியியல், காலநிலை அடிப்படையில் அறிந்து இலங்கைச் சுதேசிகளைக் கொண்டு அவற்றை உற்பத்தி செய்து ஏற்றிச் சென்றார்கள். புகையிலை, முருங்கை, கோப்பி, கொக்கோ, மரவள்ளி, வாழை, கற்றாழை (அனலைதீவு, மண்டைதீவுப் பகுதிகளில் நாட்டினர்), பருத்தி ஆகிய பலவற்றை இதில் குறிப்பிட முடியும்.

இதைப்போன்றதொரு ஏற்றுமதி முயற்சியே கோட்டாபய ராஜபக்ச அரசால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இவ்வுற்பத்திப் பொருள்களில் பெரும் பகுதி சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் சீனாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சரும் தற்போதைய சீனா வெளியுறவு ஆணையகத்தின் இயக்குநருமான ஜாங் ஜூச்சி தலைமையிலான 7 பேர் கொண்ட குழு ஒன்று கோட்டாபய ராஜபக்சவையும் பிரதமர் மகிந்த ராஜபக்சவையும் அண்மையில் சீனாவிலிருந்து வந்து சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டிருந்தாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அத்தூதுக் குழுவிடம் கூறிய செய்தி ஒன்று கவனிக்கத்தக்கது.

**என்ன கூறினார்...?**

"சீனாவைப் போன்ற துரித வளர்ச்சியையே இலங்கையிலும் ஏற்படுத்த விரும்புகிறேன். இலங்கையின் உற்பத்திப் பொருள்களை சீனா கொள்வனவு செய்வதை எதிர்பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார் கோட்டாபய ராஜபக்ச. இது ஒரு புதிய விடயமாகும்.

2015 - 2019 வரையான நல்லாட்சி அரச காலத்தில் இலங்கை வர்த்தகர்கள் பலர் நேரடியாகச் சீனாவுக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்தார்கள். அதைவிட சீன ஏற்றுமதியாளர்களின் முக்கிய நபரான அலிபாப அதிகம் பொருள்களை இலங்கைக்குக் கொண்டுவந்து குவித்திருந்தார்.

இந்த சீனா - இலங்கை வர்த்தகத்தில் இலங்கையிலிருந்து சிவப்பு நிறக் கற்றாளை, சாம்பல் நிறப் பெரிய பல்லி, பெரிய அளவிலான மட்டத்தேள், நீளமான கொடுக்கான், 100 வருடங்களுக்கு மேல் பழமையான இடி தாங்கிச் செப்புக் கம்பிகள் எனப் பல்வேறு பொருள்களைச் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்து ஒரு சிலர் பணம் சம்பாதித்தார்கள். இந்தப் பொருள்கள் சீன மருத்துவத்துக்குத் தேவையானவை என அறியப்பட்டவை.

**பசில் தலைமையில் செயலணி**

கோட்டாபய ராஜபக்ச அதிபராகப் பதவி ஏற்றதும் இந்தியாவிலிருந்து முச்சக்கர வண்டிகள், மஞ்சள், உழுந்து மற்றும் பல பொருள்களை இறக்குமதி செய்வதைத் தவிர்த்து உள்நாட்டில் அவற்றை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கோட்டாபயவினால் (வியத்மக அமைப்பின் ஆலோசனைப்படி) அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "பொருளாதாரப் புத்தெழுச்சி" செயலணியின் தலைவராகப் பசில் ராஜபக்ச நியமிக்கப்பட்டு அவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் இன்னோர் முன்னெடுப்பு இலங்கைக்குத் தேவையான பால் உற்பத்தியை 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்ய முடியும் என்பது. இவற்றைவிட விவசாய உற்பத்திப் பொருள்களை முதல்நிலைப் பொருள்களாக ஏற்றுமதி செய்யாது அவற்றை மூலப்பொருள்களாக வைத்து முடிவுப் பொருள்களைத் தயாரித்து அவற்றையே ஏற்றுமதி செய்வதென்பது. அதன் மூலம் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள் - அந்தப் பொருள்களை வைத்து மேற்கொள்ளும் கைத்தொழில் முயற்சிகள் என உள்நாட்டில் இரு சாரார் உழைப்பில் ஈடுபடும் வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

**பெரும்பான்மையினர் வலுச்சேர்ப்பர்**

இவ்வாறான உற்பத்தி ஊக்குவிப்பு, மற்றும் ஏற்றுமதிக்கான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதால் இலங்கையில் பெரும்பான்மை இன மக்கள் அதிக லாபத்தை அடைய வாய்ப்புண்டு. அதேவேளை வடக்குக் கிழக்கு மக்கள் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட விவசாய உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு வலுச்சேர்க்க முடியும்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் ஒரு துண்டு நிலம்கூட செய்கை பண்ணாமல் விடப்படவில்லை. அதேபோன்று இந்த ஆட்சியில் வெளிநாடுகளுக்கு எத்தகைய பொருள்களை ஏற்றுமதி செய்வது என்று சிந்திக்கப்படுகிறது (அவ்வுற்பத்திப் பொருள்களை இலங்கை மக்கள் நுகரா விட்டாலும் பரவாயில்லை. அந்நியச் செலவாணி வருவாயை அதிகரிப்பதே இதன் நோக்கம்).

**தமிழர்களின் பங்கெடுப்பு**

1970 - 77 காலப்பகுதிகளில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் பங்கெடுத்தார்கள். தற்போதுள்ள ஏற்றுமதி வர்த்தகத்தில் புகையிலைக்கு முன்னுரிமை இருப்பதாகத் தெரியவில்லை. வெளிநாடுகளில் இருந்து பால்மா இறக்குமதிக்குத் தடை உள்ளதால் இந்தப் பால் உற்பத்தியில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் கூடிய அக்கறை செலுத்த முடியும். உழுந்து, மஞ்சள், அன்னாசி, மிளகு, கற்றாழை, பசுக்களுக்கான உணவுப்பொருள்கள் வளர்த்தல் போன்ற முயற்சியில் அதிக கவனம் செலுத்த முடியும்.

பெரும்பான்மையாகவுள்ள சிங்கள மக்கள் மத்தியில் தமது உற்பத்திகளான றக்தி, மலிபன், கொத்மலே, அம்பேவெல பாலுற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் மனநிலை உண்டு. அது அவர்களின் மனதில் எமது நாட்டு உற்பத்தி என்கிற எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வெகு விரைவில் கொக்க கோலா, பெப்சி போன்ற பானங்களின் இறக்குமதியும் மட்டுப்பட வாய்ப்புண்டு.

**பெரியதொரு சந்தை வாய்ப்பு**

உலகின் அதிக சனத்தொகையைக் கொண்ட (142 கோடிக்கு மேல்) சீனா தனது மக்களுக்குத் தேவையான விவசாய, உணவுப் பண்டங்களையும் பழங்களையும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றில் இருந்து இறக்குமதி செய்கிறது. இதில் பாலப்பழம், டூறியன் பழம் போன்றவைக்கு அதிக கிராக்கி உண்டு.

இலங்கையில் குறைந்த விலையில் விற்கப்படும் விளாம்பழம், பலாப்பழம் போன்றன எதிர்காலத்தில் அதிக பணம் உழைக்கும் ஏற்றுமதிப் பொருள்களாக மாற வாய்ப்புண்டு.

142 கோடிக்கு மேல் மக்கள் வாழும் நாட்டுக்கான சந்தை வாய்ப்பொன்று இலங்கைக்குக் கிடைப்பதென்பது. ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகள் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு இதுவரை மேற்கொள்ளப்பட்டு வருகிற ஏற்றுமதியைவிட மிக அதிகமானதாக இருக்கும். இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மஞ்சள், உழுந்து போன்றவற்றைத் துரித கதியில் உற்பத்தி செய்வது, உள்ளி, மல்லி, கடலைப் பருப்பு போன்றவற்றை இறக்குமதி செய்வது என்பதுடன், சோளம் முக்கிய பயிராகப் பயிரடப்பட்டு அது சார்ந்த கைத்தொழில் முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த நிலையில் வடக்குக் கிழக்கு விவசாயிகளும் இவ்வுற்பத்தியில் கூடிய கவனம் செலுத்த முடியும்.

**புதிய அணுகு முறை**

கோட்டாபய அரசின் புதிய பொருளாதார முறைமை சீனாவை மையமாகக் கொண்ட அபிவிருத்தியையும் பாதுகாப்பையும் நாடுவதாக உள்ளது. ஐ.நா. சபையில் வீட்டோ அதிகாரத்தைக் கொண்ட சீனா இலங்கை அரசுக்கு எதிரான மனித உரிமை விடயத்தில் இலங்கைக்குச் சார்பாக நடந்து கொள்ளும் என வெளிப்படையாகக் கூறியிருப்பதும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பத்து வருட காலத் தவணைக் கடனாக வழங்கியிருப்பதும் இலங்கை இனிச் சீனாவின் பக்கம் அதிக கரிசனை கொள்ளும் என்பதைக் காட்டுகிறது.

இலங்கை மக்களில் 80 வீதமானவர்கள் சிங்களவர்களாக இருப்பதால் வெளிநாட்டுப் படு கடன்களுக்கான வரிச்சுமையை அவர்களே தாங்க வேண்டியிருக்கிறது. எனவே அவர்களின் முன்னேற்றத்துக்கான வழி வகைகளே அபிவிருத்தி விடயத்தில் அதிக கவனத்தைப் பெறும். எனவே சிறுபான்மைச் சமூகங்களும் புத்தி பூர்வமாக நகர வேண்டிய தேவை உண்டு. இது அரசியலுக்கு அப்பாற்பட்ட வாழ்வியலுக்கான தேவையாகும்.



# இலங்கையை அண்மித்த கடலில் புதிய தீவு!

● பொன்வண்டு

இலங்கையை அண்மித்த கடலில் புதிய தீவு என்று தலைப்பிட்டவுடன் இலங்கையை ஒட்டிப் புதிய தீவு ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டு விட்டதோ என்று எண்ணிவிட்டீர்களா? அவ்வாறில்லை. உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையை அண்மித்து உருவாக்கப்பட்டுவருகிறது ஒரு தீவு அவ்வளவுதான்.

மாலை தீவுகளின் தலைநகர் மாலே. மாலைதீவுகள் என்று குறிப்பிடப்படுகின்ற தீவுக் கூட்டத்திலுள்ள ஒரு தீவுதான் மாலே. அந்தத் தீவில் இருந்து 8 கிலோ மீற்றர் தொலைவில்தான் இந்தப் புதிய தீவு உருவாக்கப்பட்டு வருகிறது. இதை உருவாக்குவதும் மாலைதீவுகள்தான். உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கு அண்மையாக உருவாக்கப்பட்டுவருகின்ற தீவு என்று இதைப் பலரும் குறிப்பிடுகிறார்கள்.

சீனா தனது தென்கடல் பகுதியில் உருவாக்கிவருகின்ற செயற்கைத் தீவு போலல்ல இந்தத் தீவு. தென் சீனக் கடற்பகுதியில் காணப்பட்ட - கடல் மட்டத்திலிருந்து ஒரு சில மீற்றர்களுக்கு உயர்ந்திருந்த மணல் திட்டுக்களை மேலும் உயரமாக்கி அதைத் தீவாக உருமாற்றி வருகின்ற சீனாவைப் போலல்லாமல் கடல் பரப்பில் உருவாக்கப்பட்டு வருகின்ற புதுத் தீவு இது.

### ஹுல் ஹுமாலே

இந்தப் புதிய தீவுக்கு ஹுல் ஹுமாலே என்று பெயரிட்டிருக்கிறார்கள். இலங்கைக்குத் தென் மேற்கில் அமைந்துள்ள மாலைதீவுகள் உலகெங்கும் இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற நிலப்பரப்பாக அமைந்துள்ளது.

பல தீவுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பே மாலைதீவுகள் என்கிற நாடு. கடலையொட்டிய வெண் மணற் தரை, அதில் பரவிக் கிடக்கின்ற சிப்பிகள், கடற்கரையையொட்டி அமைக்கப்பட்டுள்ள தங்கும் விடுதிகள், உலகத் தரத்திலான நீர் விளையாட்டுகள் என மாலைதீவு கொண்டுள்ள அனைத்துமே சுற்றுலா பயணிகளுக்குப் பிடித்தமானவையாக உள்ளன. அதனால் அங்கு வருடா வருடம் சுற்றுலாவிகளின் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த நிலையில் தான் இந்தப் புதிய தீவு உருவாக்கப்பட்டு வருகிறது.

### தீவு உருவாக்கத்துக்குக் காரணம் என்ன?

சுற்றுலாவிகளை அதிகம் கவர்கின்ற மாலைதீவுகள் உலகிலுள்ள மற்றைய நாடுகள் - தீவுகளை விடவும் பெரும் அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுக்கின்றன.

மாலைதீவுகளைப் போல வேறு எந்த நாடும் சுற்றுச்சூழல் அச்சுறுத்தலை எதிர்கொள்ளவில்லை என்றும் சொல்லலாம்.

அதன் ஆடம்பரமான கடற்கரை சொகுசு விடுதிகள் உலகப் புகழ் பெற்றவை யாக இருந்தாலும், மாலைதீவுகள் என்று குறிப்பிடப்படுவதில் 1,200 தீவுகள் கடல் மட்டத்திலிருந்து ஒரு மீற்றர் உயரத்தில் தான் உள்ளன. கடல்மட்டம் உயர்ந்தால் அதில் இவற்றில் 80 சதவீத பகுதிகளின் இருப்புக் கேள்விக்குறியாகிவிடும்.

தற்போது கடல் மட்டம் உயர்ந்து வருவதை அடுத்துத்தான் இந்தப் புதிய தீவு உருவாக்கப்பட்டு வருகிறது. இப்போதைய வேகத்தில் கடல் மட்டம் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருந்தால் 2100 ஆம் ஆண்டளவில் மாலைதீவுகளிலுள்ள 200 வரையான தீவுகள் கடலில் மூழ்கிவிடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தப் புதிய தீவு உருவாக்கப்படுகிறது.

### இடம்பெயர்ந்து வாழவே இந்தத் தீவு

பெருங்கடலால் சூழப்பட்டிருக்கின்ற குட்டித் தீவுகளின் கூட்டமான மாலைதீவுகள் எதிர்காலத்தில் கடலில் மூழ்கிப்போகும் அபாயமுள்ளதால், அங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்து வாழ்வதற்கு வேறு எங்காவது இடம் வாங்கப் போகிறோம் என்று 2008ஆம் ஆண்டில் அப்போதைய மாலைதீவுகளின் அதிபர் முகமது நஷீத் அறிவித்திருந்தார்.

உயர்ந்து வருகின்ற கடலுக்கு எதிராகப் போராடுவதைக் காட்டிலும், அதனுடன் இசைந்து செயல்படுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கும் மாலைதீவு அதிகாரிகள் திட்டம் தேடினர். அவர்கள் தீட்டிய திட்டம்தான் இந்தப் புதிய தீவு உருவாக்கம்.

ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் செய்திருப்பதைப் போல மிதக்கும் வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளை உருவாக்குவது பற்றி யோசித்து அந்த யோசனையின் விரிவாக்கமே புதிய தீவு ஒன்றை உருவாக்கு மளவுக்கு வந்துள்ளது.

### 21ஆம் நூற்றாண்டுக்கான நகர்



"நம்பிக்கை நகரம்" என்று பெயரிட்டு மாலைதீவுகளால் உருவாக்கப்பட்டு வருகின்ற இந்தப் புதிய தீவை 21ஆம் நூற்றாண்டுக்கான செயற்கை நகர் என்று குறிப்பிடுகிறார்கள். தலைநகர் மாலேக்கு அண்மையாக உருவாக்கப்பட்டு வருகின்ற இந்தப் புதிய தீவைக் கொரோனாப் பெருந்தொற்று ஆரம்பிப்பதற்கு முன்னரான காலத்தில் அங்கு விரைந்த சுற்றுலாப் பயணிகளால் சென்று பார்க்க முடிந்தது.

விமான நிலையத்தில் கடலை ஊடறுக்கின்ற பாதை வழியாகப் பேருந்தில் 20 நிமிடங்கள் பயணம் செய்தால் இந்தப் புதிய தீவின் கட்டுமானப் பணிகளைப் பார்க்கலாம். 2004ஆம் ஆண்டில் மாலைதீவுகளைப் பெருமளவில் சீரழித்த ஆழிப்பேரலை (சுனாமி)க்குப் பிறகு, பாதுகாப்பான தீவுகளை உருவாக்குவதற்குத் திட்டம் வகுத்த வீட்டுவசதி மேம்பாட்டு நிறுவனத்தின்




(எச்.டி.சி.) வணிக மேம்பாட்டுப் பிரிவினரின் மேற்பார்வையில் இந்தத் தீவு உருவாக்கப்பட்டு வருகிறது. அதாவது காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு மிகக் கவனமாக உருவாக்கப்பட்டு வருகிறது. அதற்கேற்பவே அங்கு கட்டடங்களும் அமைக்கப்படவுள்ளன.

### எவ்வாறு உருவாக்கப்படுகிறது?

கடலில் இருந்து எடுக்கப்பட்ட பல மில்லியன் கனமீற்றர் மணலைக் கொண்டு இந்தத் தீவுக்கான நிலப்பரப்பு உருவாக்கப்படுகிறது. கடல் மட்டத்தில் இருந்து 2 மீற்றர் உயரத்தில் இந்தத் தீவை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் புதிய தீவின் அளவு இன்னும் வளர்ந்து வருகிறது. 188 ஹெக்ரெயர் பரப்புள்ளதாக இந்தத் தீவு நிலப்பரப்பை உருவாக்கும் முதல்கட்டப் பணிகள் 1997ஆம் ஆண்டில் தொடங்கி 2002ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. அதனுடன் மேலும் 244 ஹெக்ரெயர் நிலப்பரப்பை உருவாக்கும் பணி 2015ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது.

அதையடுத்து 2019ஆம் ஆண்டின் இறுதியில் மேலும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தத் தீவில் குடியேறினர். அதனால் இந்தத் தீவை மேலும் பெரிப்பிக்க வேண்டியிருந்தது. இப்போது, 2 லட்சத்து 40 ஆயிரம் பேர் வரை குடியேறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. 2020களின் மத்தியில் இந்த வாய்ப்பு உருவாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக அதன் பணிகள் மந்தப்பட்டிருந்தாலும் புதிய தீவை உருவாக்கியே தீருவோம் என்று முழுமூச்சில் செயற்படுகிறது மாலைதீவு அரசு.

### 'தேசியத் தலைவர்'



முத்துராமலிங்கத் தேவரை உங்களுக்குத் தெரியுமா? அவருடைய வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற திரைப்படம் தான் இந்தத் தேசியத் தலைலவர் படம். 1908ஆம் ஆண்டில் இந்தியாவில் பிறந்த இவர் ஆன்மிகவாதியாகவும், சாதிப் பாகுபாட்டை எதிர்ப்பவராகவும், சுதந்திரப் போராட்டத் தியாகியாகவும் கருதப்படுகிறார். நேதாஜி சுபாஷ் சந்திர போசின் தலைமையில் பிரித்தானிய அரசை எதிர்த்த இந்திய தேசிய இராணுவத்திற்கு, தமிழகத்திலிருந்து பெரும் படையைத் திரட்டி அனுப்பிய பெருமை இவரைச் சாரும். இவர் குறித்து வெளிவரவிருக்கிற திரைப்படமே இது. இதற்கு இளையராஜா இசையமைக்கிறார். ட்ரென்ட்ஸ் சினிமாஸ் மற்றும் எம்டி சினிமாஸ் நிறுவனங்களின் சார்பில், இந்தப் படத்தை ஜெ.எம்.பஷீர் மற்றும் ஏ.எம்.சௌத்ரி இணைந்து தயாரிக்கின்றனர். இதில் முத்துராமலிங்கத் தேவராக ஜெ.எம்.பஷீர் நடிக்கிறார். 'ஊமை விழிகள்' ,'உழவன் மகன்', 'கருப்பு நிலா' உள்ளிட்ட படங்களை இயக்கிய அரவிந்தராஜ் இந்தப் படத்தை இயக்கவுள்ளார்.

# றோட்டுக்குச் சொந்தக்காரர் ஆரு....?

கதிரேசன் காத்தவராயன்

அதிலை வாசியசாலையடியிலை கன நாளைக்குப் பிறகு என்ர பழைய கூட்டாளி மாரைக் காணக்கூடியதாயிருந்துது. கொரோனாவாலை கூடிக் கதைக்கவும் எல்லோ பயம். ஆனால் கொண்டாட்டங்கள் வலு தாராளமாயெல்லோ நடக்குது.

"பஸ்சிலை... வழமையான ஏத்தல்... வழமையான அடையல்... நாடு வழமை போலதான் போகுது... என்னண்ணை?" என்றார் என்னைக் கண்ட தம்பிராசர்.

"ஓமப்பா தம்பிராசா... எது நடக்கேல்லை...? எலக்சன் நடந்தது. ஸ்கொலசிப் நடந்தது. இப்ப ஏ.எல். நடக்குது. பிள்ளைப்பேறிலை தொடங்கி ஆண்டுத் திதித் திவசம் வரைக்கும் கூடிச் சாப்பிடுற அத்தனையும் நடக்குது இல்லையோ?" எண்டு இடையிலை சம்பர் புகுந்தார்.

"ஆ... ஆ... சம்பரன்னை இதை விட்டிட்டாய். டெங்கு..." எண்டு நான் தொடக்கி விட்டன்.

"இஞ்சார் கதிரேசன்னை! பகிடி பண்ணாதை... டெங்கு திரும்பவும் வருதாம். உண்மைதானோ?" எண்டார். மணியத்தார்.

"மணியம் டெங்கு எங்கயாவது போயிருந்ததோ...? திரும்பி வாறதுக்கு? அதுவும் இஞ்சைதான் இருந்தது... ஆனால், கொரோனாவாலை அதைக் கைவிட்டிட்டினம். எல்லாம் எங்களோடை இருக்கிறதுகள்தான். நாங்கள்தான் அதுகளைச் சரியா விளங்கி மதிப்புக் குடுக்கிறதில்லை. அது சரி மணியம் உனக்கேன் திடீரென்று டெங்கின்ர ஞாபகம் வந்தது?" எண்டு கேட்டன்.

"இல்லைக் கதிரேசன்னை...! நேற்று இரவு முழுதும் சுத்திச் சுத்தி இலவுன்ஸ் பண்ணித் திரிஞ்சவங்கள் எல்லோ... அதுதான் ஞாபகம் வந்தது" எண்டார் மணியத்தார். "உந்த எலவுன்ஸ்மென்ரைக் கேட்டு வீட்டிலை குடும்பமாய்ச் சிரிச்சனாங்கள்" எண்டார் சிவராசர்.

சிவராசரிலை ஒரு குணம். கேட்டால் ஒண்டையும் சொல்லாது. அதாலை ஏன் சிரிச்சனிங்கள் எண்டு ஆருமே கேட்கேல்லப் பாருங்கோ.

"பகலிலை பழைய இரும்பு, பிளாஸ்ரிக், போத்தல் எண்டு வலு அடக்கமான குரலிலை கேட்டபடி றோட்டாலை ஒண்டுக்குப் பின்னாலை ஒண்டாய் வாகனங்கள் போகுதுகள் வருகுதுகள். நேற்றைக்கு இரவு பழைய போத்தல் பழைய பாத்திரங்கள் எண்டு சத்தமாச் சொல்லி டெங்கு ஒழிப்புப் பிரிவுக்காரர் திரிஞ்சவை...உங்கடை காதிலை விழேல்லையோ..." எண்டார் சிவராசர்.



"இஞ்சார் சிவராசா! விழாமலுக்கு இல்லை. வீடுகள் வளவுகளுக்குள்ள கிடக்குறதுகளை விட றோட்டுகளிலை... பொது இடங்களிலை கிடக்குறதுகளை என்ன செய்யிறதாம்...? அந்த எரிச்சலிலை கேட்கிறதிலை இன்ரஸ்ற் எடுக் கேல்லை" எண்டார் தம்பிராசர்.

"அதுகுஞ்சரிதான் தம்பிராசு! அவை றோட்டுகளிலை, வாய்க்காலுகளிலை பொது - அரச இடங்களிலை கிடக்கிற சாமானுகளைச் சரியா மெய்ன்ரென் செய்தினமெண்டால்... சனமும் அதைப் பார்த்துச் செய்யும். தவறுவிடுகிற வைக்குத் தண்டம் போடலாம். ஆனால் சனம் சரியாயிருந்தும் அறிவிப்புச் சனத்துக்கெல்லே குடுக்கினம்" இது தாமோதரியண்ணர்.

"எல்லாஞ்சரிதான் பொது இடத்துக் குப்பையெண்டாலும்சரி! வளவுக் குப்பையெண்டாலுஞ்சரி! போடுகிறது ஆர்? நாங்கள் தானே! அப்ப அவங்களும் எங்களுக்குத் தானே சொல்லவேண்டியதாகிப் போகுது.

குப்பை போடு எண்டிற இடத்திலை வடிவாக் கட்டிப் போட்டமெண்டால் அவங்கள் எடுப்பாங்கள். போடாதை எண்டிற இடத்திலை குப்பையைப் பரவிக் காய விட்டால், அவங்கள் என்னதான் செய்வாங்கள்...?" நான் சொல்லச் சொல்ல ஒருதரும் ஒரு கதையில்லை.

"றோட்டும் தங்கடை யெண்டெல்லோ எங்கடையாக்கள் நடு றோட்டாலை போறதிலை தொடக்கம் வேலியைப் போட்டு றோட்டுக்குச் சொந்தமும் எல்லோ கொண்டாடுறம்... அப்பிடிப் பார்த்தா நாங்கள்தான் எல்லாம் வரட்டோ போட்டு...?" ■

கமுகு மடல் தட்டுக்கள் விற்பனைக்கு

KUDIL PRODUCT
ECO-FRIENDLY

12" - Rs.360 - 12 தட்டுக்கள்
10" - Rs.300 - 12 தட்டுக்கள்
08" - Rs.240 - 12 தட்டுக்கள்
06" - Rs.192 - 12 தட்டுக்கள்




மேலும் தொடர்புகளுக்கு

No. 74/1, A35, Visvamadu.
kudilproduct@gmail.com
+94 71 7777 559

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை...?

● பேர் அறிஞன்

முறையில் கல்வி (**informal education**) எனும் விடயத்துக்கான சூழல் ஏற்படுத் தப்படுகிறதா? ஒருவன் தனது பேரன் - தந்தை - சகோதரர் மற்றும் உறவினர்களினூடாகப் பெறுகின்ற தெழிலறிவானது அவனது வாழ்க்கைத் தேவைகளை முடியுமானவரை நிறைவு செய்தது. செய்யும். அவ்வாறானதொரு தொகுதியின் தேவை உணரப்படும் சந்தர்ப்பங்கள் அன்றாட வாழ்வில் எல்லோருக்கும் ஏற்படுகிறது. ஆனால், குறித்த வொரு தொகுதியினது பற்றாக்குறை அல்லது இன்மை என்பது தேவைப்பாட்டை நிறைவு செய்து திருப்தியடைய வேண்டிய முழுத் தொகுதியிலும் பெரும் தாக் கத்தை ஏற்படுத்துகிறது என்பதோடு பொருத்தமற்ற கட்டாய அறிவு புகட்டல் காரணமா கக் குறித்த தேவைக்கான சேவையைச் சுற்றும் தொகுதியிலும் விருப்பமின்மை மற்றும் தேர்ச்சியா லெழும் நெருக்கடிகளும் ஏற்படுகின்றன.

முற்கூறப்பட்ட குடும்பச் சூழலில் குறித்த ஒரு வன் பெறுகின்ற தொழில்திறன் என்பது அனுபவப் பயில்வோடு இணைந்து அவனை ஒரு தேர்ச்சி யுள்ள குறித்த தொழில்சார் நிபுணண் ஆக்குகிறது. மறுவளமாகத் தொழில்சார் பயிலறிவு மற்றும் பட்டறிவு அற்ற அல்லது குறித்த வகுப்பறைப் போதனை மூலம் மட்டுமே புரிந்துகொண்ட ஒரு வனைத் தேர்ச்சியுள்ள ஒருவனாகவோ, அல்லது தொழிற் பற்றுக் கொண்ட ஒருவனாகவோ ஆக்க முடியுமா?

இதேவேளை மரபு சார்ந்தும் பாரம்பரியம் சார்ந்தும் பெற்றுக் கொள்ளும் பிரயோக அறிவு என்பது தற்காலத்துக்கேற்ற நவீன செல்நெறியுடன் இணைந்த வினைத்திறனுடைய சேவையை வழங்க எந்தளவுக்கு உதவும்? எனும் ஒரு கேள் வியை எழுப்புவதும் அவசியமானதாகவுள்ளது. இங்குதான் முறைசாராக் கல்வி(**non formal education**) முறையில் கல்வியுடன் இணைக்கப் படுவதன் தேவை எழுகிறது.

முறையில் கல்வி மூலமாகப் பெறுகின்ற அனு பவ அறிவை நவீனத்துடன் இணைப்பதற்கான நுட்பங்களைப் பிரயோகிக்கும் அனுபவ அறிவாக மாற்றும் பணியை முறைசாராக் கல்வி தொடர வேண்டும். எதற்காக? ஏன்? எப்படி? என்ன? ஆகிய கேள்விகளை எழுப்பி அதற்கான பதில்களைக் கண்டடைந்து பிரயோகிக்கும் அறிவை முறைசாராக் கல்வி வழங்க வேண்டும். வழங்குகிறதா? இன்றிருக்கும் முறைசாராக் கல்வியானது பாடசாலைக்கு உள்ளும் புறமும் விரிவாக்கப்படுவது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

2



இன்று முறைசாராக் கல்வி அதனோடிணைந்த தொழிற்பயிற்சிகளானது உள்வாங்கும் பயிலு நர்கள் தொடர்பாகப் பாடசாலைக் கல்வித் தக மைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் அவ னது குடும்பச் சூழல் சார்பாகக் கொடுக்கப்படு கிறதா? உள்வாங்கப்படும் பயிலுநர்களில் பெரும் பாலானோர் பாடசாலைக் காலம் நிறைவடைந்த பின் கூடிக் களிக்கும் ஓரிடமாகவே கருது கின்றனர் என்கிற அவதானமும் எமது சூழலில் உள்ளமை அவதானிக்கப்பட வேண்டியது.

இந்தப் பொழுதுபோக்கு மனோநிலை நட்பு வட்டத்தினரால் ஏற்படுத்தப்படுகிறது. தமது விடுப்பு, இயலுமை மற்றும் குறித்த துறைக்கான தேவைப்பாடு தொடர்பாகக் கவ னத்தில் எடுப்பது மிக மிகக் குறைவு அல்லது இல்லை. படித்து முடித்தபின் பார்ப்போம் எனும் மனோநிலையே பெருமளவில் மேலோங்கியுள்ளது என்பது உண்மை. இந்த மனோநிலை மாற்றத் துக்குள்ளாக்கப்படவேண்டியதன் அவசியம் உணரப்படுகிறதா? உணரப்படுவதால் அதற்கான பரிகாரங்கள் ஏதும் சிந்தனைக்கோ அல்லது செயற்பாட்டுக்கோ எடுத்துக்கொள்ளப்பட்டி ருக்கிறதா?

தேவைக்குப் போதியளவு ஆளணியில்லாத துறைகள், அவை தொடர்பான அறிவு வழங்கல் கள், முன் அனுபவமுள்ள (முறையில் கல்வி அல்லது பிற பட்டறிவு) பயிலுநர்களைத் தேர்வு செய்தல், பிரயோக அறிவு நுட்பங்களைப் பயிற்றுதல் பின்னர் குறித்த துறைகளில் அவர் களை இணைத்து (பயிலுநர்களாகவோ/நிரந்தர மாகவோ) தொடர் இற்றைப்படுத்தல் செயன்முறை களை மேற்கொள்ளல் போன்றதொரு கட்ட மைக்கப்பட்ட செயன்முறை உள்ளதா? இது அவ சியமானதென உணரப்பட்டு ஏதும் திட்டங்களாவது உள்ளனவா?

■

யாழ் முற்றம்
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
மீண்டும் விரைவில் யாழ் நகரல்..!

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை



பனைசார் உற்பத்திப் பொருட்கள்
தும்பு உற்பத்திப் பொருட்கள்
இயற்கை விவசாய மரக்கறிகள்
இயற்கை விவசாய இடுபொருட்கள்
வீட்டுத்ததோட்ட மரக்கன்றுகள்
இயற்கை உரங்கள்
கைவினைப் பொருட்கள்
மட்பாண்டம்
பாதணிகள்
உலர் உணவுப் பொருட்கள்
கடல் உணவுப் பொருட்கள்
இரசாயணமற்ற ஆரோக்கிய பானங்கள்
ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள்
சித்திரங்கள்
பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)

உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்

# இவன் பிறவாதிருந்திருந்தால்......!

● நெடுந்தீவு மகேஷ்

இயேசு சிலுவையில் அறையுண்டு மரித்த தினம்! கிறிஸ்து இயேசு துயரப் பாடுகளால் தாம் நேசித்த மக்களின் பாவங்களைக் களையும் முனைப்போடு விடிந்த அந்த நாளை நினைவூட்டும் திருநாள்,

புனித வெள்ளிக்கிழமை! பெரிய வெள்ளியாகக் கொண்டாடப்படுகிறது.

அந்தக் கிறிஸ்தவ தேவாலயம் வெள்ளி மணிகள் பொருத்திய வெண்ணிற ஆடைகளாலும் கடதாசிகளாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

இயேசு பிரான் மக்களின் பாவங்களைப் போக்க சிலுவையில் அறையுண்டு உயிர் நீத்த உன்னத தினம்!

வெண்ணாடை தரித்த பக்தர் கூட்டம் தேவாலயத்தின் உள்ளும் புறமும் நிரம்பி வழிகிறது. வெண்மையின் வண்ணம் தூய்மையின் அடையாளமாக..!

பாடல்களால் இறை பக்தியை விசிறி நிற்கும் பிரார்த்தனை எண்ணங்களில் ஒளி பிரகாசிக்கிறது.

ஒவ்வொரு வருடமும் போன்றே இன்றும் அந்தப் பரிசுத்தத் திருநாள், தேவாலயங்கள் தோறும் துயர நிகழ்வாகக் கொண்டாடப்படுகிறது.

தம்மை வருத்தி உயிர்துறந்த இயேசுவை நினைவு கூர்ந்து எமது பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்பை வேண்டி நிற்கின்ற புனித சிலுவைப் பாதைத் திருக்காட்சி!

இயேசுவின் இறப்பை நினைவுகூர்ந்து தேவாலயத்தில் கூடி நிற்கும் மக்களின் முகங்களில் தோய்ந்த துயரம்!

உறுதியாய் உரத்தொலிக்கும் குருவானவரின் பிரசங்கம், வழிபாட்டில் ஒன்றி நின்ற பக்தர்களின் கவனத்தை ஈர்க்கிறது.

'இவன் பிறவாதிருந்திருந்தால் அவனுக்கு நலமாய் இருந்திருக்கும்" என்ற வார்த்தை, எனது காதில் பலமாக ஓங்கி அறைந்தது,

அது என் உணர்வுகளைச் சிலிர்க்கச் செய்கின்றது தேவாலயத்தின் சுவர்களில் அவை மோதி மீண்டும் மீண்டும் எதிரொலித்தன. என்னுள் அவ் வார்த்தைகள் எழுப்பிய வினாக்களால் உறுதியான விடைகாண இயலாமல் நான் தத்தளித்தேன்

கிறிஸ்து இயேசு பல பாடுகளை அனுபவித்துச் சிலுவையில் அறையுண்டு இறக்க நிச்சயிக்கப்பட்ட தினங்களுக்கு முன்னரான ஒருநாள், அவரது சீடருள்ளே ஒருவனான யூதாஸ் காரியோத் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்பதை இயேசு முன்னரே அறிந்திருந்தார். அதனைச் சீடர்களுடனான அந்த இராப்போசன வேளையில் நினைவுபடுத்தி வருந்தும் இயேசுவின் வார்த்தைகளே அவை.

அதனை உரத்துக் கூறி எமது சிந்தனையை இயேசுவின் பாடுகளின்பால் ஈர்த்தார் குருவானவர்!

என் உள்ளத்தில் குருதி கசிந்தது. வேதனை என்னை வாட்டியது.

குருவானவர் தனது அந்தத் திருப்பலி பூசையில் ஆற்றிய பிரசங்கத்தின் வழியே ஒலித்த அர்த்தம் பொலிந்த வார்த்தைகள், தொடர்ந்தும் என்னை வேதனைக்கு உள்ளாக்கின. மனம் கலங்கினேன்!

'நான் ஏன் பிறந்தேன்?" என்ற கேள்வி எனக்குள்ளே என்றோ எழுந்து விடைகாணத் தூண்டும் ஓர் உயிர்ப்புள்ள வினாவாக என்னைத் துரத்தி வருவதை என்னால் சகித்துக் கொள்ள இயலவில்லை!

'இவன் பிறவாதிருந்திருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும்" என்ற திருமறை வாக்கியமோ இப்பொழுது 'ஏன் பிறந்தேன்?" என்ற வினாவையும் இழுத்துக் கொண்டு என்னை. ஓடஓட விரட்டி வந்தது.

இவனும் அவனும் என்னைப் பாடாய்ப்படுத்தினர். நானும் வாழ்தலின், அர்த்தம் புரியாத வாழ்க்கையின் ஆசைகளால் கலங்குகிறேன் இவன் வாழ்வதற்காக அவனை அகற்றவும் அவன் வாழ்வதற்காக இவனை அழிக்கவும் அவனும் இவனும் செய்யும் அநியாயங்களும் அக்கிரமங்களும் அநேகம்.

என்னிடத்திலும் எழுந்து நிற்கும் "ஏன் வாழ்கிறேன்?" என்ற கேள்விக்கான பதிலைக் கண்டறியாமலேயே வாழத் துடிக்கும் எனது உயிர்.

கண்களை மூடி ஜெபித்தேன். சிறிது நேரம் மன ஆறுதல் கிடைத்தது.

அந்த ஆதரவற்ற வயதான மூதாட்டியைக் கொலை செய்து அந்தக் கிழவி சேர்த்திருந்த சிறிய தொகைப் பணத்தையும் நகையையும் களவாடிச் சென்ற திருடன்!

அந்தக் கொடிய கொலைகாரனை நினைந்த போது, இவன் பிறவாதிருந்திருந்தால் நலமானதாக இருந்திருக்குமோ! என எண்ணினேன்.

கண் கெட்ட பின்னெதற்கு சூரிய நமஸ்காரம்! பொய்யும் புரட்டும் பொறாமையும் வஞ்சனையும் சண்டையும் சச்சரவும் வாள் வெட்டும் தூள் கடத்தலும் கொலையும் கொள்ளையும் வழக்கும் கணக்கும் என இத்தனையும் என்னைச் சூழ்ந்து வருத்திக் கொண்டிருக்க அதன் நடுவிலே நான் என்னைக் காத்துக் கொள்ள ஓடிக்கொண்டிருக்கிறேன். வாழத் தவிக்கிறேன்!



ஒருவரோடொருவர் அன்பால் பண்பால் இணைந்து வாழும் வாழ்க்கையை நாம் விரும்பினாலும் அதனை மகிழ்ச்சியாக முனனெடுக்க இயலாதிருக்கிறது. மகிழ்ச்சிக்குத் தடையாக நீதியின் மாண்பறியா மானிடம் என்ற மலை, என் எதிரில் உயர்ந்து தெரிகிறது.

'இவர்கள் பிறவாதிருந்திருந்தால் எமக்கு நலமானதாய் இருந்திருக்கும்!".

இவர்கள் எங்ஙனம் பிறந்தார்கள்? ஏன் பிறந்தார்கள்?

நம்பிக்கையோடு தர்மம் உரைத்தே நல்வழி காட்டிச் சிலர் தேர்தலில் நின்றனர். அவர்தம் சொல்லைக் குழப்பி, பொய்யுரைத்தும் புளுகுரைத்தும் சத்தியத்தின் வெற்றிக்கு எதிராகி அவர்தம் தோல்விக்காய் வழி தேடினார்கள்.

'நீதியைக் கொன்று அநீதிக்கு முலாம்பூசி இப்பொழுது அதனையே ஆராதனை செய்!" என்கிறார்கள்.

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் எவ்வளவு நலமானதாக இருந்திருக்கும்?

இயேசுக் கிறிஸ்துவுக்கு ஒரு யூதாஸ் காரியோத்! பண்டாரவன்னியனுக்கு ஒரு காக்கை வன்னியன்! கட்டபொம்மனுக்கு ஓர் எட்டப்பன்! யூலியஸ் சீசருக்கு ஒரு புரூட்டஸ்!

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமானதாக இருந்திருக்கும்.

நீதிக்காய் போராடியபோதும். போராட்டத்தின் போக்கைத் திசைமாறச் செய்து அப்பாவி மக்களைத் தடுமாற வைத்து அவலத்தில் நீதியைச் சாகவிட்ட காரியோத்களும் அன்றும் எம்முடனே இருந்தவர்கள்தாம். இன்றும் எம்மருகில் இருக்கின்றவர்கள்தாம்.

மனம் அழுதது

இந்த வருடம் தேவாலயப் பூசையில் குருவானவர் செய்த இந்தப் பிரசங்கம் எனது நினைவை வதைத்தது.

மீண்டும் மீண்டும் அந்தச் சிலுவைத் துயரத்தில் இயேசு பட்ட காயங்கள், சிந்திய குருதிகள் மனதில் விரிந்து துன்பக் கடலுக்குள் என்னை ஆழ்த்தின.

இதே போன்ற ஒரு தேவாலயத் திருநாள்! இயேசு உயிர்த்தெழுந்த ஞாயிறு மகிழ்நாள்! தேவாலயங்களிலும் விடுதிகளிலும் குண்டுகளோடு பாய்ந்து ஏதுமறியா அப்பாவி மக்களைக் கொன்று குவித்தார்கள்!

வயோதிபர் பெண்கள் குழந்தைகள் உட்பட அத்தனை நூறு பேர் துடிதுடித்து இறந்தார்கள்! காயங்களோடு அங்கவீனராகி வேதனை மேலிட வினைகெட்டு வாழ்வோர் எத்தனை பேர்? இதற்குக் காரணமானவர்கள் யார்? அவர்கள் ஏன் பிறந்தார்கள்?

இவர்கள் பிறவாதிருந்திருந்தால் நலமானதாக இருந்திருக்கும்.

தேவாலயத்தை விட்டு வெளியே வந்த நான், வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

பாதை நெடுகிலும் விரையும் வாகனங்கள்! நான் பாதை ஓரமாக என் பாதங்கள் நோகாமல் நடக்கிறேன்!

> **வயோதிபர் பெண்கள் குழந்தைகள் உட்பட அத்தனை நூறு பேர் துடி துடித்து இறந்தார்கள்! காயங்களோடு அங்க வீனராகி வேதனை மேலிட வினைகெட்டு வாழ்வோர் எத்தனை பேர்? இதற்குக் காரணமானவர்கள் யார்? அவர்கள் ஏன் பிறந்தார்கள்?**

எனது வீடு அருகிலேதான் உண்டு. வீடு தெரிகிறது! எதிரிலே விரைந்து வந்த முச்சக்கர வண்டியொன்று என்னை மோதித் தள்ளுகிறது! ........ ....... !

நான் நினைவிழந்திருந்த நிலை கடந்து இப்பொழுதுதான் விழித்திருக்கிறேன்.

எனக்குள்ளே, அந்தக் குறித்த விபத்தின் குலைந்த ஞாபகம்!

என் உடம்பின் காயங்கள் வலிக்கின்றன. இந்த மானிடத்தின் வாழ்வு புரியவில்லை.

என்னைமோதித்தள்ளிய முச்சக்கரவண்டியையோ அதனை ஓட்டிவந்த சாரதியையோ நான் அறியவில்லை.

சாட்சிகள்? அவர்களும் தப்பி விட்டார்கள்.

சட்டங்களைத் தமக்காக்கிக் குற்றங்களை வெற்றிகளாக்கிக் கெட்டித்தனமாக வாழ்க்கையை முன்னெடுப்பவர்களாகச் சிலர் சீவிக்கிறார்கள். இவர்கள்?

இவர்கள் பிறவாதிருந்திருந்தால்....!

இயேசுவை முப்பது வெள்ளிக் காசுக்காகக் காட்டிக் கொடுத்த யூதாஸ் காரியோத் தான் செய்த காரியத்துக்காகக் கவலைப்பட்டு அவன் பெற்ற முப்பது வெள்ளிக் காசுகளையும் கோவிலில் எறிந்துவிட்டுப் புறப்பட்டுப் போய்த் தூக்கிட்டுத் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டான்!

நகுலன் - தனங்களப்பு




8 கதை

1990 ஆம் ஆண்டுகாலம். எனக்கு 20 வயதிருக்கும். கேரதீவுக் கடற்பகுதியில் இறால் பிடிப்பில் ஈடுபட்டு வந்த காலம் அது. வள்ளத்தில் சென்றுதான் அந்தக் காலத்தில் தொழில் செய்வது. இயந்திரம் எதுவும் அப்போது இல்லை. பாய் வள்ளத்தில் போவதும் மரக்கலால் (தாங்கு தடி) தாங்கிச் செல்வதும்தான் அந்தக் காலத்தில் இருந்தது.

நானும் மச்சான் சுருளியும் நல்ல நண்பர்கள். இருவருக்கும் ஒரே வயதுதான். ஒன்றாகப் படித்த நாம் அப்பாவுக்கு உதவி செய்வதற்காக அவ்வப்போது அவரவர் அப்பாக்களுடன் தொழிலுக்குச் செல்வது வழமை. அதனால் ஓரளவுக்குத் தொழில் செய்யவும் கற்றுக்கொண்டிருந்தோம். தனித்துத் தொழில் செய்யும் வல்லமையை அதுவரை பெற்றிருக்கவில்லை.

நாம் இருவரும் ஒன்று சேர்ந்தால், ஒரே கதைப்பும் சிரிப்புமாகவே இருப்போம். இதனால் நாங்கள் இருவரும் சேர்ந்து ஊர் சுற்றுவதை இரு வீட்டுக்காரரும் விரும்புவதில்லை. இருப்பினும் நாங்கள் இணைபிரியாத மச்சான்மாராகவே இருந்தோம். இந்த நிலையில் அப்பாவுக்கு உடல் நிலை இயலாமல்போக அவர் கவனித்துவந்த வலைகள், இறால் கூடுகளை மறுநாள் கடலுக்குச் சென்று கட்டாயமாகக் கவனிக்க வேண்டியிருந்தது. நான் தொழிலுக்குப் போகவேண்டி வந்தது.

இந்த நிலையில் நானும் மச்சானுமாகவே அன்று தொழிலுக்குப் போவதென்று முடிவெடுத்தோம். அதற்குரிய ஆயத்தங்களைச் செய்தோம். மாலையில் போய், வலையருகில் வள்ளத்தை நங்கூரமிட்டுவிட்டு அதிகாலைக்கு முன்பாகவே தொழிலை முடித்துக் கொண்டு மீள்வது என்பது எங்களின் திட்டம். எங்கள் இருவருக்குமான இரவுச் சாப்பாட்டை ஒரு பெரிய கிண்ணச் சட்டிக்குள் போட்டுக் கட்டித் தந்தார் அம்மா.

மாலையானதும் வள்ளத்தைத் தாங்கிச் சென்று, வலையைக் கண்டறிந்து அதனருகே நங்கூரமிட்டுவிட்டுக் கதையளக்க ஆரம்பித்தோம். பொழுதுபோனதே தெரியவில்லை. சாமம் 12ஐத் தாண்டிய போதுதான் சாப்பாட்டு ஞாபகம் வந்தது. அப்போதும் கதையை நிறுத்தவில்லை. கதைத்துக் கொண்டே சாப்பிட்டோம்.

நீண்ட நேரமாகிவிட்டதால் சாப்பிட்டபின்னர் தூக்கம் படுவேகத்தில் வந்துவிட்டது. இருவரும் தூங்கிவிட்டோம். தூங்கி ஒரு மணி நேரமாகியிருக்கும் மச்சான் விழித்துவிட்டான். அவனுக்கு ஓங்காளம் ஓங்காளமாக வந்தது. சத்தி எடுக்கத் தொடங்கினான். சத்தியில் சாப்பிட்ட சாப்பாடு அத்தனையும் வந்து சேர்ந்தது. கூடவே ரெத்தமும் போய்க்கொண்டிருந்தது. என்ன நடந்தது? என்ன செய்வதென்று புரியவில்லை. “சாப்பிடும்போது கடலுக்குள் கறுப்பு உருவங்கள் தென்பட்டன என்றும் அவை தலைகள் போல எட்டி எட்டி நாங்கள் சாப்பிடுவதை வாய் பார்த்துக் கொண்டிருந்தன. நீ பயந்துவிடுவாய் என்பதால் நான் அதைச் சொல்லவில்லை” என்றும் மச்சான் சொன்னான். அவன் இப்படிச் சொல்லிய சிறிது நேரத்தில் அவனுக்கு நடந்ததைப்போல எனக்கும் நடந்தது. இருவருக்கும் இயலாமல் போய்விட்டது. உடனடியாகப் பாயை விரித்து வள்ளத்தைக் கரையைநோக்கி விட்டோம். வாடி வதங்கி வீடு வந்துசேர்ந்து நடந்ததை வீட்டாருக்குச் சொன்னோம்.

எங்களது நிலையைக் கண்டு அந்தச் சாமமே அயல்வீட்டார் அனைவரும் எமது வீட்டில் ஒன்று கூடி விட்டனர். மச்சான் எனக்குச் சொன்னதை அவர்களுக்கும் சொன்னான். “அடே... லூசா அப்பிடிக் கண்டவுடனை சாப்பாட்டிலை மேலாலை கிள்ளிக் கொஞ்சத்தை எறிஞ்சிட்டுச் சாப்பிட்டிருக்கலாமேயடா...?” என்று அவர்கள் ஏசினர். அயல் ஊரிலுள்ள முதியவர் ஒருவரிடம் எங்களை அழைத்துச் சென்றனர். அவர் எங்களுக்கு வீபூதி தூவினார். வேப்பங்குலைகளால் அடித்தார். வாய்க்குள் வீபுதியை அள்ளி எறிந்து உமிழச் சொன்னார். விழி பிதுங்கி நின்ற இருவரும் அந்தக் கிழவர் சொன்னதை எல்லாம் அப்படியே செய்தோம். இரண்டு - மூன்று நாள்களின் பின்னர் எங்கள் உடல்நிலை இயல்புக்குத் திரும்பின. ஆனால், மனப் பயம் போவதாயில்லை.

பின்னர்தான் அப்பா ஒரு கதை சொன்னார். “அந்தக் கடல்பகுதியில செல்லடிச்சு நிறையச் சனம் செத்தது. அதுகளின்ர ஆவி எல்லாம் அங்கணை பசியில திரியுதுகள்” என்றார். எங்களுக்குத் தூக்கிவாரிப்போட்டது. பயத்தில் நடு நடுங்கினோம். இது நடந்து சிறிது காலம் வரை நாங்கள் கடல் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை.

“இது உண்மையில்லை. அன்றிரவு நீங்கள் நேரம் தாழ்த்திச் சாப்பிட்டதால் பகலில் அப்பம்மா கட்டித் தந்த உணவு பழுதடைந்துவிட்டது. அதனால் தான் உங்கள் இருவருக்கும் ஒவ்வாமை ஏற்பட்டது. அதனாலேயே சத்தி எடுத்தீர்கள்” என்கிறாள் இந்தக் கதையைக் கேட்ட எனது மகள். விஞ்ஞான விளக்கங்களும் தருகிறாள். அவை எனக்கு விளங்குவதாயில்லை. முட்டாள் அப்பா என்று அவள் என்னைக் கடிகிறாள். அவளுக்குப் போய் - பிசாசுகளில் நம்பிக்கையில்லை. ஆனாலும் என்னால் மறக்க முடியாத அனுபவம் அது. ■

உங்களுக்கு தேவையான பொருட்களினை
வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ள

Semba Store

Semba STORE



077 4 11 44 22

551A கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்





# ட்ரம்பின் மருந்து எல்லோருக்குமானதா?

செம்மண்ணில் நாம் தொடர்ந்து எச்சரித்து வந்த விடயம் இப்போது பெரும் பேசுபொருளாகிட்டது. உலக நாடுகள் பலவும் கொரோனாவால் திணறியடித்துக் கொண்டிருக்க எம்மவர்கள் அதிலிருந்து தப்பித்துவிட்டோம் என்ற எகத்தாளத்தில் அசட்டையாகத் திரிந்தனர். பொதுச் சுகாதாரம் மற்றும் கொரோனாப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தூர வீசிவிட்டுச் சுதந்திரமாக உலாவினர்.

நீண்ட முடக்கங்கள் மற்றும் கடுமையான சுகாதாரப் பின்பற்றல்கள் காரணமாக முதற் கட்டப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு வந்த நிலையில் அதை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கிடையில் அதில் காட்டிய தளர்வே இப்போது பெரும்பாய்ச்சலாகக் கொரோனாவை ஆக்கிவிட்டிருக்கிறது. சமூகப் பரவலாகிவிட்டது என்று பலரும் பதறத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் நாம் மாத்திரமே.

தீவு நாட்டுக்குள் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குரிய வழிவகைகள் பல கைவசமிருந்தும் அதைச் செய்யத் தவறியிருக்கிறோம். அல்லது மிக நுணுக்கமான கவனத்துடன் செயற்படத் தவறியிருக்கிறோம். அதன் விளைவே இந்தப் புதிய அலை.

### கொரோனாவா...? கொக்கா...?

எம்மில் பலரைப் போலவே கொரோனாவா...? கொக்கா...? என்று கொரோனாப் பெருந்தொற்றை ஊதாசீனப்படுத்தி வந்தவர் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். ஆண்டி ஆனாலும் அரசன் ஆனாலும் எவரையும் விட்டுவைக்காது கொரோனா என்பதற்குச் நல்ல உதாரணம் அவர்.

நாட்டு மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய அவர் ஆரம்பத்திலிருந்தே முகக்கவசம் அணியாமல் முரண்டுபிடித்து நின்றார். நாட்டை முடக்கத் தேவையில்லை என்று கேலியாகத் தெரிவித்தார். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதைத் தவிர்த்து வந்தார். அதன் விளைவாக இன்றைக்கு அவரும் தொற்றாளராகி, அவரது இல்லமான வெள்ளை மாளிகை முழுவதும் கொரோனா வலயப் பகுதி என அறிவிக்கப்பட்டுவிட்டது.

ட்ரம்ப் மாத்திரமன்றி அவரது மனைவி மெலானியா மற்றும் பணியாளர்கள் பலரும் கூடக் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். ட்ரம்ப் மாத்திரமல்ல முன்னதாகப் பிறேசில் அதிபரும் இவ்வாறு நடந்து கொண்டு தொற்றுக்குள்ளாகியிருந்தார்.

### ட்ரம்புக்கு ஏற்றப்பட்ட புது மருந்து

கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிக்கும் பணிகள் பல நாடுகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல தொடர் ஆய்விலும் - ஆய்வு முடிவை எதிர்பார்த்தும் இருக்கின்றன. இந்த நிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட ட்ரம்புக்குப் புது மருந்து ஒன்றைச் செலுத்தியிருக்கிறார்கள். இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு 'ரெம்டெசிவிர்' எனும் வைரஸ் எதிர்ப்பு மருந்தும் 'டெக்சாமெத்தசோன்' எனும் ஸ்டீராய்ட் மருந்தும் உடனடியாக வழங்கப்பட்டு இரண்டு முறை ஒட்சிசன் செலுத்தப்பட்டுப் பின்னர் 'ரீஜென்-கோவ்2' ( REGN-COV2 ) எனும் மருந்து வழங்கப்பட்டுள்ளது. இது கொரோனாவுக்கு நேரடியாகச் சிகிச்சையளிக்கும் மருந்து இல்லை. அமெரிக்காவின் மருந்துகள் ஆணையகத்தால் அங்கீகரிக்கப்படவும் இல்லை. ஆய்வு நிலையில் உள்ள இந்த மருந்தை இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்ட எவருக்கும் ஏற்றவும் இல்லை. இந்த நிலையில்தான் ட்ரம்புக்கு இது ஏற்றப்பட்டுள்ளது. 'ஹைட்ரொக்ஸி குளோரோகுயின்'னைக் கொரோனாவுக்குரிய மருந்தாக ட்ரம்ப் அறிவித்து வந்திருந்தபோதும் அந்த மருந்தை அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்பது கொசுறுத் தகவல்.

### எதிரணு மருந்து இது

இந்தப் புதிய மருந்து 'குருதி எதிரணுக்களைக் (ஆண்டிபாடி) கொண்டு கொரோனாவைக் கட்டுப்படுத்தலாம்' எனும் அடிப்படை அறிவியலில் தயாரிக்கப்பட்டது. எதிரணுக்களை இயற்கையாகவும் பெறலாம், செயற்கையாகவும் தயாரிக்கலாம். உதாரணத்துக்கு, 'பிளாஸ்மா சிகிச்சை'யைச் சொல்லலாம்.

அமெரிக்கா, சீனா உள்ளிட்ட பல நாடுகளில் பிளாஸ்மா தானம் மூலம் இயற்கையாக் கிடைக்கும் எதிரணுக்களைப் பெற்றுக் கொரோனா தொற்றாளர்களுக்குச் செலுத்துகிறார்கள். இது இயற்கை வழி. ஆனால், இது ட்ரம்ப்புக்கு வழங்கப்படவில்லை. மாறாகச் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட மருந்து செலுத்தப்பட்டுள்ளது.

புதிய தயாரிப்பான இது, 'ஒற்றைப்படியாக்க எதிரணு மருந்து' வகையைச் சேர்ந்தது. வைரஸ், பக்ரீரியா, புற்றுநோய்ச் செல்களை அழிக்கும் ஆற்றல் உடையது. புற்றுநோய், கீல்வாத மூட்டுவலி மருந்தாக இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த இந்த மருந்தைத் தான் ட்ரம்புக்குக் கொடுத்துள்ளனர். ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் பல மருந்துகளைப் புறந்தள்ளிவிட்டு, ஆய்வு நிலையில் உள்ள இந்தப் புதிய மருந்தை அமெரிக்க அதிபருக்கு வழங்கியது ஏன் என்று பல வட்டாரங்கள் தேடத் தொடங்கியிருக்கின்றன.

### தயாரிப்பில் புதுமை

இந்த மருந்தானது இரண்டு ஒற்றைப்படியாக்க எதிரணுக்களை முதலில் உருவாக்கிக்கொண்டது. அதாவது கொரோனா தொற்றாளர்கள் உடல் நிலை தேறிவரும்போது அவர்கள் குருதிப் பிளாஸ்மாவில் உருவாகும் எதிரணுக்களை சேகரித்து, சுண்டெலிகளுக்குக் கொரோனா கிருமிகளைச் செலுத்தி, 3 வாரங்கள் கழித்து அவற்றின் குருதியில் உருவாகும் எதிரணுக்களைச் சேகரித்து அந்த இரண்டையும் ஆய்வகத்தில் செயற்கைமுறையில் ஒன்றாக இணைத்து, மரபணுப் பொறியியல் முறையில் ( Genetic engineering) கொரோனா கிருமிகளைத் தாக்கும் தன்மையை அதில் புகுத்தி மருந்தாக்கினர்.

இந்த எதிரணு மருந்தில் மனித மரபணு, விலங்கு மரபணு ஆகிய இரண்டும் உள்ளன. கொரோனாவானது விலங்கிலிருந்து மனிதர்களுக்குப் பரவியதாகக் கருதப்படுவதால், இந்த இரட்டை எதிரணு மருந்தால் பயன் கிடைக்கலாம் என்று நம்பப்படுகிறது. அந்த நம்பிக்கையில்தான் அதை ட்ரம்புக்கு ஏற்றியுள்ளனர். இதன் செயல்திறன் என்னவென்றால், வைரஸின் கூர்ப்புரதங்களை இந்த எதிரணுக்கள் அடியோடு ஒழித்துவிடும். அதன்பின் கொரோனா கிருமிகளால் மனித உடல் செல்களுக்குள் நுழைய முடிவதில்லை. அவை பலமிழந்து முழுவதுமாக அழிந்து போகின்றன.



''இந்த எதிரணு (ஆன்டிபாடி), நோயைக் குணப்படுத்தும் என்பதைவிட வைரஸின் தீவிரத்தைக் குறைக்கும். இது நோய்த்தொற்றைத் தடுக்காது. நோய்த்தொற்று ஏற்பட்டால் அது தீவிரமாகாமல் தடுக்கும். இதுதான் அந்த மருந்தின் வேலை. வைரஸின் அளவைக் குறைப்பதால் உள்ளுறுப்புகள் சேதமடைவது குறையும். கோவிட்-19 சிகிச்சைக்குக் கொடுக்கப்படும் ரெம்டெஸ்விர் மருந்தின் வேலையும் கிட்டத்தட்ட இதுதான்.

தாக்கத்தைக் குறைப்பதற்காகத்தான் இந்த மருந்து கொடுக்கப்படுகிறது என்பதால் அனைவருக்கும் இந்த மருந்தைக் கொடுக்க முடியாது. அதனால்தான் தடுப்பு மருந்து உற்பத்தியில் மருந்து நிறுவனங்கள் கவனம் செலுத்துகின்றன. இதுபோன்ற ஆன்டிபாடி மருந்துகளில் கவனம் செலுத்துவதில்லை'' என்கிறார் இந்தியாவைச் சேர்ந்த மருத்துவரான அஸ்வின் கருப்பன்.

இந்த மருந்தின் திறன், தன்மையை பரிசோதனை செய்ததற்கான தரவுகள், ஆதாரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. தற்போதும் இது பரிசோதனை அளவில்தான் உள்ளது. அமெரிக்க அதிபருக்கே கொடுத்துவிட்டதால் அதனை மக்கள் பயன்பாட்டுக்கு கொடுக்க வேண்டும் என அந்நிறுவனம் வலியுறுத்துகிறது. ட்ரம்ப்புக்கு அளித்த சிகிச்சை வெற்றியடைந்தபடியால் அதைப் பொதுமக்களுக்கும் வழங்க அனுமதிக்க வேண்டும் என அந்த மருந்து நிறுவனம் எஃப்.டி.ஏ-வுக்கு கடிதம் எழுதியுள்ளது. மேலும் தங்களிடம் **50,000** மருந்துகள் **(Doses)** தயாராக இருப்பதாகவும், அனுமதி அளிக்கும்பட்சத்தில் கூடுதலாக உற்பத்தி செய்யவும் முடியும் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மருந்தின் ஒரு டோஸ் என்பது 4 கிராம். ட்ரம்ப்புக்கு இரண்டு டோஸ் அதாவது 8 கிராம் அளவு கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்று அல்லது இரண்டு டோஸ்தான் கொடுக்க வேண்டும். மாத்திரையாகவும் நரம்பில் செலுத்தக்கூடிய மருந்தாகவும் இது இருக்கும். பரிசோதனையில் உள்ளதால் எந்த நோயாளிக்கு என்ன அளவு மருந்து கொடுக்க வேண்டும், யாருக்கு கொடுக்க வேண்டும், கொடுக்கக் கூடாது என்பது வரையறுக்கப்படவில்லை.

### நமக்கெல்லாம் கிடைக்குமா இந்த மருந்து?

அமெரிக்க அதிபருக்கு இந்த மருந்து வழங்கப்பட்டுள்ளதால் விரைவில் இது கொரோனாவுக்குரிய மருந்தாக அறிவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்த மருந்தைத் தயாரித்த நிறுவனமான ரீஜெனிரானின் பங்குகள் சென்ற வாரப் பங்குச்சந்தையில் பல மடங்கு எகிறியுள்ளன. எனவே இந்த மருந்து இனி மெல்ல மெல்ல உலகு முழுதும் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இதன் மதிப்பீடு - விலை குறித்த தகவல்கள் எவையும் இதுவரை வெளியிடப்படவில்லை. அமெரிக்காவில் இந்த மருந்து பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டதும் அதனை இலவசமாக வழங்கப்போவதாக அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். அதனால், அமெரிக்காவிற்கு வெளியே அதன் விலை மற்றைய நாடுகளுக்கு அதிகமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# வழிப்போக்கன்

● ரதிதேவி

அந்த மங்கிய மாலையில் ஒரு தாய் தனது இடது கையால் தனது மகளின் கையைப் பிடித்து தர தரவென்று இழுத்துக்கொண்டு, நல்லூர் ஆலயத் தெற்கு வீதியிலே அவசரம் அவசரமாக நடந்து செல்கிறாள். அவள் எங்கே செல்கிறாள்? ஏன் இந்த வேகம்?

மங்கிக் கிடந்த வானம் அந்த நேரம் பார்த்துச் சடாரென்று மழையைப் பொழிகிறது. அவள் கை அந்தக் குழந்தையின் கையை இறுகப் பிடித்துக்கொள்கின்றது. அவள் கண்கள் திடீரெனக் குருடாகி விடுகின்றன.

இருள், மழை, கைப்பிடியில் மகள், எங்கேயோ செல்லவேண்டிய அவசரம்... இவற்றுக்கு நடுவில் அவளது கண்கள் பார்வை இழந்துவிட்டன. மனம் பயத்தின் வசப்பட்டு உழன்றது. வீதியில் கடந்து செல்கின்ற உந்துருளிகள், லொறிகள், தனியார் வகுப்பு முடிந்து பம்பல் அடித்துக்கொண்டு செல்கின்ற பெடியன்மாரின் கதைகளுக்கு நடுவில் தனது திறன் பேசியை எடுக்கிறாள்.

பொத்தான்கள் இல்லாத அந்த நவீன பெட்டகம் உயிரற்றுக் கிடக்கிறது. அவள் இடர்ப்படுவதைக் கவனித்துக் கொண்டிருந்து அப்பொழுது உதவி செய்வதற்கு ஒருவன் அவளை நாடுகின்றான். மழையின் சத்தம் ஓயாமல் மழைத்து துளிகள் ஓய்ந்ததால் தன் தலையின் மீது வானம் இடிந்து வீழ்ந்திருக்க வேண்டும், இல்லையேல் யாரோ தனக்குக் குடை பிடித்திருக்க வேண்டும் என அறிகிறாள். தன் அருகே குடையோடு ஒருவன் நிற்பதை உணர்கிறாள். யாரது என்று அவள் கேள்வியெழுப்பத் தயாராகும் பொழுது...

"என்ன நடந்த?" அவன் வினவுகிறான்.

அவள் விளங்கப்படுத்துகிறாள். மகளை இன்னும் இறுக்கமாகப் பிடித்துக்கொள்கிறாள். ஆரம்பத்திலிருந்து அழுதுகொண்டிருந்தவள் தற்பொழுது இன்னும் பிலத்து அழுகிறாள், ஆனால் அவளின் அழுகை மழையின் பேரோசையிடம் போட்டியிட முடியாமல் காணாமல்போகிறது. தொலைந்து போகிறது. தன் திறன் பேசியில் தன் தாயாரின் இலக்கம் இருப்பதாகவும், அதற்கு அழைப்பினை ஏற்படுத்தித் தருமாறும் பரிதாபத்துடன் கேட்கிறாள்... திறன் பேசியின் கடவுச்செல்லை அவன் கேட்கிறான். அச் செல் ஏதோ ஒரு திகதி, அவளின் திருமணத் திகதியாகக்கூட இருக்கலாம்...?

"பத்தொன்பது சைவர் ஒண்டு இரண்டாயிரத்திப் பன்ரெண்டு"

இரண்டாயிரம், அதைச் சொல்லி முடிக்கும் பொழுது அவள் அழுகை விம்மிக் குமுறிக் கொண்டு வெளியே வருகிறது. அந்த முகம் தெரியாத ஆள் சொய்வதறியது திகைத்து நிற்கிறான். அவனுக்கு அந்த இரண்டு கடைசி இலக்கங்கள் கேட்கவில்லை. அவளின் அழுகையைக் குறுக்கிட்டுக் கேட்டுத் தெரிந்து கொள்கிறான்.

"இரண்டாயிரத்திப் பன்ரெண்டு"

அழுகையின் இடைவெளியில், மூச்சு விடும் இடைவெளியில், அவ் வார்த்தைகளை உதிர்த்து முடிக்கிறாள்.

"அடிக்குதா போன்?...ஹலோ... அண்ணா... அண்ணா"

அந்த வீதியில் வாகனங்கள் கடந்து போய்க் கொண்டிருக்கின்றன. நேரம் கடந்து போய்க் கொண்டிருக்கின்றது. அவளுக்கோ அவசர மிகுதி...?

"அண்ணா அண்ணா போன் அடிக்குதா?" அந்த முகம் தெரியாத நபர் பதில் சொல்ல மறுக்கிறான். ஆனால் அவன் இன்னும் அங்கு தான் நின்றுகொண்டிருக்கிறான். இதனால் மழை இன்னும் அவள் மீது படவில்லை.

"அண்ணா அண்ணா போன் அடிக்குதா? அவசரமண்ணே ஒருக்காப் போகோணும்"

"இல்லை... காசில்லையெண்டுவருகுது, நான் படக்கெண்டு உதுல போய் ஒருக்கா ரீலோட் போட்டு வந்துர்றன், இந்தக் குடையப் புடிச்சுக்கொண்டு நில்லுங்கோ தங்கச்சி"

"அ..ஆ... காசு போட்டனானே, அந்த 345 ரூவாய்க் கார்ட் போட்டனான் அண்ண, அது முடிஞ்சிருக்காது... திரும்பயும் ஒருக்கா அடிச்சுப் பாருங்கோ அண்ணே"

"இல்லைத் தங்கச்சி காசு முடிஞ்சுதெண்டு சொல்லுது, சரி நீங்க இந்தக் குடையைப் பிடியுங்கோ நான் உதுல படக்கெண்டு போய் ரீலோட் போட்டுட்டு வந்திர்றன்"



> **கண்களை மூடி அழுகிறாள். தனது மகளை அள்ளி மார்போடு அணைத்து வைத்து அழுகிறாள். வீதியில் செல்லும் பலர் திரும்பிப் பார்த்த வண்ணம் செல்கிறார்கள். சிலர் 'என்ன பிரச்சனை?' என வினவுகிறார்கள். அவளின் கோபம் பதில் கூறாமையாக மாறுகிறது. அவளுடைய கோபம், அழுகையாக மாறுகிறது. பதில் கூறாமல் அழுகிறாள்.**

"அண்ண இது பெர்ஸ விட்டுட்டு வந்திட்டன் அண்ண, காசு கையில இல்லை"

"அது பரவாயில்லத் தங்கச்சி, நீங்க இந்தக் குடையப் பிடியுங்கோ நான் காசு போட்டிட்டு வர்றன்"

குடையை அவள் கைகளில் திணித்து விட்டுச் செல்கிறான்.

வாகனங்கள் கடந்து செல்கின்றன. நேரம் கடந்து செல்கின்றது. சென்றவன் திரும்பி வரவில்லை. தனது ஐ - போனை அவன் திருடிச் சென்றிருக்க வேண்டும் என்பதை அப்பொழுது தான் அவள் உணர்கிறாள்.

அடித்த காற்றால் குடை வளம் பிரள்கிறது. இழுத்துச் செல்லப்படுகிறது. அதை இழுத்துப் பிடிக்கக் கூட அவளுக்குத் திராணி இல்லை. அவளது வலது கையில் சக்தியில்லை. ஆனால் இடது கை, இன்னும் வைராக்கியமாக, இன்னும் உக்கிரமாக அவள் மகளைப் பற்றியுள்ளது. இடது கை சக்தி உள்ளதாக இருக்கிறது. வலது கை சக்தி இழந்ததாக இருக்கிறது. ஒரு விதமான பக்கவாதம், அவள் மூளை, இதயம், உடல் அனைத்தையும் ஊடுருவுகிறது.

கண்களை மூடி அழுகிறாள். தனது மகளை அள்ளி மார்போடு அணைத்து வைத்து அழுகிறாள். வீதியில் செல்லும் பலர் திரும்பிப் பார்த்த வண்ணம் செல்கிறார்கள். சிலர் 'என்ன பிரச்சனை?' என வினவுகி றார்கள். அவளின் கோபம் பதில் கூறாமை யாக மாறுகிறது. அவளுடைய கோபம், அழுகையாக மாறுகிறது. பதில் கூறாமல் அழுகிறாள். அதனால் சலித்து உதவி கூற வந்தவர்கள் சிலர் திரும்பிச் செல்கிறார்கள். ஒரு சிலர் அவளைச் சூழ நிற்கிறார்கள். அவள் அழுகிறாள். மகள் அழுகிறாள். வானம் அழுகிறது.

கண்களை மூடி அழுதவள் கண்களைத் திறக்கும் பொழுது அவளை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் பன்னிரண்டு கண்களைக் காண்கிறாள். அச்சிறு கூட்டத்தை விலக்கிக் கொண்டு விறுவிறுவென அவள் நடையைத் தொடர்கிறாள். அந்தக் குழந்தை அழுகையைத் தொடர்கிறது. 'ரியோ ஐஸ் கிறீமை' கடக்கும் பொழுது அங்கு பெரிதாக ஒட்டப்பட்டிருந்த காஜல் அகர்வால் ஐஸ் கிறீம் அருந்தும் ஒளிப்படத்தைப் பார்த்துத் தன் அழுகையை மறக்கிறது குழந்தை. காமத்தை, இறப்பை வெல்லும் அமிர்தத்தைப் பற்றியெல்லாம் அறியாத, ஐஸ் கிறீம் மட்டுமே அமிர்தம் என அறிந்த அந்தப் பருவம், பூக்களிற்கு இடையில் மட்டும் நிறுத்தும், வண்ணத்துப்பூச்சி தோளில் தூக்கிச் செல்லும், அதிவேக சொகுசுப் பயணம் அது. ஆனாலும் தாய் இப்போதும் விறு விறு என நடக்கிறாள்.

'நொதேர்ன் சென்ட்ரல்' ஆஸ்பத்திரியுள் நனைந்த காலினால் மார்பிளில் கால் தடங்கள் பதித்த வண்ணம், 'லிப்ட்' டுக்குள் ஏறி மேல் மாடிக்குச் செல்கிறாள். அங்கு அவள் கணவன் விபத்திலிருந்து உயிர் பிழைத்து விட்டதாகவும், ஆபத்துக் கட்டத்தைத் தாண்டி விட்டதாகவும் மருத்துவர்கள் அவளுக்குக் கூறுகிறார்கள்.

"அம்மா ஐஸ் கிறீம் வாங்கித் தா"

தன் மகளை அணைத்து முத்தமிடுகிறாள். வீதிக்கு மறுபுறம் உள்ள கடையில் மகளுக்கு ஐஸ் கிறீம் வாங்கலாமா என்று பார்ப்பதற்காக அழைத்துச் செல்கிறாள். அப்பொழுது ஒரு நோயாளியைச் சுமந்தபடி காவுகை வண்டி வேகமாக ஆஸ்பத்திரி வாயிலில் வந்து நிற்கின்றது. அதிலிருந்து குருதி தோயத் தோய ஒருவனை இறக்குகிறார்கள். மகளின் கண்களைத் தனது கைகளால் பொத்திக்கொள்கிறாள். குருதியில் தோய்ந்தவனின் வலது கை இறுக்கமாகப் பற்றிக்கொண்டிருக்கிறது அவளது ஐ-போனை.

■

# வத்திக்கானில் அதிர்வலைகள்...!





மிகச் சிறிய நகரம் வத்திக்கான். இத்தாலியின் உரோம் நகரில் இருந்தாலும் தன்னாட்சி அதிகாரத்தைக் கொண்ட தனிப் பிராந்தியம் அது. வத்திக்கான் என்கிற இந்தச் சிறு நகரம் தன்னாட்சி அதிகாரத்துடன் தொடர்வதற்கும் தனித்துவமாக இருப்பதற்கும் காரணம் கத்தோலிக்கர்களின் தலைமையிடமாக அது தொடர்ந்து பேணப்பட்டு வருவதே. இதன் திருச்சபையே ஆட்சிக்குரியது. ஒரு வகையான அரசமைப்பின்படி இதை உரோமின் பிசப் எனும் பீடத்திலுள்ள போப் வழி நடத்துகிறார். இதன் உயர்நிலை அலுவலர்கள் அனைவரும்கூட வத்திக்கானின் தேசிய மரபுகளைப் பின்பற்றுகின்ற மதகுருக்களாகவே இருக்கின்றனர்.

உயர் மதப்பீடமாகக் கொண்டாடப்படுகின்ற வத்திக்கானின் நிலை இப்படியிருக்க அதற்குக் களங்கத்தை ஏற்படுத்தும் விவகாரம் ஒன்றால் அண்மைக்காலமாக அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது வத்திக்கான். அங்கு பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டனர் என்கிற குற்றச்சாட்டின்பேரில் பாதிரியார்கள் இருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அங்குள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் 2007ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டுகளுக்கிடையான காலத்தில் திருச்சபை உதவியாளராகப் பணியாற்றி வந்த சிறுவன் ஒருவனை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் என்று கப்ரியல் மார்டினெல்லி என்கிற 28வயதுடைய பாதிரியார் மீதும் அவர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டார் என்று சந்தேகிக்கப்படுகின்ற காலகட்டத்தில் வத்திக்கானில் உள்ள அந்தச் சமயப்பள்ளிக்குத் தலைமை தாங்கிய என்ரிகோ ரேடைஸ் என்கிற 72வயதுடைய பாதிரியாரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். காரணம் பொறுப்பு மிக்க பதவியிலிருந்த அவர் இந்தச் சம்பவத்தை மூடி மறைத்தார் என்று அவர் மீதும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாம்.

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் கிறிஸ்தவப் பாதிரியார்கள் இதுபோன்ற பாலியல் மீறல்களில் ஈடுபட்டிருந்தனர் என்கிற செய்திகள் இதுவரை காதுக்கெட்டியிருந்தாலும் வத்திக்கானில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளதான தகவல் சற்றுத் திடுக்கிடத்தக்கதாகவே இருக்கிறது. வத்திக்கானில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விசாரணை நடைபெறுவதும் இதுவே முதல் முறையாம்!

## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | 4 | | 6 | |
| 3 | | | | 6 | 8 | 2 | | |
| 4 | 6 | | | 9 | | | | 1 |
| | | | | | 1 | | 4 | |
| | 3 | 4 | | 5 | | 7 | 2 | |
| | 9 | | 2 | | | | | |
| 6 | | | | 8 | | | 7 | 9 |
| | | 9 | 3 | 2 | | | | 8 |
| | 7 | | 9 | | | | 5 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
**551 A,** கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 6 | 8 | 4 | 5 | 1 | 7 | 9 |
| 4 | 8 | 7 | 6 | 1 | 9 | 5 | 2 | 3 |
| 9 | 1 | 5 | 7 | 2 | 3 | 6 | 8 | 4 |
| 7 | 9 | 2 | 5 | 6 | 8 | 4 | 3 | 1 |
| 6 | 4 | 8 | 3 | 9 | 1 | 7 | 5 | 2 |
| 1 | 5 | 3 | 4 | 7 | 2 | 8 | 9 | 6 |
| 2 | 6 | 1 | 9 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 7 | 4 | 2 | 3 | 6 | 9 | 1 | 5 |
| 5 | 3 | 9 | 1 | 8 | 4 | 2 | 6 | 7 |

## செம்மண்

**வாரமலருக்கு...**

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்


ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

## கார்ட்டூன்



## மாரியைப் பயனுள்ளதாக்குவோம்...!


பருவ மழைக்காலம் ஆரம்பிக்கும் தறுவாயில் இருக்கிறது. கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் இந்த மாரி மழையை நாம் எதிர்கொள்ளவிருக்கிறோம். யாழ்ப்பாணத்தாரைப் பொறுத்தவரையில் வானம் தரும் கொடை இந்த மழை. குளங்கள் அற்ற தேசமான இங்கு பயிர் நிலங்கள் மக்கள் தொகைக்கு ஏற்ப இருக்கின்றன.

தற்போதுள்ள கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நாடுகளுக்கிடையே இருந்து வந்த உணவுப் பொருள்களின் பரிமாற்றம் - ஏற்றுமதி - இறக்குமதி ஆகியன தடைப்பட்டுள்ளன. உணவுப் பொருள்கள் மாத்திரமல்ல எந்தவொரு போக்குவரத்தும் இல்லாமையால் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும்கூடத் தடைப்பட்டுத்தான் கிடக்கின்றன. ஆனாலும் இப்போதைக்கு முக்கியமானது உணவே.

ஆகையால் எதிர்வரும் மழைக்காலத்தை நன்கு பயன்படுத்தி நாம் அனைவருமே பயிர்ச் செய்கைகளில் ஈடுபடவேண்டும். இதனால் நமக்குரிய தானியங்களை நாமே உற்பத்தி செய்துகொள்ள முடியும். பெரும் தோட்டங்கள், வயல்கள் (நெற்செய்கை) தொடங்கி சிறியளவிலான வீட்டுத் தோட்டங்கள் என எப்படியெல்லாம் விளைச்சல்களைப் பெற முடியுமோ அவ்வாறெல்லாம் இம்முறை விளைச்சல்களைப் பெற்றுவிட வேண்டும்.

இதனால் இந்தப் பெருந்தொற்று முடக்கத்தால் உண்டாகின்ற உணவுத் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்விலிருந்து எம்மை நாமே தற்காத்துக்கொள்ள முடியும். அல்லது ஓரளவுக்காவது இந்தத் தட்டுப்பாட்டுச் சூழலுக்குத் தாக்குப் பிடிக்க முடியும்.

பயிர்களை வளர்ப்பதற்கு நீர் இல்லாமை எங்களுக்குப் பெரும் பிரச்சினை என்று சிறியளவிலான வீட்டுத் தோட்டங்களைத் தவிர்ப்பவர்கள்கூட இந்தப் பருவ மழைக்குள் அதைத் திட்டமிட்டுச் செய்து பயன் பெற முனையவேண்டும். இதற்காகக் குறுகிய காலத்துக்குள் வளர்ந்துவிடக்கூடிய சிறு பயிர்வகைகளை இணங்கண்டு, முளைதிறனுள்ள மற்றும் அதிக விளைச்சலைத் தரக்கூடியதான அவற்றின் விதைகளைத் தெரிந்தெடுத்துப் பயிர் செய்து நன்மையடைய முயற்சிக்க வேண்டும்.







உங்கள் மனங்கவர்ந்த காமிக்ஸ் புத்தகங்கள்!
இலங்கையிலும் விற்பனையாகின்றன!

யாழ்ப்பாணத்தில்
பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்

கொழும்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944

https://www.facebook.com/tamilcomics/

லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமைச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! - வெளியீட்டாளர்


## எந்நாளும் நலம் வாழ

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

### கடுக்காய் - இன்னொரு தாய்

கடுக்காய் அருமருந்தாம் காசினியில் தினமருந்தத்
தீருமாம் மலசிக்கல் வாதம் நீங்கும் எடுப்பாக
- உடல் தோன்றும் இளமைகொஞ்சும்
கண் நோய்கள் தொண்டைப்புண் வயிற்றுவலி
தடுக்கும் கண்மணியே கடும் புண்ணகற்றும்
பல்லுறுதிசெய்யும் பிரமேகம் தான் கொல்லும்
கொடுக்குமாம் நல்ல புத்தி கோமளமே
மேகமொடு மூலமும் நீக்குமாம் இது

**விளக்கவுரை:**

இந்த பூமியிலே உள்ள மூலிகைகளில் கடுக்காய் ஓர் அருமருந்தாகும்.

கடுக்காய் தூளை இதமான வெந்நீரில் கலந்து சாப்பிட்டு தினமும் இரவில் அருந்தி வர மலச்சிக்கல் நீங்கும் நமது உடலில் ஓடும் குருதியில் சேர்ந்திருக்கும் நச்சுக்கள் எல்லாம் நீங்கி ரத்தம் சுத்தியாகும். இது வாதத்தையும் கண்டிக்கிறது. இதனால் உடல் வன்மையும் அழகும் பெறுகிறது.

மேலும் கண்ணில் ஏற்படும் நோய்களையும் நீக்குகிறது. தொண்டையில் ஏற்படும் தொற்றுகளை நீக்குவதோடு வயிற்றுவலிக்கும் மருந்தாகிறது. சுடுநீரில் கடுக்காய் அடங்கிய திரிபலா சூரணத்தை இட்டு வாய் கொப்பளிக்க தொண்டை வலி நீங்கும் கடுக்காய் சூரணம் ஒரு சிட்டிகை மூன்று வேளை சுடு நீரில் அருந்த வயிற்றுவலி குணமாகும்.

ஆழமான குளிப்புண்களை ஆற்றும் ஆற்றல் கடுக்காய்க்குண்டு.

வாய்ப்புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், இரைப்பைப் புண், குடற்புண், ஆசனப்புண் எனப் பல வகையான புண்களுக்கு மருந்தாக சித்த மருத்துவ நூல்கள் இதை குறிப்பிடுகின்றன, இதன் தூளை களிம்பு செய்து போட புண்கள் ஆறும். இதன் தூளை பற்பொடியாக பல்துலக்க பல்லீறுகள் இறுகும். முரசு நோய்கள் குணமாகும். நீரிழிவு நோய்க்கும் இது சேரும் திரிபலா சூரணத்தை பயன்படுத்துகிறார்கள். கடுக்காய் உடல் மற்றும் மனதில் பாதிப்புகளை ஏற்படுத்த கூடிய எதிர்மறை சக்திகளை அறவே நீக்கும் திறன் கொண்டது. கடுக்காயை மருந்தாக அவ்வப்போது சாப்பிட்டு வருபவர்களுக்கு மன நலம் சிறப்பாக இருக்கும்.

முத்துக்களில் கோமளமுத்தை போன்றவளே கடுக்காய் மலமிளக்கியாக செயற்பட்டு மூல வியாதிக்கும் குணமளிக்கிறது. அது மட்டுமன்றி மேகநோய் எனப்படும் பாலியல் சார்ந்த நோய்க்கும் கடுக்காய் மருந்தாகிறது.

குறிப்பு: கடுக்காயின் தோல் பகுதியே மருந்தாக எடுத்துக்கொள்ளப் படுகிறது இதன் கொட்டை விதை நஞ்சாகும்

*சிட்டிகை மூன்று விரலால் எடுக்கக்கூடிய மருந்தின் அளவு



## முகக் கவசம் அணியாமல் கடைக்குள் நுழையத் தடை!

கெரோனாப் பெருந்தொற்றின் அடுத்த கட்டப் பரவல் ஆரம்பித்துள்ளதால் முகக் கவசம் அணியாதவர்கள், சமூக இடைவெளியைப் பின்பற்றாதவர்கள் மற்றும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கையில் அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், முகக் கவசம் அணியாத வாடிக்கையாளர்களை உள்ளே நுழையத் தடைவிதிக்கும் வகையிலான தானியங்கிக் கதவுகளை நிறுவியுள்ளதாம் தாய்லாந்தில் ஒரு கடை. கடைக்கு வருகின்ற நபர் முகக் கவசம் அணிந்தவாறு வந்தால் மாத்திரமே அவரது உடல் வெப்பநிலை கண்டறியப்பட்டு (அதுவும் இயந்திம் மூலமான செயற்பாடுதான்) அவரது உடல் நிலை சரியானதாக இருந்தால் அந்தத் தானியங்கி கதவுகள் திறந்து அவரைக் கடைக்குள் அனுமதிக்குமாம். முகக் கவசம் அணிந்த வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே தனது கடையின் கதவுகள் திறந்திருக்கும் என்பதைப் பெருமையுடன் விளம்பரப் படுத்தியும் வருகிறதாம் குறித்த கடை.



# தி பியானிஸ்ட்




**2002** ஆம் ஆண்டு வெளிவந்த ஆங்கிலத் திரைப்படம் தி பியானிஸ்ட். பிரிட்டனைச் சேர்ந்த இயக்குநரும் தயாரிப்பாளருமான ரோமன் பொலான்ஸ்கி இயக்கித் தயாரித்து வெளியிட்ட படம் இது. போர் - நாடக வகைத் திரைப்படமான இதில் முதன்மைப் பாத்திரத்தில் நடித்திருக்கிறார் ஏட்ரியன் புரோடி. இந்தத் திரைப்படம் மூலம் அவருக்குச் சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது கிடைத்தது. மாத்திரமன்றி இந்தப் படத்துக்காக சிறந்த இயக்குநருக்கான ஒஸ்கார் விருதையும் ரோமன் போலான்ஸ்கி பெற்றார். இதைவிடத் தங்கப்பனை விருதும் இந்தப் படத்துக்குக் கிடைத்தது. இரண்டாம் உலகப்போரால் ஐரோப்பாவில் நடந்த பேரழிவுகள் - இழப்புகள் - பாதிப்புகள் குறித்துப் பேசுகின்ற படம் இது.

விலாடிஸ்லா ஸ்பில்மேன் என்ற உண்மையான பியானோ இசைக்கலைஞன் 1954ல் எழுதிய சுயசரிதை நூலிலிருந்து உருவாக்கப்பட்டது.

**கதை**


புகழ்மிக்க பியானோ இசைக்கலைஞன் விலாடிஸ்லா ஸ்பில்மேனின் பியானோ இசை நிகழ்ச்சி வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிக்கிறது. ஒலிப்பதிவு நடந்துகொண்டிருக்கும்போது வானொலித் தளம் குண்டு வீச்சுக்கு இலக்காகின்றது. விலாடிஸ்லா அதிலிருந்து தப்பிவிடுகிறார். போலந்து நகருக்குள் ஜேர்மான் படைகள் இறங்கிவிட்டன. 1939களில் வானொலியில் தனது இசைநிகழ்ச்சி ஒலிபரப்பாவது என்பது ஓர் இசைக் கலைஞனின் புகழ்மிக்கநிலை. அன்று மாலையே வீடு திரும்பியதும், அந்த மகிழ்ச்சியை குடும்பத்தினருடன் கொண்டாடுகிறார் அந்தக் கலைஞன். அவரது மனதில் வானொலி நிலைய வெடிவிபத்து உறைந்துள்ளது.

பிரான்ஸும் பிரிட்டனும் ஜேர்மனி மீது போர்த்தொடுக்கப் போவதாக அறிவித்துள்ள செய்தி வருகிறது. இதைக் கேட்டதும் உலகப் போர் எனும் மிகப் பெரிய ஆபத்து வளையத்துக்குள் தாங்கள் சிக்கிக் கொண்டதை உணர்க்கிறார்கள் அவரது குடும்பத்தினர். அதைத் தொடர்ந்து அந்த நகரின் மக்கள் நாசிக்களின் வதைமுகாமுக்கு கூட்டம் கூட்டமாகத் தொடர் வண்டியில் ஏற்றி அனுப்பப்படுகிறார்கள். பலர் வீதிகளிலேயே கொல்லப்படுகிறார்கள். அங்கேயே பிணங்களைக் குவித்துப் போட்டு எரிக்கிறார்கள். குடும்பத்தினரோடும் சக இசைக் கலைஞர்களோடும் சேராமல் அவர்களைத் தவறவிடுவதோடு தனித்தும் விடப்படுகிறார் விலாடிஸ்லா. இதனால் யூதரல்லாத சில நண்பர்கள் மூலம் சில காலம் சில இடங்களில் தப்பி வாழ்கிறார். இராணுவத்தினரின் நெருக்கடிகளிலிருந்து மறைந்து வாழ்கிறார். நிம்மதி குலைந்த அந்த வாழ்க்கையில் மௌனமும் வலியும், தனிமையும், மனச்சோர்வும், சோகமும் ஏமாற்றமும், அச்சமும் நிறைந்து கிடக்கின்றன. 1939ஆம் ஆண்டில் தொடங்கிய அந்தப் போர் 1945ஆம் ஆண்டு முடிவுக்கு வரும்வரை விலாடிஸ்லா தனிமையில் அங்குதான் வசிக்கிறார். நாசிப் படையினரால் யூத மக்கள் முற்றிலுமாக வெளியேற்றப்பட்ட நிலையில் கட்டடங்கள் எல்லாம் பீரங்கிகளால் தாக்கப்பட்ட அந்த நகரமே எரிந்து கிடக்கிறது.

**காட்சி அமைப்புகள்**

போருக்குள் சிக்கித் தப்பியிருந்தாலும் அனுபவித்த கொடுமைகள் ஏராளம். போரில் சிக்கிக்கொண்ட ஒரு மனிதனின் எதிர்கொள்ளும் நாட்கள் அடுத்தது என்ன என்ற திகிலோடு கூடிய அச்சத்தோடு தான் இப்படத்தின் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இசைக்கலைஞன் விலாடிஸ்லா ஸ்பில்மென் குடும்பத்தினர் வீட்டைவிட்டு வெளியேற்றப் பட்டு வேறொரு இடத்தில் மாடியில் தங்கவைக்கப்பட்டிருப்பார்கள். அப்போது அங்கு இராணுவம் நுழைந்து, சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் ஒரு முதியவரை அப்படியே தூக்கிவந்து மேலிருந்து கீழே போடுவார்கள். மீதியுள்ளவர்களை கீழே வரவழைத்து ஓடவிட்டுச் சுட்டுக் கொல்வார்கள். வார்ஸா நகரின் யூத மக்களை ஆடுமாடுகளைப்போல் தொடருந்து நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படும்போது அதில் ஒரு பெண்மணி தனக்குக் கிடைத்த கஞ்சியைக் கொண்டு சென்று கொண்டிருக்க, எங்கிருந்தோ வேகமாக ஓடிவந்த ஒரு முதியவர் அதைத் தட்டிவிட்டு, கஞ்சி கீழே கொட்டியவுடன் தரையில் விழுந்து அதை நக்கி உண்ணுவார். மோசமான இந்த நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்றால் அங்குள்ள மக்கள் எவ்வளவு நாட்களாக சாப்பிடாமல் இருந்திருக்கவேண்டும் என்ற கொடுமையை உணர்த்தும் தருணம் அது.

ஒருமுறை இசைக்கலைஞன் விலாடிஸ்லா கட்டட வேலை செய்ய நிந்திக்கப்படுவான். அப்போது முதுகில் செங்கற்களை சுமந்து செல்வான். கட்டிமுடிக்கப்படாத கட்டடத்தின் வெளிப்புற படிக்கட்டு வழியாக அவன் செங்கல் சுமந்து செல்லும்போது வானில் போர்விமானங்கள் வட்டமிடுவதைச் சற்றே அண்ணாந்து பார்ப்பான். அப்போது அங்கிருந்து குண்டுகள் மழையாகப் பொழியப்பட அதனைக் கண்டு அலறித் தடுமாறுவான். இதனால் செங்கற்கள் கீழே விழுந்துவிடும். இதனைக் கவனித்துக் கொண்டிருக்






கும் ஜேர்மனிய அதிகாரி இவனை கீழே வரச்சொல்லி தனது சப்பாத்துக் கால் களால் மிதித் துச் சவுக்கால் கடுமையாக அடிப்பார்.

இந்தப் படத்தின் இறுதிக்கு முன்னுள்ள காட்சிகள் மிக மிக முக்கியமானவை. அழகிய இசைக்கலைஞன் தாடியோடு வாடிப்போயிருப்பான். 1944 ஓகஸ்ட் மாதம் அவன் தங்கியிருந்த வீடு தாக்கப்படுகிறது. பீரங்கி குண்டுகளை பாய்ச்சுகிறது. பொஸ்பரஸ் வாயுவை வீசித் தீவைக்கிறார்கள். அப்படியும் இப்படியுமாக ஓடி தீயிலிருந்து தப்பித்து, பல மாடிகள் ஏறி சிதறிய கூரைக்குத் தாவி அங்கிருந்து தொங்குவான். வீதியிலிருந்து பார்த்த சிப்பாய்கள் துப்பாக்கியால் சுடுவார்கள். அங்கிருந்து வேறொரு கட்டடத்தில் குதித்து அங்கிருந்து தப்பித்துச் செல்வான். வேறொரு ஆளில்லாத இடிபாடுகள் நிறைந்த வீட்டில் சென்று மறைந்துகொள்வான். அங்கிருந்து இன்னொரு வீடு இப்படியாக நகர்ந்து நகர்ந்து ஒரு மருத்துவமனைக் கட்டிடத்தில் சிலகாலம் தங்கியிருப்பான். அங்கும் ராணுவம் குண்டுகளை வீச அவன் பின்பக்கமாக ஓடி ஒரு மதில்மீது ஏறி கீழே குதித்துத் தப்பிப்பான்.

குதித்த இடத்திலிருந்து நிமிர்ந்து எதிரே கவனிப்பான். அவனுக்கு எதிரே மிகப்பெரிய நகரமே இறந்துகிடப்பது தெரியும். அதாவது மாபெரும் கட்டடங்கள் எல்லாம் தீக்கிரையாகி இருக்கும். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மனித வாசமே இருக்காது. எங்கு நோக்கினும் ஆளரவமற்ற பீரங்கிக்குண்டு தாக்குதலில் இடிந்த நிலையில் தீக்கிரையான கட்டிடங்கள்.

ஒரு காலத்தில் நீண்ட சாலைகளில் டிராம் வண்டி செல்லவும் மரங்களில் வண்ணமலர்கள் பூத்துக்குலுங்கும் அழகுமிகுந்த நகராகவும் இருந்த வார்ஸா, இன்று அலங்கோலமாகி கிடக்கிறது. அவன் நடந்து சென்று ஒரு கட்டடத்தில் சாப்பிட அல்லது தாகத்தைத் தணிக்க ஏதாவது கிடைக்குமா எனத் தேடுவான். சிறிய தண்ணீர்க் கலன் ஒன்று கிடைக்க, அதை எடுத்துவந்து சுத்தியாலால் உடைப்பான். ஓட்டையானதும் அது கைதவறி கீழே விழுந்துவிடும். நீர் தரையில் சிந்த கலன் உருண்டோடும். அங்கு அந்த நேரத்தில் வந்து நிற்கும் இராணுவ அதிகாரி இவனை வைத்தகண் வாங்காமல் பார்ப்பார். இவரை உற்றுக் கவனித்தபடி நிற்பார். இவன் அவரை அதிர்ச்சியோடு பார்க்க அவர் இவனிடம் பேசுவார். 'நீங்க புகழ்பெற்ற பியானிஸ்ட்தானே. எனக்காக ஒரு பாடலை இசைக்கமுடியுமா?' எனக் கேட்பார். (இந்த ஜேர்மானிய இராணுவ அதிகாரியின் பெயர் வில்ம் ஹோசன்ஃபீல்ட். போர் முடிவில் இவர் ரஷ்ய அரசால் சிறைவைக்கப்பட்டவர்)

தண்ணீர்கூட அருந்தமுடியாத தாகம் தணியாத நிலையில் எக்கச்சக்க மனவலியோடு அவன் அவர் மனம்விரும்பும் இசையை தனது கரங்களால் மீட்டுவான். இதில் மகிழ்ந்த அந்த இராணுவ அதிகாரி அவனுக்குத் தேவையான உணவை வழங்குவார். அவன் பிடிபடாமலும் சுட்டுக்கொல்லாமலும் இருக்க தான் அணிந்திருந்த மேலாடையை அவனுக்கு வழங்கிச் செல்வார்.

ஓரிரு நாள்களில் ஜேர்மனிய இராணுவத்தை வெல்கிறது ரஷ்ய இராணுவம். இவன் அங்கிருந்து வெளியேறும்போது ரஷ்ய ராணுவம் இவனைச் சுட எத்தனிக்கும். இவன் இந்த மேலாடை என்னுடையதல்ல, நான் ஜெர்மானியனல்லன் என்பான். போர் முடிவுக்கு வந்தபிறகு சிலகாலம் கடந்து வார்ஸா மீட்டுருவாக்கத்தில் உயிர்பெறத் தொடங்கும். அதே வானொலி நிலைய அரங்கத்தில் இசைநிகழ்ச்சி அரங்கேறும்.

## முள்ளங்கி வறை

அன்றாட உணவில் ஏதாவதொரு வறை வகையைச் சேர்த்துக்கொள்வது உணவுண்பதிலிருக்கின்ற நாட்டத்தை அதிகப்படுத்தும். பொரித்துண்ணும் உணவுப் பண்டங்களிலும் பார்க்க வறுத்துண்ணும் உணவுப் பொருள்களில் எண்ணை உள்ளெடுப்புக் குறைவாக இருக்கும் என்பது பரவலான கருத்து. அத்துடன் இலை வகைகளை வறுத்துண்ணும்போது அவற்றிலிருந்து அத்தனை போசாக்குகளும் உடலுக்கு வலுச்சேர்க்கும். இலை வகைகள் மாத்திரமல்ல வறை எனும் வரையறைக்குள் நாம் முள்ளங்கிக் கிழங்கையும் சேர்த்துக்கொள்ள முடியும். முள்ளங்கியை எம்மில் பலர் அதிகம் உணவுடன் சேர்த்துக் கொள்வதில்லை. ஒரு சிலர் முள்ளங்கியில் பாற் கறி வைத்து உண்கின்றனர். பல நோய்களுக்குப் பரிகாரமாக ஆயர்வேத மருத்துவர்கள் முள்ளங்கியை முன்வைக்கிறார்கள். அந்த வகையில் முள்ளங்கியில் வறை தயாரிப்பது எவ்வாறு என்று இம்முறை பார்ப்போம்.

**என்னென்ன தேவை...?**

முள்ளங்கி 250 கிராம், வெங்காயம் 50கிராம், செத்தல் மிளகாய் 5, பெருஞ்சீரகம் ஒரு கரண்டி, உள்ளி - 5பல்லு, தேங்காய்த் துருவல் ஒரு கப், உப்பு, மஞ்சள் தேவையான அளவு, மிளகாய்த் தூள் 2 கரண்டியளவு. கறிவேப்பிலை சிறிதளவு.

**எப்படிச் செய்வது...?**

முள்ளங்கிக் கிழங்கை நன்கு சுத்தப்படுத்திய பின்னர் கரட் துருவுகின்ற தட்டில் துருவலாக்கி எடுத்துக் கொள்ளுங்கள். அந்தத் துருவலுடன் உப்பையும் மஞ்சள் தூளையும் சேர்த்து நன்கு பிரட்டிக் கொள்ளுங்கள். சட்டி ஒன்றை அடுப்பில் வைத்து, அதில் சிறிது மரக்கறி எண்ணையை இட்டு, வெங்காயம், உள்ளி, பெருஞ்சீரகம், செத்தல் மிளகாய், கறிவேப்பிலை ஆகியவற்றையிட்டு வதக்கிக்கொள்ளுங்கள். பிரட்டி வைத்துள்ள முள்ளங்கித் துருவல் கலவையை இதனுடன் சேர்த்து வறுத்துக் கொள்ளுங்கள். முள்ளங்கி வெந்து வர தேங்காய்ப்பூச் சேர்த்து வறுங்கள். வறுவலாகியதும் இறக்குங்கள் முள்ளங்கி வறை தயார்!






## வெங்காயத்தை நிராகரித்த 'பேஸ்புக்'

கொரோனாப் பெருந்தொற்றின் வீரியம் அமெரிக்க - ஐரோப்பிய நாடுகளில் அதிகமாகவுள்ளதால் அங்கெல்லாம் மக்கள் முடங்கிக் கிடக்கிறார்கள். சந்தைகள் - கடைகளில் அவர்கள் ஒன்று கூடுவதில்லை. பொதுவெளியில் உலாவுவதில்லை. இதனால் அந்த நாடுகளில் எல்லாம் வர்த்தகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், பொருள் கொள்வனவுகள் அனைத்துமே இணையவழிக்கு மாற்றலாகி வருகின்றன. கல்விச் செயற்பாடுகள் உட்பட இவையனைத்தும் இணையத்தின் வசப்பட்டிருக்க முகநூலில் இதையொட்டிய சுவார சியம் ஒன்று நடந்துள்ளது.

வெங்காயம் கவர்ச்சியான உடல் உறுப்பைப்போல் உள்ளது என்று கூறி வெங்காயத்துக்கான விளம்பரப்படுத்தலை நிராகரித்துள்ளது முகநூல்.

அதாவது இந்தக் கொரோனா முடக்கத்துக்குள் கனடாவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஒரு வகை வெங்காயத்துக்கான விதைகள் குறித்து முகநூலில் விளம்பரப்படுத்த முயன்றுள்ளது. அப்போது, அந்த வெங்காயத்தின் விதைகள் குறித்த விளம்பரம் 'ஆபாசமாக' உள்ளது என்று கூறி அதை முகநூல் செயற்படுத்தியுள்ள தானியங்கி மென்பொருள் நிராகரித்துள்ளது.

அந்த விளம்பரம் நிராகரிக்கப்பட்டமைக்கு அந்த வெங்காயத்தின் 'வட்டமான வடிவத்தை' அந்தத் தானியங்கி தொழில்நுட்பம் மார்பகம் அல்லது பின்பகுதி என எண்ணியதே காரணம் என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. பாலியல் ரீதியாக ஒரு தயாரிப்பையோ அல்லது சேவையையோ விளம்பரப்படுத்தக் கூடாது' என்ற நோக்கில் முகநூலில் செயற்படுத்திய தானியங்கி தொழில்நுட்பத்தின் வேலைதான் இதுவாம்.

## இப்படியும்

1

நீ அவளைக்கண்ட மறுகணமே அதிரச குவளையில்
- விழுந்த எறும்பானாய்.
வேறு யாரும் அடைய முடியா புதையலை
- கண்டு கொண்டாய்.
எப்போதும் உன்னருகில் அவள் இருக்கவே விளைந்தாய்
சொற்களால் சொல்லி முடிவதில்லை உனது காதல் என்றும்
*அள்ளி தீர்வதில்லை இந்த நேசக்கடல் என்றும்
- கண்டடைந்தாய்*
இப்போது உன் மனது உன்னிடமில்லை
இந்த இசையில் கரைவதை தவிர வேறு வழியுமில்லை

2

நமக்கிடையே இந்த இடைவெளியை. நிரம்பியிருக்கும்
- காற்றோடு பேசு
... சொல் என்மீதான காதலை...
இந்த காற்றின் மறுநுனியில் நீயிருக்கிறாய் என்பது
- எவ்வளவு உண்மையோ
அவ்வளவு உண்மை நீ என்னை நினைத்திருப்பாய் என்பதும்... .
ம்ம் நினைவுகளால் தழுவி பெருமூச்செறிந்து... பிரிவின்
- நெருப்பில் எரிகிறேன்
அன்பேஆனாலும் நம் பிக்கையுடன் இருக்கிறேன் ..
காதலை காலம் பிரிப்பதில்லை.. அப்படி நேர்ந்தால்
அதை வரலாற்றில் எழுதி விடுகிறது ..

3

பொன் சொரியும் இந்த அந்தி மாலையில்.
- காதலில் பூத்திருக்கிறாய்
வானத்தின் செந்நிறத்தை கன்னத்தில் பூ சி சிவக்கிறாய்
உன்னிடம் தேன் கேட்டு வருகிறது வண்டு.
அன்பே பாடு. ஓடி க்களை த்த இப் பூமி உறங்கட்டும்.
காதல் உண்டார் தம் அன்பை எண்ணி களிக்கட்டும்.
வெட்கம் கொண்டு கொஞ்சம் விலகியிருக்கட்டும்
- இவ் இரவு.....

- அஞ்சு

# திரும்பிப் பார்க்க வைத்த ஐ.பி.எல். கைலைட்ஸ்




செப்டெம்பர் மாதம் ஆரம்பித்த ஐ.பி.எல். தொடர் லீக் ஆட்டங்களில் ஒவ்வொரு அணிகளுக்கும் தலா 7 ஆட்டங்கள் நிறைவடைந்து அரைவாசி கட்டத்தினை கடந்து விட்டன. 31 லீக் ஆட்டங்கள் நிறைவடைந்து விட்டன. சில போட்டிகள் பார்வையாளர்களுக்கு திக் திக் நிமிடங்களை காண்பித்து ஹார்ட் அட்ராக் வருமளவுக்கு சுவாரஸ்யமானவையாக இருந்துவிடும். நாடுகளுக்கு இடையிலான வழமையான போட்டிகளை விட ஐ.பி.எல். போட்டிகளுக்கான வரவேற்பு அதிகரிக்க இதுவும் ஒரு காரணம்.

கடந்த வாரம் இடம்பெற்ற சில அதிரடி ஆட்டங்கள் ரசிகர்களின் ஐ.பி.எல். மீதான கவனத்தை வலுவாக ஈர்த்தன..

**● இறுதிப் பந்து விறுவிறு...**

கடந்த 10ஆம் திகதி மாலை இடம்பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் இடையிலான போட்டியில் கொல்கத்தா அணி இறுதிப்பந்தில் இரண்டு இஞ்சியளவு வித்தியாசத்தில் வெற்றி கண்டது. ஆம், தினேஸ் கார்த்திக்கின் அதிரடி ஆட்டத்தினால் 165 ஓட்டங்களை பஞ்சாப் அணிக்கு வெற்றியிலக்காக நிர்ணயித்தது கொல்கத்தா. வலுவான ஆரம்பத்தை பஞ்சாப் அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் வழங்கி இணைப்பாட்டமாக 115 ஓட்டங்களை பகிர்ந்தனர். 18ஆவது பந்துப் பரிமாற்றம் வரையில் கொல்கத்தா வெற்றிபெறும் என்றிருக்க அடுத்தடுத்து இலக்குகள் வீழ்ந்தன. இந்த நிலையில் 7 ஓட்டங்கள் தேவையான இறுதிப்பந்தை அதிரடி வீரர் மெக்ஸ்வெல் எதிர்கொண்டார். எனினும் அவர் எதிர்கொண்ட இறுதிப் பந்தை அதிரடியாக ஆடினார். 6 ஓட்டங்களை பெறும் முனைப்புடன அடிக்கப்பட்டபோதும் எல்லைக் கோட்டிலிருந்து இரண்டு இஞ்சியளவு தூரத்தில் விழுந்தமையால் 4 ஓட்டங்களே கிடைக்கபெற போட்டி கொல்கத்தா பக்கம் சென்றது.

**● ஹீரோவான திவாட்டியா**

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் மிதவேகப் பந்துவீச்சாளர் ரபடாவின் பந்து வீச்சுக்கு அதிரடியாக 5 சிக்சர்களை அடித்து ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றவர்தான் உள்ளூர் வீரர் ராகுல் திவாட்டியா, அதே போலவே கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற சன்ரைசர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் அணி தோல்வியடைந்து விடும் என நினைத்திருக்க 6வது விக்கெட்டுக்காக சேர்ந்த ரியான் பராக் மற்றும் ராகுல் திவாட்டியா இளம்கூட்டணி இறுதி நான்கு ஓவர்களில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை வெற்றி பெற வைத்தது. இந்த ஆட்டத்திலும் 28 பந்துகளில் 2 சிக்சர்கள் 4 பவுண்டரிகள் என அபாரமாக ஆடி இறுதிக்கணம் வரை திக் திக் ஊட்டி ரசிகர்கள் மனதில் 'தலைவன்' திவாட்டியா என்ற பெயருடன் ஹீரோவாகியுள்ளார் திவாட்டியா..

**● மிஸ்டர் 360 தாண்டவம்**

கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற கொல்கத்தா எதிர் பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் இடையிலான போட்டியில் மற்றுமொரு சிறப்பாட்டம் மூலம் ரசிகர்களின் கண்களுக்கு விருந்தளித்துள்ளார். மிஸ்டர் 360 டிகிரி என்று அழைக்கப்படும் அதிரடித் துடுப்பாட்ட வீரர் ஏ.பி.டி.வில்லியர்ஸ். இந்த ஆட்டத்தில் அவர் துடுப்பில் பட்ட சில பந்துகள் மைதானத்தை தாண்டியும் சென்று வீதியால் சென்றுகொண்டிருந்த வாகனங்களையே நிலைகுலையச் செய்தன. அணித் தலைவர் கோலியுடன் சேர்ந்து இது வரையான மொத்த இணைப்பாட்டங்களாக 5000 ஓட்டங்களையும் கடந்தார். முதலில் மந்தமாக ஆரம்பித்து இறுதி22 பந்துகளில் மாத்திரம் 63 ஓட்டங்களை பெற்றார். அடியா அல்லது இடியா என்றளவுக்கு ஒவ்வொரு பந்துகளும் துடுப்பில் இருந்து எல்லைக் கோட்டுக்கு பறந்தன. 33 பந்துகளை எதிர்கொண்ட இவர், 6 சிக்சர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களை குவித்ததோடு ஆட்ட நாயகனாகவும் தேர்வானார்.

**● மீண்டதா சென்னை?**

வழமைக்கு மாறான ஆட்டம், வித்தியாசமான வியூகங்கள், கட்டுக்கோப்பான பந்து வீச்சு மற்றும் டோனியின் சிறந்த திட்டமிடல் என்பன ஒன்று சேர நீண்ட இடைவெளியின் பின்னர் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி சன்ரைசர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. வட்சன், ராயுடு, பிராவோ, ஜடேயா ஆகியோரது சொல்லிக் கொள்ளும்படியான துடுப்பாட்டமும், பிரவோ, தாகூர், சாம் ஹரன், ஜடேயா ஆகியோரது சிறந்த பந்து வீச்சின் காரணமாகவும் வெற்றி சென்னை வசம் சென்றுள்ளது. இந்த வெற்றி மூலம் தமது நிலையை தக்க வைத்துள்ளதுடன், 2010 ஆண்டிலும் தற்போதுள்ள நிலையில் இருந்துதான் கிண்ணம் வெல்லும் நிலைக்கு சென்னை வந்தது என்பதையும் எதிரணிகளுக்கு ஞாபகமூட்டியுள்ளது சென்னையணியின் இந்த வெற்றி..

**● சொன்னதைச் செய்த தமிழன்**

நடந்துகொண்டிருக்கும் ஐ.பி.எல். போட்டிகளில் 'யார்க்கர் நடராஜன்' என்று சொல்லுமளவுக்கு வளர்நது விட்டார், தமிழக உள்ளூர் வீரர் நடராஜன். சென்னை எதிர் ஹைதராபாத் போட்டி நடப்பதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர், அஸ்வின் நடத்திய நேர்காணலில் யாருடைய விக்கெட்டை எடுத்தால் சாதனையாக கருதுவீர்கள் என நடராயனிடம் கேட்ட கேள்விக்கு, தன்னிகரில்லா தலைவன் டோனியின் விக்கெட்டே எனது சாதனை விக்கெட் என நடராஜன் பதிலளித்தார். அந்த நிலையில் நடந்து முடிந்த போட்டியில் டோனியின் விக்கெட்டை வீழ்த்தி சொன்னதை சாதித்து இருக்கிறார் நடராயன். இந்த சீசனில் அதிகளவு யோக்கர் பந்துகளை வீசியவர்கள் பட்டியலில் அனுபவ வீரர்களான பும்ரா, சமி, கமின்ஸ், போல்ட் போன்றவர்களையெல்லாம் பின் தள்ளி 27 யார்க்கர் பந்துகளை வீசி முதலிடத்தில் நடராஜன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**● அதிரடியுடன் மீண்டும் கெயில்**

யுனிவேர்சல் பாஸ் என்று அழைக்கப்படும் மேற்கிந்திய கிரிக்கட் அணி வீரரும், ஐ.பி.எல் இல் பஞ்சாப் அணிக்காக விளையாடுபவருமான கிறிஸ் கெயில் உடல்நலமீன்மையில் இருந்து குணமடைந்து பெங்களூர் அணிக்கு எதிரான 31ஆவது போட்டியில் கலந்து கொண்டதோடு களம் கண்ட முதல் போட்டியிலேயே தனது வழமையான அதிரடியுடன் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அதிரடியாக வான வேடிக்கை போல சிக்சர்களை பறக்க வைத்து 5 சிக்சர்கள் மற்றும் பவுண்டரியுடன் 53 ஓட்டங்களை குவித்தது மட்டுமன்றி அணியின் வெற்றியையும் உறுதிசெய்தார். ■

---

# ஆறாவது திணை

**■ கலியுக பித்தன்**

நெடுங்கதை அத்தியாயம் 13

ராகுல் அறையை விட்டு வெளியேறிச் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த அரசியல்வாதியான வரதராஜன், அவன் வெளியேறியதும் கவிந்தை ஏறிட்டார்.

கவிந்தின் நெற்றியோரங்களில் வியர்வை துளிர்த்திருந்தது. சில துளிகள் வழுக்கி நேர்த்தியாக சவரம் செய்யப்பட்ட கன்னங்கள் வழியே வடிந்து போக அதைப் பதற்றத்தோடு தட்டிவிட்டு வரதராஜனை அச்சத்தோடு நோக்கினான்.

"என்ன பொலிஸ் ஓபீசர், சொன்ன வேலை எல்லாத்தையும் சொதப்பிட்டீங்க போல?"

"அப்டி இல்லை சேர்... சின்ன தவறு நடந்து போச்சு... சரிப்படுத்தீடலாம்..."

"எது சின்னத் தப்பு? நம்மள பத்தின ஆதாரம் அவங்க கிட்ட மாட்டிக்கிச்சே! அது சின்ன தப்பா? இல்லை நம்ம பிடியில இருந்து தப்பி ஒருத்தி போயிருக்காளே அது சின்னத் தப்பா? இதுகள்கூடப் பரவாயில்ல, இப்போ ஒருத்தன் வந்துட்டுப் போனானே, அவன் இந்த விசயத்துக்குள்ள வந்ததா சின்னத் தப்பு? எது சின்ன தப்பு?" கண்களில் கோபம் பொங்கி எழ வரதராஜன் கேட்டார்.

இடி மாதிரி விழுந்த அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளையும் கேட்கக் கவிந்திற்குப் பயம் ஏற தொடங்கிற்று.

"இப்போ வந்துட்டு போனவனை உங்களுக்கு....." கவிந்த் சொல்லி முடிப்பதற்குள் வரதராஜன் குறுக்கிட்டு, "ம்ம்.. தெரியும்..." என்றார்.

தான் அவசரப்பட்டு செய்த வேலையால்தான் ராகுல் இடையில் வந்தான் என்பதை நினைக்கக் கவிந்திற்கு தூக்கிவாரி போட்டது.

"என்ன கவிந்த் எதுவும் பேச மாட்டேங்கிறா?"

"சொறி சேர், நான் பைத்தியக்காரத்தனமா ஏதேதோ செய்ததாலதான் ராகுல் நமக்கு இடைஞ்சலா வந்திருக்கான்" அவமானத்தால் தலைகுனிந்து கொண்டான்.

"ஹா... ஹா..." சத்தமாக சிரித்த வரதராஜனை திகைப்போடு பார்த்துக் கொண்டு நின்றான் கவிந்த்.

● ● ● ● ● ● ●

"நானும் சந்துருவும் இரகசியமா நிறைய கேஸை டீல் பண்ணியிருக்கிறம். அவன் யூனிபோர்ம் போட்டு வேலை பார்ப்பான். நான் யூனிபோர்ம் இல்லாம வேலை பார்த்தன்."

"நாம எந்த இடத்துல கேஸை எடுக்க ப்ளான் பண்றமோ அந்த இடத்துக்கு சந்துரு ரான்ஸ்பராகிப் போவான். அவன் போய் குறிப்பிட்ட காலத்துல எனக்கு தகவல் தர நானும் கிளம்பி அங்க போய் கேஸை சக்ஸஸா முடிப்பம்."

"ஏற்கனவே இப்டி எட்டு முக்கியமான கேஸை முடிச்சிருக்கிறம். இது ஒன்பதாவது....." சிறிய அமைதியைக் கலைத்துச் சொல்லி கொண்டிருக்கும் போதே அழுகை தொண்டையை அடைத்து கொள்ள அமைதியானான் ராகுல்.

"இங்க என்ன கேஸ் விசயமா வந்திருக்கிறீங்க?" ரஸ்விகா அமைதியை கலைத்தாள்.

"வரதராஜன் பெண்ளை வைச்சு இல்லீகல் பிஸ்னஸ் செய்கிறார். அதால நிறைய அப்பாவிக் குடும்பங்களை சேர்ந்த பெண்கள் பாதிக்கப்படுறாங்க. அந்த வரதராஜனோட உண்மையான முகத்தை வெளிச்சத்துக்கு ஆதாரத்தோடு கொண்டு வாறதுக்காகதான் இந்த ப்ளான்"

"ஓம் அண்ணா, அவரும் அப்பிடிதான் சொன்னார். அவருக்கு ஹெல்ப் பண்ணத்தான் நான் நிறைய முயற்சி எடுத்துட்டு இருந்தன். எல்லாம் கைகூடி வாற நேரத்துல..." சொல்லி முடிப்பதற்குள் அழுகை அவளை தடை செய்தது. கதறி அழுத அவளை ரஸ்விகா சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

"சந்துருக்கு என்ன நடந்தது என்று உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" தமிழ்ச்செல்வியை கேட்டான் ராகுல்.

அவள் ஏதோ சொல்ல ஆயத்தமாகும்போது மயங்கி அப்படியே தரையில் சாய ரஸ்விகா அவளை மெதுவாகத் தாங்கிக் கொண்டாள். தமிழ்செல்வி மூச்சுப் பேச்சற்று கண்களை மூடியபடி இருந்தாள்.

ராகுலும் ரஸ்விகாவும் எதுவும் புரியாமல் குழப்பத்தோடு ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றனர். திடீரென ஏதோ நினைத்தவன் தமிழ்ச்செல்வி அருகில் வந்து சுவாசிக்கிறாளா என்பதைப் பார்த்தான். அவன் ஏமாற்றம் நிரம்பிய கண்களோடு ரஸ்விகாவைப் பார்க்க, தமிழ்செல்வி உயிரோடு இல்லை என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

அடுத்து என்ன செய்வதென்று தெரியாது குழம்பிய ராகுல், தனக்கு தெரிந்த மருத்துவருக்குப் போன் செய்து நடந்தவற்றைக் கூறவே, அவரும் உடனடியாக அறைக்கு வருவதாகவும் சொன்னார். ரஸ்விகா, ராகுலின் உதவியுடன் தமிழ்செல்வியை அருகில் இருந்த கட்டிலில் படுக்க வைத்தாள்.

ராகுல் தலையைச் சொறிந்து கொண்டு நடந்த சம்பவங்களை யோசித்தபடியும், இப்போது தமிழ்செல்விக்குத் திடீரென என்ன நடந்தது என்று தெரியவில்லையே என்ற குழப்பத்துடனும் இருந்தான்.

(தொடரும்)



# அகராதி பிடிச்சவன் பதில்கள்

**கே** நிரஞ்சனா, திருகோணமலை

படித்ததில் ரசித்தது ஏதாவது?

**ப** இதோ உங்களுக்காவே! வேலை செய்யும் அலுவலகத்தில் ஒருவர் முதலாளியிடம் போய் ஒரு நாள் ஒய்வு கேட்டார்.

**முதலாளி:** வருடத்தில் மொத்தம் எத்தனை நாட்கள் தெரியுமா?

365 நாள் ஐயா

**முதலாளி:** அதில் மொத்தம் எத்தனை வாரம்?

52 ஐயா

**முதலாளி:** ஒரு வருஷத்தில் எத்தனை சனி, ஞாயிறு வரும்?

104 ஐயா

**முதலாளி:** மொத்தத்தில் 261 நாள் தான் மீதமிருக்கு. சரி நீ ஒரு நாளைக்கு மொத்தம் எத்தனை மணி நேரம் வேலை செய்கிறாய்?

8 மணி நேரம் ஐயா

**முதலாளி:** அடுத்த 16 மணி நேரம் என்ன செய்ற? வீட்லதானே இருக்கிற?

ஆமாம் ஐயா

**முதலாளி:** 16 மணி நேரத்தையும் கூட்டி ஒரு வருஷத்துக்கு பாரு, 175 நாள் நீ வீட்லதானே இருக்கிற? இப்போ சொல்லு மிச்சம் எத்தனை நாள் இருக்கு??

91 நாள் இருக்கு ஐயா

**முதலாளி:** சரி ஒரு நாளைக்கு நீங்க தேநீர் இடைவேளையாக எத்தனை மணி நேரம் எடுப்பீங்க?

30 நிமிடங்கள் ஐயா

**முதலாளி :** இப்போ 30 நிமிஷம் படி ஒரு வருஷத்துக்குப் பாரு

23 நாள் ஐயா

**முதலாளி :** அப்போ மிச்சம்?

78 நாள் ஐயா..

**முதலாளி :** அதில சாப்பாட்டுக்கு 1 நாளைக்கு 1 மணி நேரம். இதன் படி

46 நாள். அப்போ மிச்சம் எத்தனை நாள்?

22 நாள் ஐயா

**முதலாளி:** இதில் உடல் நிலை சரியில்லை என்று எப்படியும் 2 நாள் லீவ் எடுத்துக்குவ. இப்போ எத்தனைநாள்?

20 நாள் ஐயா

**முதலாளி :** இதில் 5 நாள் எப்படியும் தனிப்பட்ட காரணங்களுக்காக என்று சொல்லி ஒய்வு எடுத்திடற. அப்ப இப்ப எத்தனை நாள்?

15 நாள் ஐயா

**முதலாளி:** இதில வருடாந்த ஒய்வு என்று 14 நாள் எடுப்ப. இப்போ எத்தனை நாள்?

1 நாள் ஐயா

**முதலாளி:** ஆக வேலை செய்யிறதே ஒரேயொரு நாள்தான் அன்றைக்கும் ஓய்வு வேணும் என்று கேட்டு வந்திருக்கிறாய்! அப்படித் தானே!

..............!!!!

**கே** ஷ.பானு, காத்தான்குடி

நடிகை குஷ்பு காங்கிரஸ் கட்சியில் இருந்து பாரதீய ஜனதாக் கட்சிக்குத் தாவி விட்டாரே, இவரெல்லாம் கொள்கை வாதியா? இவரையெல்லாம் நம்பி எப்படி மக்கள் வாக்களிப்பார்கள்?

**ப** குஷ்பு திராவிடர் முன்னேற்றக் கழகத்தில் (திமுக) இருந்து காங்கிரஸ் கட்சிக்குத் தாவியபோது மக்கள் என்ன செய்தார்களோ, அதையேதான் இப்போதும் செய் வார்கள். குஷ்பு கொள்கைவாதியா என்பதெல்லாம் தேவையற்ற ஆணியே! வேறு மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு நடிக்க வந்து இங்கு வாழ்க்கையை அமைத்துக்கொண்ட அவருக்கு அரசியலில் ஓர் உயர் பதவி கிடைப்பதே மிகப் பெரிய சாதனைதான். அதை நோக்கித்தான் அவர் ஓடுகிறார். நடிப்பு மூலம் கிடைத்த புகழை அரசியல் மூலதன மாக்கலாம் என்று பார்க்கிறார். கட்சிகளுக்கோ அவரது புகழ் தேவைப்படுகின்றதே தவிர, அவர் தேவையில்லை. அதனால் தான் அவர் ஒன்றுமாறி ஒன்று என்று கட்சி தாவிக்கொண்டே இருக்கிறார். நடிகர்களைப் பயன்படுத்திக்கொள்ள இப்போது கட்சிகளும் நன்கு பழகிக்கொண்டு விட்டன. அதனால் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, கருணாநிதி போன்று சினிமாப் புகழை வைத்துக்கொண்டு ஆட்சியைப் பிடித்துவிடவெல்லாம் முடியாது. அந்த மூவரும் சினிமாவில் இருந்த போதே அரசியலிலும் தீவிரமாக இயங்கி அடிமட்டத்தில் இருந்து உயர்ந்தவர்கள். சினிமாப் புகழ் மட்டும் அவர்களின் வெற்றிக்குக் காரணமல்ல. அவர்களின் புகழ் அவர்களுக்கு உதவியது அவ்வளவுதான். குஷ்புவுக்கு அப்படி எந்த அரசியல் பின்புலமும் இல்லை.

**கே** திருநந்தகுமார், பருத்தித்துறை

20ஆவது திருத்தத்திற்கு ஆட்சியாளர் தரப்புக்குள் இருந்து மட்டுமல்லாமல் பிக்குகளும்கூட எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்களே, இந்த நிலையில் அந்தத் திருத்தம் நிறைவேறுமா?

**ப** அசரமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு ஆட்சியாளர் தரப்புக்குள் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்பது என்னவோ உண்மை தான். ஆனால், அது உண்மையான மக்கள் நலன் சார்ந்த எதிர்ப்பா அல்லது ஆட்சியாளர்களிடம் இருந்து பயனை எதிர்ப்பார்த்துக் காட்டப் படும் எதிர்ப்பா என்பது கேள்விக் குரியது. பயனை எதிர்பார்க்கிறார்கள் என்றால், அது கிடைத்ததும் இந்த எதிர்புகளெல்லாம் பெட்டிப்பாம்பாக அடங்கிவிடும். பிக்குகளின் எதிர்ப்பு விடயத்தில் செல்வாக்குக் குறைந்த அமரபுர மற்றும் ராமஞ்ஞ பீடங்களே பகிரங்கமாக எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்த இரு பீடங்களும் ஏற்கனவே ஒன்றிணைக்கப்பட்டுவிட்டன என்பதால் ஒரு தரப்பு மட்டுமே எதிர்ப்பு. மற்றைய இரு முக்கிய பீடங்களான அஸ்கிரிய மற்றும் மல்வத்தவும் எதிர்க்கின்றன என்று கூறப்பட்டாலும் பகிரங்கமான அறிக்கை எவையும் வெளியாக வில்லை. அப்படியிருக்கும்போது அரசு அழுத்தத்துக்குள்ளாகும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆட்சியாளர்களும் பிக்குகளும் ஒவரில் ஒருவர் தங்கியுள்ளவர்கள் என்பதால் அவர்கள் ஒருவரையொருவர் முற்றிலுமாக எதிர்க்கத் துணிய மாட்டார்கள் எனவே ஒரு இணக்கத்திற்கு அவர்கள் நிச்சயம் வருவார்கள். அப்படிப்பட்டதொரு நிலையில் நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின் போதான சில திருத்தங்களுடன் திருத்தம் நிறைவேறுவதற்கே அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன.

உங்கள் கேள்விகளை
**551 A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
என்கிற தபால் முகவரிக்கு
அல்லது
**shemman.redsoil@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.

# 800 படும்பாடு பெரும்பாடு!

இலங்கைக் கிரிக்கெட் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையான முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் வகையில் தென்னிந்தியத் திரைத்துறையினரால் எடுக்கப்படும் படம் '800'. இந்தப் படத்தில் தமிழகத்தைச் சேர்ந்த திரைப்பட நடிகர் விஜய் சேதுபதி நடிக்கிறார். இந்த படம் தொடர்பாக முத்தையா முரளிதனுக்கு எதிராகவும் அவரது கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கும் விஜய் சேதுபதிக்கு எதிராகவும் ஆதரவாகவும் சமூக வலைத்தளங்களில் கடந்த வராத்திலிருந்தே கருத்து மோதல்கள் களை கட்டிவிட்டன.

இலங்கை கிரிக்கெட் அணி சார்பாக விளையாடிய முத்தையா முரளிதரன், உலக அளவில் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமையை பெற்ற ஒரு தமிழர். 'எனினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர் சிங்கள மொழியில் பேசுகின்றமையும் ஈழப்போராட்டம் தொடர்பில் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் எதிர்க்கும் வகையில் கருத்துகளை வெளியிட்டு வந்தமையும் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியைத் தோற்றுவித்திருந்தது. அத்துடன் ஒரு சில அரசியல் நடவடிக்கைகளின்போது, மஹிந்த ராஜபக்ச தரப்பினருடன் சேர்ந்து முரளிதரன் பயணித்தமையும், ஈழத் தமிழர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. 'நான் முதலில் இலங்கையன்... அதன் பின்னரே தமிழன்' என்று முரளிதரன் கூறியதுகூட சமூக வலைதளங்களில் அதிகம் சிலாகிக்கப்பட்டது போலவே எதிர்ப்பையும் பெற்றது.

இந்த நிலையில்தான் 800 குறித்த வாதப்பிரதிவாதங்கள் - கருத்துமோதல்கள் களை கட்டியுள்ளன. இந்தப் படத்தில் இருந்து விஜய் சேதுபதி விலக வேண்டும் என்று இயக்குநர் பாரதிராஜா, கவிஞர் தாமரை, இயக்குநரும் நடிகருமான சேரன் போன்ற தமிழ் திரைப்பட ஆளுமைகள் பலரும் சமூக ஊடகங்கள் மூலமாக வலியுறுத்தியிருக்கிறார்கள். முரளிதரனை ஒரு இனத் துரோகியெனவும் இவர்கள் வரையறை செய்யத் தயங்கவில்லை.

இந்தப் படம் முழுக்க ஒரு கிரிக்கெட் வீரரின் வாழக்கை சம்பந்தப்பட்ட படமே தவிர இதில் எந்த வித அரசியலும் கிடையாது. தமிழகத்தில் இருந்து தேயிலைத் தோட்ட கூலியாளர்களாக இலங்கைக்கு குடிபெயர்ந்த ஒரு சமூகத்தில் இருந்து வந்த முரளிதரன் எப்படி பல தடைகளைத் தாண்டி உலக அளவில் சிறந்த பந்து வீச்சாளராக உயர்ந்தார் என்பதுதான் இத்திரைப்படத்தின் கதையம்சம் என்று கூறியிருக்கிறது '800' திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான தார் (*Dar*) மோஷன் பிக்சர்ஸ். ஆனாலும் விமர்சனங்கள் குறைந்தபாடில்லை.



முரளிதரனைத் துரோகி என்பவர்களைப் பார்த்து தமிழ் ஆயுத இயக்கங்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டதைவிட, அல்லது சொந்த மக்களையே கொலை செய்ததைவிட, அல்லது துரோகமிழைத்ததைவிட எந்தவிதத்தில் முரளி தரங்கெட்டு நடந்துவிட்டார் என்று கேட்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள். இதற்கு மத்தியிலும் வானொலி ஒன்றுக்கு நேர்காணல் வழங்கிய முரளி நான் முதலில் இலங்கையன் அதன் பின்னரே தமிழன் என்று மீண்டும் உறுதிபடக்கூறியிருக்கிறார். சர்ச்சை இப்போதைக்கு ஓயும்போல் தெரியவில்லை. அது விஜய் சேதுபதி மீது அதிக அழுத்தத்தைக் கொடுக்கும் என்றே தெரிகின்றது. இப்போதே அவர் அமைதி காப்பது கயமைத்தனம் என்கிற விமர்சனங்கள் வரத் தொடங்கிவிட்டன.

# டிரங்குப் பெட்டி

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மவுசு இன்னும் குறையவே இல்லை. இன்னும் பல வெளிநாடுகளில் டிரங்குப் பெட்டிகள் விற்பனை சக்கைப் போடு போடுகிறது.

இங்கிலாந்தைச் சேர்ந்த சொகுசுப்பொருள் தயாரிப்பு நிறுவனமான ஷிவாஸ் ரீகல் என்ற நிறு வனம் 'மேட் ஃபார் ஜென்டில்மேன்' என்ற பெயரில் டிரங்குப் பெட்டியைத் தயாரிக்கிறது. இது ஒரு சொகுசு டிரங்குப் பெட்டி. ஓக் மரத்தில் இந்த டிரங்குப் பெட்டி செய்யப்படுகிறது. பாரம்பரிய வடிவமைப்பை மாற்றாமல் நேர்த்தியான வசதிகளுடன் இந்தப் பெட்டி தயாரிக்கப்படுவதுதான் இதன் சிறப்பு.


இப்போது உள்ள நவீனப் பெட்டிகளில் இருப்பதுபோல இதில் டிரோலி வசதியும் உள்ளது. எனவே கையிலோ தலையிலோ தூக்கி வைத்துக் கொண்டு அலையத் தேவையில்லை. எளிதில் இழுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்துவிட்டுப் பயணத்தில் மூழ்கலாம். இந்தப் பெட்டிக்குள் தண்ணீர், உணவு, துணிகள், கடிகாரம், பாதணிகள் வைக்கக் கச்சிதமாக இடங்கள் உள்ளன. நவீன வசதிகளுடன் பாரம்பரிய முறையிலும் தயாரிக்கப் படும் இந்த டிரங்குப் பெட்டியின் விலை வெறும் **18** ஆயிரத்து **800** அமெரிக்க டொலர் மட்டுமே!

இங்கிலாந்தில் மட்டுமல்ல இத்தாலியில் கையினால் இழைத்துச் செய்யப்பட்ட டிரங்குப் பெட்டிக்கும் வரவேற்பு அமோகமாக உள்ளதாம். குக்சி நிறுவனம் இந்த டிரங்குப் பெட்டியைத் தயாரித்திருக்கிறது. மர டிராயர், நகைகள் வைக்க லினன் துணி டிராயர் என இதில் வசதிகள் உள்ளன. பாதுகாக்கப் பிரத்யேகமான பூட்டு வசதியும் உண்டு. இந்த டிரங்குப் பெட்டியின் விலை **49** ஆயிரத்து **300** அமெரிக்க டொலர்தான்.

இந்த சொகுசு டிரங்குப் பெட்டிகளின் விலை வாயைப் பிளக்க வைத்தாலும்,

காலம் கடந்தும், அசராத அழகுப் பெட்டிகள் இவை!

இப்படியாவது உயிர் வாழ்கிறதே என்பது ஒரு வகையில் மகிழ்ச்சிதான்.



# சம்பந்தர் கடையடிச் சமா...

"கன நாளாய்ப் போச்சுது.. என்னொத்த பெடியளக் கண்டு, ஒருக்காச் சேரன் கடை வரைக்கும் போயிற்று வரட்டே?" சந்திக்குச் சமா வைக்கப் போக முதல் ஓஃபிசலா ஹோம் மினிஸ்ரியில (மனிசிற்ற) அப்புரூவல் எடுத்துப்போட்டு வெளிக்கிடுவம் எண்டு சொல்லப் போனா, அது மனிசி புகையத் தொடங்கிற்றுது. வழமை தானே... ஒருமாரிச் சமாளிச்சுக் கொண்டு வெளிக்கிட்டு வந்தா... இங்க சொல்லி வைச்ச மாதிரி எல்லாரும் வந்து நிக்கி றாங்கள்.

என்னட்டப் புதினம் கேக்கிறதுக்கு அவ்வளவு தண்ணி விடாய் பாருங்கோ அவங்களுக்கு...! உங்களுக்கும் தானே?

"போன கிழமைக்கும், இந்தக் கிழமைக்கும் இடையில கனக்க நடந்துட்டுது பாருங்கோ... எதைச் சொல்லுறது எண்டுதான் தெரியேல்ல... என்ன எண்டாலும் ஒரு பொஃலோஅப் இருக்கத் தானே வேணும்..."

"என்னன்ணை புதுசா சொல்லப் போறாய்? உவங்கள் காங்கிரஸ் காரர் படுறபாட்டைத் தானே?" குறுக்கால கேள்வி கேட்டான் அப்பன்..

"ஓம்.. ஓம்... காங்கிரஸ்காரர்ட கதை இருக் குத்தான்.. ஆனா அதுக்கு முன்னால உங்களுக்குப் புதுசா இன்னுமொரு செய்தி கிடக்குது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிஞ்சாலும் முடிஞ்சுது, எங்கட கட்சியள் ஒவ்வொண்டும் ஆளாளுக்குப் போட்டி போட்டுக்கொண்டு கட்சிக்காரரைப் போட் டுத்தள்ளத் தொடங்கியிருக்கினம் பாருங்கோ...."

"உதென்னன்ணே புதுசே, எங்கட தாமரைக் குளத்துத் தம்பி தனக்கு ஆப்பு வைச்சுப் போடுவான் எண்டு மணியை நிப்பாட்டப்பண்ணினது பழங் கதைதானே?" நக்கலாய்க் கேட்டான் சுப்பன்.

"இல்லையடாப்பா அது பழசுதான் ஆனால் மணியையும் மயூரனையும் மாநகர சபையின் உறுப்புரிமையிலிருந்து நீக்குமாறு கேட்டு தேர்தல்கள் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். இது புதுசு தானே!"

"காங்கிரசுக்குள்ள மணி - கஜேந்திரர்கள் குடுமிப்பிடி போல தமிழரசுக்குள்ள மாவை - சுமோ இழுபறியாலயும் ரெண்டு பேர நிப்பாட்டிக் கிடக்கு. அது தெரியுமே உங்களுக்கு?"

"என்னண்ண, சத்தியமாய்ப் புதுக் கதைதான்... சொல்லண்ண, சொல்லண்ணை..." அவசரப்பட்டான் கந்தன்..

"எலெக்சன் நேரம் மாவை - சுமோவுக்குள்ள கொழுத்திப்போட்டவைக்குப் பின்னால ஒரு பட்டாளமே இருந்துச்சு... அது தெரியும்தானே உங்களுக்கு... அவருக்கொரு பேப்பர்... இவ ருக்கொரு பேப்பர் எண்டு கன்னபிரிச்சு அடிபட்ட நேரத்தில அநியாயமாத் தங்கட நேரத்தை வீணடிச்ச ரெண்டு செம்புகளுக்குத்தான் இப்ப ஆப்பு.... அதுகும் பாருங்கோ சரி சமமாய் இரண்டு பக்கத்தாலும் கடுமையாய் புடுங்குப்பட்ட ஒவ்வொருத்தரைக் கட்சியை விட்டு ஒரு வருசத்துக்குத் தள்ளி வச்சிருக்கினமாம்.

மாவையரை எதிர்த்துக்கொண்டு, சுமந்திரனுக்கு மூஞ்சைப் புத்தகத்தில கொடி பிடிச்சவர் எண்டு சொல்லி வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரனையும், மாவைக்குக் கொடி பிடிக்கிறன் பேர்வழி எண்டு சொல்லிக்கொண்டு கண், மண் தெரியாமல் மூஞ்சைப் புத்தகத்தில உளறிக்கொட்டின க.குணாளனையும் தான் கட்சியை விட்டுத் தூக்கியிருக்கினம்."

"அப்ப அண்ணை தனக்கு மாகாணசபைக்கு ரிக்கற் கிடைக்க வேணும் எண்டுதானே குணாளன் முன்னாள் எம்.பி. சொல்லச் சொல்ல - சொல்லாததையும் செய்தவனாமே? தான் மாகாண சபையில அமைச்சராக தனக்கெண்டு ரெண்டு உறுப்பினர்களையும் கூட்டிக் கொண்டு போறன் எண்டு நிண்ட அந்த "முன்னாள்" பாவமெல்லே?" சுப்பனுக்குக் குசும்பு...

"நீ ஒரு விளக்கம்கெட்டனி! மென் மே கம் - மென் மே கோ என்றுபோட்டு அந்தாள் இவையளையெல்லாம் சும்மா தூக்கிப் போட்டிட்டுப் போயிடும். உனக்குத் தெரியாது."

"இந்தப் பிரச்சினையில் ஒழுங்கு நடவடிக்கைக் குழுத் தலைவரான நீர் என்னைக் கட்சியால நீக்க முடியும் எண்டு ஹரிகரன் கேட்கப் போக சிவஞானத்தார் அந்தப் பதவியே வேண்டாமென்று எழுதிக் குடுத்திருக்கிறாராம். இப்ப கட்சிச் செயலர் முறைப்படி கரிகரனுக்கு கடிதம் குடுத்திருக்கிறாராம்."

"இங்கால, காங்கிரசுக்குள்ள மணியை கேசில இருந்து விடுவிச்சதால - இப்ப மணியின்ற ஆக்களுக்கும் பிரச்சினை - மணிய உள்ளுக்க விட்டா கட்சிக்கையும் பிரச்சினை எண்டதால, இப்ப மணியோட சேர்ந்து நிண்டனீங்கள் எண்டு கன உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு கஜேந்திரன் கடி தம் அனுப்பி இருக்கிறாராம்.

அந்தக் கடிதத்தில "காங்கிரஸ் கட்சியுடன் எங்கட இயக்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை" நீங்கள் மீறியிருக்கிறீங்கள் எண்டு சொல்லப்பட்டிருக்காம்.

அது என்ன ஒப்பந்தம் எண்டு முன்னணிப் பெடியளே குழம்பிப் போயிருக்கிறாங்கள். அப்பிடி ஒண்டு இருந்ததா - இருக்கிறதா தங்கட அறிவுக் கெட்டின வரையில தெரியாதாம்."

சரி, சரி, அதை விடுங்கோ... இங்க நீங்கள் உங்களுக்குள்ள புடுங்குப்பட அங்கால சத்தமில்லாம முன்னாள் ஆயுதக் குழுக்கள் எல்லாம் ஒண்டுக்குள்ள ஒண்டு... ஒற்றுமையாகுவம் எண்டுகூடத் தொடங்கியிருக்கினம் தெரியுமே?

"மன்னார் எம்பி, அடைக்கலம் தேடத் தாடிக்கார அமைச்சரிட்டப் போய் சரணாகதி ஆகிற்றார். மலர் மாளிகை எம்.பியும் தொலைபேசியில தாடியரைக் கூப்பிட்டு "நான் சொல்ல வேண்டியதை நீங்கள் சொல்லிற்றீங்கள்" எண்டு தியாக தீபம் நினைவேந்தல் பற்றி அமைச்சர் சொன்னதுக்கு ஆமாப் போட்டிருக்கிறாராம் எண்டும் ஒரு தகவல்,

என்னதான் நிக்கிற இடம் மாறினாலும், கொண்ட குணம் மாறாதுதானே? எத்தினை நாளைக்குத்தான் நரிகள் எல்லாம் நாட்டுக்குள்ள நிக்கிறது? கூட்டமா ஊளையிடேக்க இதுகளும் தங்கட குணத்தைக் காட்டத்தானே செய்யும்?

இப்ப இன்னுமொரு விசியம் சொல்லுறன் கேளுங்கோ....

மணியை யாழ்ப்பாண நகர முதல்வராக்காம விட மாட்டாங்கள் போல கிடக்கு... 2018இல மணிக்கு மாநாகர சபை எல்லைக்குள்ள வசிக்கிற - வாக்களிக்கிற உரிமையே இல்ல, பிறகெப்படி மாநகர சபை உறுப்பினராக இருக்க முடியும்? எண்டு கேட்டு வழக்குப்போட்ட சட்டத்தரணியே, இனி வழக்கைத் தொடருறதில அர்த்தமில்லை எண்டு கைவாங்கிப்போட்டார். அதால, முன்னணியில ஒரே குழப்பம்... ஏன் இப்ப இப்பிடிச் செய்தவை? மாநகர சபை உறுப்பினரா கூட்டங்களுக்கு வாறதுக்கே விடக்கூடாது எண்டு அழுங்குப் பிடி பிடிச்சவை, இப்ப ஆட்சேபனை இல்லை எண்டது பெருத்த சந்தேகம் பாருங்கோ."

"உதில என்னண்ணை சந்தேகம்? அது அப்ப முதல்வரோட நல்லா இருக்கேக்க முதல்வருக்குக் குடைச்சலா மணி இருக்கக்கூடாது எண்டு கேஸ் போட்டவை, இப்ப முதல்வருக்குக் குடைச்சல் குடுக்க வேணும் எண்டுறதுக்காகவே மணியைக் கொண்டு வருகினம்" ஏதோ பக்கத்தில இருந்து பாத்தமாதிரிக் கதை விட்டான் கந்தன்.எனக்குப் பொத்துக் கொண்டு வந்துது பாருங்கோ ஒரு கோபம்.... "அட மோட்டுப் பயலுகளே... "

"உது ஒண்டும் ஆனோல்ட்டுக்கு அலுப்படிக்கிற வேலை இல்லையடாப்பா.... கஜேந்திரகுமாரை ஒரு கரைகாண வைக்கவேணும் எண்டதுதான் பிளானா இருக்கும்.


ஏற்கனவே கஜேந்திரகுமார் எங்கட தாமரைக் குளத்தடித் தம்பியின்ரை கயித்த விழுங்கி மணியை உண்டு, இல்லை எண்டு பண்ணிக் கொண்டிருக்கேக்க, இப்ப திடீரென்டு சுமந்திரன் கேசை வாபஸ் பண்ணினது காங்கிரசுக்குத்தான் தலையிடி.

உள்ளூராட்சி சபையளின்ர பட்ஜெற்றை தோக்கடிக்கிறதா இல்லையா எண்ட குழப்பம் ஒருபக்கம் ஓடுது... எதிர்த்தால் என்ன, ஆதரித்தால் என்ன மணியின்ர ஆக்களோட சேர்ந்து செய்யுறதா இல்லாட்டி அவங்கள் செய்யுறதுக்கு எதிராச் செய்யுறதா எண்டு மீற்றிங் போட்டு யோசிச்சுக் கொண்டிருக்க,

மறு பக்கத்தால, யாழ்ப்பணம் மாநகர சபையில ஆனோல்டை ஆதரிச்சு, தாங்கள் சொல்லுற சில டீலுக்கு அவரை உடன்பட வைக்கிற பிளான் ஒண்டு மணி தரப்பில ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கு எண்டும் கேள்வி. மணியின்ர ஆக்கள் பார்த்தீபன், தனுஜன், மயூரன் எண்டு கொஞ்சப்பேரை மடக்கி தனக்கு ஆதரவு தேடுற வேலையை ஆனோல்ட் ஏற்கனவே ஆரம்பிச்சுட்டாராம். அண்டகிறவுண்டில ஆப்படிக்கிறது அவருக்கு ஒண்டும் புதுசில்ல தானே?"

வரட்டே...!

- ஆதிரன்




## ஒஸ்காரின் புது அறிவிப்பு!

சிறந்த - தரமான திரைப் படங்களுக்கு விருதளித்து வருகின்ற ஒஸ்கார் அக்கடமியானது கொரோ னாத் தொற்றுக் காரணமாகத் திரையரங்குகளில் திரையிடப்படாத படங்களுக்கும் விருதளிக்கப்படும் என்று அறிவித்துள்ளது. திரைக்கு வந்த படங்களுக்கே விருது வழங்கப்படும் என்று நிபந்தனை விதித்திருந்த நிலையில் இப்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த திரைப்படம் உள்ளிட்ட பொதுப் பிரிவுகளுக்கு, ட்ரைவ் - இன் அரங்குகளில் திரையிட்ட திரைப்படங்களும் தகுதி பெறும் என்கிற புதிய விதியை அது அறி வித்துள்ளது. சில திரைப்படங்கள் ஓடிடி தளங்களில் வெளியாகி வரும் நிலையில் தான் ஒஸ்கர் விருதுக்குத் தகுதி பெற வேண்டுமென்றால் திரைப்படங்கள் திரையரங்குகளில் வெளியாகி ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஓடியிருக்க வேண்டும் என்றிருந்த தனது விதியை இந்த வருடத்துக்கான ஒஸ்கர் விழாவுக்கு மட்டும் தளர்த்தியுள்ளது ஒஸ்கார் அக்கடமி. இதன்படி நேரடியாக டிஜிட்டலில் வெளியான திரைப் படங்களை, அகடமிக்கான பிரத்தியேகத் திரையிடல் அறையில் திரையிட்டு ஒஸ்கருக்குப் போட்டியிடலாம். இது படம் டிஜிட்டலில் வெளியான 60 நாள்களுக்குள் நடக்க வேண் டும். திரையரங்கில் வெளியாகும் படங்களுக்கு இது கட்டாயம் கிடையாது. இதுபற்றிய அதிகாரபூர்வ அறி விப்பு வெளியிடப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 அன்று ஒஸ்கர் விழா நடக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நானே ராஜா...!

● குமரன்

குடிநீர் தொடங்கி உண்ணும் உணவு, சுவாசிக்கும் காற்று என்று எங்கும் எதிலும் கலப்படம் நிறைந்து விட்ட இந்தக் காலத்தில் தான் செய்கின்ற தொழிலில் கலப்படம் என்பது அறவே கூடாது என்கின்ற முனைப்புடன் வளர்ந்துவரும் பசுப் பால் வியாபாரி தான் இன்றைய எமது யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகம் அடையாளம் கண்டிருக்கின்ற சிவலிங்கம் யசிகரன். பட்டப் படிப்பை முடித்திருந்தாலும் உற்சாகத்துடன் பால் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார் அவர்.

'படிக்கிற படிப்புக்கு ஏற்ற வேலைதான் செய்ய வேணும் எண்டு இருந்திருந்தா, நான் இண்டைக்கு யாரோ ஒருத்தன் சொல்லிற சொல்லக் கேட்டுக் கொண்டு அவங்களுக்கு அடிமையாத்தான் வாழ வேண்டி வந்திருக்கும், எனக்குப் பிடிச்ச தொழில், நான் இதைச் செய்தா நல்லா இருக்கும் எனக்கு மட்டுமில்லாமல், வேற பலருக்கும் அது பயனுள்ள மாதிரி இருக்கவேணும் எண்டு நினைச்சுப் பால் வியாபாரத்தை செய்யத் தொடங்கினதால இண்டைக்கு எனக்கு ராஜாவாக நான் இருக்கிறன்..' என்கிறார் யசிகரன்.

கணினி விஞ்ஞானப் பட்டதாரி இன்று பசுப்பால் மற்றும் அது சார் உற்பத்திகள் விற்பனை நிலைய



மொன்றை ஆரம்பித்து ஊர்பேசும் சாதனையாளராக உருவாகியுள்ளார். கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் 20 லீற்றர் வரையில் பாலைக் கொள்வனவு செய்து விற்பனை செய்து வந்தவர், இன்றைக்கு 500லீற்றருக்கும் அதிகமான பாலை கொள்வனவு செய்து விநியோகிக்கும் அளவுக்கு எவ்வாறு வளர்ந்திருக்கிறார் என்பதை அறியும் ஆர்வத்தில் செம்மண் வாயிலாக யசிகரனைத் தொடர்பு கொண்டேன்.

'நான் பிறந்தது புலோலி - புற்றளை, ஆரம்பக் கல்வியை புற்றளை சிவப்பிரகாசா வித்தியாசாலையில் ஆரம்பிச்சன். அப்பா வியாபாரம் செய்ததால எனக்கும் சின்னனிலயே வியாபாரம் செய்ய வேணும் எண்ட விருப்பம் வரத் தொடங்கீட்டு. பள் ளிக்கூடம் போய் வந்தா பிறகு அப்பாவோட போய் அவரோடயே நிக்கிறதால கணக்கு வழக்கு என்றதில விருப்பம் கூட. அதுக்குப் பிறகு ஏ. எல் எடுத்திட்டு இங்கிலீஸ் படிக்கிறதுக்கு யாழ்ப்பாணத்துக்கு வந்தன், அப்பதான் யாழ்ப்பாணம் எண்டா என்ன எண்டு தெரிஞ்சிச்சு. அது மட்டும் கிராம வாழ்க்கை தான். யாழ்ப் பாணம் வந்தாபிறகு வீட்டயும் கொஞ்சம் கஸ்ரம் எண்டதால படிப்பிக்கிறதில கொஞ்சம் விருப்பம் இருந்ததால கணிதம் படிப்பிக்க வெளிக்கிட்டன். நான் படிக்கேக்க மாதம் 150 ரூபாக்குப் படிச்சனான் யாழ்ப்பாணம் வந்தாபிறகு மணித்தியாலத்துக்கு 250 ரூபா வாங்கிக் கொண்டு படிப்பிச்சன். அப்பிடி படிப்பிச்சதில வந்த காசை வச்சுக்கொண்டு எண்ட செலவையும் வீட்டுக்கும் குடுத்துக்கொண்டு வந்தன். ஓரளவுக்கு சமாளிக்கக் கூடியமாதிரி இருந்திச்சு அந்த நேரம்..' என்றவாறு தனது வலி சுமந்த ஆரம்ப காலத்தைச் சொல்லிமுடிக்கிறார்.

'இதற்கிடையில கம்பசும் கிடைச்சிட்டு, யாழ்ப்பாணத்தில முதல் இருந்த ரூம் எழும்ப சொன்ன படியால, நல்லூரடியில ஒரு ரூம் பார்த்து போனேன். நல்லூரடிக்கு போனது தான் நான் இப்ப இருக்கிற வாழ்க்கைக்கு ஆரம்பகட்ட திருப்புமுனையா அமைஞ்சிச்சு.., நான் இருந்த வீட்டுக்கு கிட்ட ஒரு பால்ச்சாலை இருந்திச்சு நான் அங்க போய் அடிக்கடி பால் வாங்கிக் குடிப்பன் அந்த நேரம் அதுக்குப் பொறுப்பா இருந்தவர் நல்லமாதிரி பழகிப் பிரண்ட் ஆகீட்டார் அதே நேரம் பால்ச் சாலைகளில பாலில தண்ணி கலக்கிற விளையாட்டும் தெரிய வந்திச்சு. அப்பிடியே கொஞ்சக்காலம் போக, பொறுப்பா இருந்தவர் மாற புதுசா ஒராள் வந்தார். அவரும் முதல் இருந்த ஆள் மாதிரியே பாலில தண்ணி கலப்பார். அப்ப தான் விளங்கிச்சுது, பாலில தண்ணி கலக்கிறது பால்ச் சாலைகளில எழுதப்படாத சட்டமாக இருக்கிறதெண்டது. என்ன ஆச்சோ தெரியல அவர் தான் இனி வேலைக்க வரமாட்டன் எண்டு பால்ச் சாலைத் திறப்ப என்னட்டத் தந்திட்டு போய்ட்டார். அடுத்தநாள் வழமையா பால் கொடுக்க வாறவை வாங்க



வாறவை எல்லாரும் லைன்ல நிண்டிச்சினம் நானும் என்ன செய்யிறதெண்டு தெரியாம போய் பால்சாலையைத் திறந்து வேலையைத் தொடங்கினன். எனக்கும் பார்ட் ரைம் வேலையா போகும் எண்டு ஒரு மூண்டு மாதம் நடத்தினன். ஆனால் எனக்கு சனத்தை ஏமாத்திறதில விருப்பம் இல்லாததால அத விட்டு விலகீட்டன். அப்பிடி விலகினா பிறகு சிலபேர் ஏற்கனவே இருந்த தொடர்பால வீடுகளுக்குப் பால் கொண்டந்து தரேலுமா எண்டு கேக்க நானும் சரி எண்டு சொல்லித் தொடங்கினன். அப்ப சைக்கிள்ள தான் கொண்டு போய்க் குடுக்க தொடங்கினான். ஆரம்பத்தில வீட்டுக்காரர் எல்லாரும் பேசின வையள், பிறகு அதபத்தி கதைக்கிறதில்ல. இப்படி கொஞ்சம் கொஞ்சமா பால் எடுத்து குடுத்தது மட்டுமில்லா மல், கம்பஸ் படிப்பையும் முடிச்சிட்டன்...' என்று பால் விற்பனைக்கான ஆரம்பநிலையை வெளிக் கொணர்ந்தார்.

'சரி கம்பஸ் படிப்பு முடிஞ்சுது வேலை தேடலாம் எண்டு பார்க்கேக்க தான் வேலையில்லாப் பட்டதாரியளின்ட போராட்டம், உண்ணாவிரதம் எண்டு கனக்க நடந்திச்சு, அதோட நான் படிச்ச படிப்புக்கு ஒண்டில் வெளிநாட்டுக்குப் போக வேணும், இல்லாட்டி வெளிநாட்டுக் காரரின்ட கொம்பனியில வேலை செய்ய வேணும் ஏன் வேற ஒருத்தன்ட வருமானத்துக்காக வேண்டி நான் பாடுபட வேணும், சொந்தமா தொழில தொடங்குவம் எண்டு யோசிச்சுத் தொடங்கினது தான் இப்ப உங்கள் எல்லாருக்கும் என்னை அறிமுகப்படுத்தியிருக்கிற உப்புமடம் சந்தியில தொடங்கின லக்சுமி பாலகம்..' சொல்லும் போதே தான் சொந்தக்காலில் நின்று விட்ட பெருமகிழ்ச்சி அவர் முகத்தில் தெரிகின்றது.

'இந்தத் தொழில்ல இருந்து எங்கட சனத்தின்ட வாழ்வாதாரத்துக்கு உந்துசக்தியா இருப்பம் எண்டு ஆரம்பிச்சன். எனக்குத் துணையா கொழும்புக்கு வேலைக்குப் போன அப்பாவையும் கூப்பிட்டுக் கடையில நிக்கவைச்சன். முதல்ல 20லீற்றர் பால் தான் நாள் ஒன்றுக்கு கொள்வனவு செய்தன், அப்பிடி கொள்வனவு செய்து விக்கேக்க வாங்க வாற ஆக்கள் எப்பிடியண்ணை இவ்வளவு சுவையான பாலை உங்களால மட்டும் குடுக்கமுடியுது எண்டு கேப்பினம்..'

' இரகசியம் ஒண்டுமில்லை, நான் விக்கிற பால் ஊர்மாட்டுப்பால், அப்பிடியெண்டா.. குறைஞ்சளவு மாஸ் மற்றது இயற்கையான புல்லுகள் எண்டு திண்டு வளருற பசுமாடுகளின்ட பால்.. அதவிட மற்றாக்கள் மாதிரி நான் பாலில தண்ணி கலக்காத படியால பால் அதிண்ட உண்மைச் சுவையைத் தருது அவ்வளவு தான் வித்தியாசம்.. பால் கொள்வனவு செய்யிறது கொஞ்சம் கொஞ்சமா கூடிக்கொண்டு வந்தது, அப்பிடியிருக்கேக்க பால் சில வேளை மிஞ்சும் மிஞ்சிற பாலை என்ன செய்யிறது எண்டு தெரியாமப் பன்னீர் செய்ய வெளிக்கிட்டன் ஆரம்பத்தில சரிவரேல்ல பிறகு நானாத் தேடி தேடி படிச்சு இப்ப எங்கடை கடையில் வாங்கிற பன்னீர அடிக்கிறதுக்கு வேற எங்கயும் இல்லை எண்டிறளவுக்க வந்திட்டு, வெளியில விக்கினம் தான் பன்னீர் அதிலயும் முக்கியமா கொழுப்பில்லாத பன்னீர் எண்டு விக்கினம் அதில இருக்கிறது சரிக்கரவாசி கெமிக்கல் தான், அதே போல தான் நெய்யும் வெளியில மாட்டுக் கொழுப்பு, தாவரக் கொழுப்பு எல்லாத்திலயும் செய்யிறத கொண்டந்து அரவாசி விலையில நல்ல நெய் எண்டு விக்கினம் அதெல்லாம் உடம்புக்கு வருத்தத்தை தான் கொண்டு வரும், ஆனால் நாங்கள் கஸ்டப்பட்டு சுத்தமா செய்யிற நெய்யை அப்பிடி அரவாசி விலைக்கு விக்கிறதால சனம் எங்கடைய வாங்குதுகள் இல்லை.. இதால உள்ளூர் உற்பத்தியள் ஊக்குவிக்குப்படாம இருக்கு, மோர், பன்னீர், நெய், எண்டு வித்துக்கொண்டு வந்தனாங்கள் இப்ப பால் சர்பத்தும் விக்கிறம் அதுவும் நல்ல வரவேற்பு.. அதேபோல தான் பருத்தித்துறை எங்கட சொந்த ஊர் எண்டபடியால எங்கட அம்மா, அத்தைமார் சொந்தங்கள் எண்டு சேர்ந்து செய்யிற பருத்துறை வடை, எள்ளுப்பாகு, அல்வா எண்டு கொண்டந்து கடையில வச்சு விக்கிறம்.. ஆரம்பத்தில 20 லீற்றர் பாலில தொடங்கின வியாபாரம் இப்ப ஒரு நாளைக்கு 500லீற்றர்ல வந்து நிக்குது.. அந்தளவுக்கு வியாபாரம் வளர்ச்சியடைஞ்சிச்சு..' என்று பெருமையுடன் சொல்கின்றார்.

'தூர இடங்களில இருந்து கடைக்கு வாற சில பேர் கேக்கிறது.. அண்ணை எங்கட இடங்களில இப்பிடி தரமான பால்உற்பத்தியள வாங்கேலாம கிடக்கு அங்காலையும் கிளையள திறக்கலாம் எண்டு கேப்பினம்.. இருந்தாலும் அதுக்கு பொறுப்பா விடுற ஆள் பாலில தண்ணிய கலந்து லாபம் பார்த்தா பேந்து எண்ட உற்பத்தியளுக்கு இருக்கிற பெயர் இல்லாமல் போயிடும்.. அதால தான் யோசிக்கிறன். எண்டாலும் கிளைகளை உருவாக்கிற ஐடியா இருக்கு எப்பிடியெண்டா.. இந்தியாவில தயாரிக்கப்படுகிற மில்க் கே.டி.எம் மிசின் மூலமா எங்க எல்லாம் கிளையள் ஆரம்பிக்க நினைக்கிறேனோ அங்கெல்லாம் நம்பி நிறுவலாம் தேவையான பாலை சனம் எடுத்துக்கொண்டு காசு அல்லது கார்ட் மூலமா பணம் செலுத்திற வசதியிருக்கு. இந்த மிசின்ல தண்ணிகலக்கிற வேலை செய்யேலாது..' இடையில் சிரித்துக் கொண்டு.. 'ஆனால் இப்ப அந்த நிலமையில நான் இல்ல.. நல்ல நிலைக்கு இன்னும் வந்தாப்பிறகு அத பாத்துக்கொள்ளுவம் எண்டு இருக்கிறன்..' என்று தனது எதிர்கால நகர்வை கண்முன் கொண்டந்து பார்க்கிறார்.

'எங்கட இப்பத்தை பெடியள் கொமிஸன் கிடைக்கிற வேலையள தான் அதிகமா நாடிப் போறாங்கள், அவங்களுக்கு நான் சொல்லுறது, படிக்கிறதுக்கு ஏற்ற வேலை கிடைக்காட்டியோ, அல்லாட்டி நல்லவேலை கிடைக்க வேணும் எண்டு பாக்காம சுயமா ஒரு தொழில் தொடங்கி அதில முன்னேறு வழிய பாருங்கோ அப்பிடி தொடங்கினா இன்னும் பல பேரிண்ட வாழ்வாதாரத்துக்கு உந்துதலா இருக்கலாம், நான் கூட இப்ப 126 பால் உற்பத்தியாளர்களுக்கு அவையின்ட உற்பத்தியை சந்தைப் படுத்த பேருதவியா இருக்கிறன் அப்பிடி நீங்களும் முயற்சி செய்யுங்கோ.. எல்லாம் சாத்தியமா அமையும்..' என்று தன்னை போன்ற இளம் சமுதாயத்துக்கும் அவர் உற்சாக மூட்டுகிறார். ■

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781